சதி அநுசூயா

நாடகம்

O31:2
K7

...வத்திரு தூ. தா. சங்கரதாஸ் சுவாமிகள்

ச தி அ நு சூ யா

நாடகம்

இயற்றியவர் :
தூ. தா. சங்கரதாஸ் சுவாமிகள்

தமிழ் நாடு சங்கீத நாடக சங்கத்தின் உதவியுடன்
வெளியிடப்பட்டது

விலை ரூபாய் 1-25

வெளியீடு :

சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்

மீனாட்சி கலா நிலையம்

27, சீனிவாச பெருமாள் 3-வது தெரு,

இராயப்பேட்டை :: சென்னை-14.

விற்பனையுரிமை :

நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

சென்னை-2

மூவேந்தர் அச்சகம், 37, சீ. பெ. ச. தெரு, சென்னை-14.

முகவுரை

"சதி அநுசூயா" என்னும் பெயரிய இச்சிறந்த பதிவிரதா சரித்திர நூல் தூத்துக்குடி தா. சங்கரதாஸ் சுவாமிகள் என்னும் பெரியாரால் இயற்றப்பெற்றது. இவரை "மறவர் குலத்துதித்த மாணிக்கம்" என்று கூறலாம். இவர் நமது தமிழ் நாட்டில் அவதரிப்பதற்கு முன்னர் நாடக நூல் அநேகம் இருந்திருப்பினும் அவைகளின் மகிமை பெரும்பாலுங் குன்றி, முத்தமிழ் என்பது பெயர்மாத்திரமேயன்றி இயற்றமிழ் ஒன்றே நின்று நிலவி வந்திருக்கிறதென்று பலசில பிரமாணங் களைக் கொண்டு ஊகித்துணரலாம். உதாரணமாக இசைநாடகமிவற்றுக்குரிய இலக்கண நூல்கள் பல பண்டைக்காலத் திருந்திருப்பனவாகச் சங்கநூல் சிலவற்றினுள் ஆங்காங்கு விரவிவரும் உரை நடை களும், ஏக தேசமாய்ச் சான்று கூறிவரும் சூத்திரங் களுமேயன்றி அந்நூல்களில் ஒன்றேனும் இற்றை யாண்டுக் காண்டற்கும் அரிதாயிற்று. சுவாமியவர்கள் காலத்துக்கு முன்னர் 'கூத்து' என்னும் பெயரில் சில கிராமங்களில் மாத்திரம் சில நாடகம் நடந்து வந்திருக்கிற நிகழ்ச்சியை யோசித்துணர்ந்தால் அது நமக்கொரு சொற்பனம் போன்று தோன்றலாம். தற்கால நாகரிகத்தின்படி **டிராமா** என்னும் ஆங்கிலப் பெயரோடு ஜில்லா, தாலூகா, கிராமங்கள் தோறும் இதுபோது நடைபெற்று வருகிற ஆயிரக்கணக்கான சரித்திரங்களுக்கும் ஆசிரியர் யார் என்று ஒரு சிறிது சிந்திப்போமாயின் பெரும்பாலும்: அவர் நமது சுவாமி யவர்கள்தாம் என்ற தீர்மானத்தில் வந்து முடியும். பெண்மக்கள் படித்துணர்தற்கென்று புகழேந்திப்

புலவரால் இயற்றப் பெற்றதென அநேக அம்மானைக் கதைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைப் **பெண்டுகள் கதை** என்று புறக்கணித்து வந்தார் நம்மவரில் பலர். தற்போது அவையனைத்தும் சுவாமிகள் வாக்கான் பெருமையுற்று ஆண் மக்கள் மாட்டும் அறிவூட்டி வருகின்ற பல வேறு சரித்திர வடிவமாய்த் திகழ்கின்ற பெற்றி, மக்களாவார் மறத்தற்குரியதே யன்று. கால வரையறைக் கணக்குப்படி நாடகாசிரியர் பலருள்ளும் இவரே ஒரு முதல்வர் ஆவர். நந்தமிழ் நாட்டின் கண், பண்டைக்காலத்திலிருந்து இற்றைக் கிருபத்தைந் தாண்டுகட்குச் சற்று முன்னர்தொட்டு நூற்றுக்கு ஐந்து பேர் பண்டிதரும் மற்றைத் தொண்ணூற் றைந்துபேர் பாமரருமா யிருந்து வந்தவர்களை இவரது நாடக நூல்கள் அவர்களில் பலர் பண்டிதராமாறு மாற்றிவிட்டன என்று கூறினும் அது பொய்த்திலதென்பது எமது துணிபு. தெற்றெனக்கூறில் ஆங்கில நாட்டுக்கு ஷேக்ஸ்பியரும், தமிழ் நாட்டுக்கு இவருந்தான் நாடகாசிரியரில் மகிமை பெற்றவர்கள் என உபமானித்துங் கூறலாம்: இவர் சங்க நூல் பலவற்றினும் நன்கு பழகியவராயதுபற்றி இவரது வாக்கின் போக்குகள் சொல்நயம் பொருள்நயம் பெற்று மோனை எதுகை முதலியன இவர் தேடி யலையாது அவை தாமாகவே இவரைத் தேடிவந் திடம்பெற்று மிளிர் கின்ற இனிமை மிகவும் வாய்ந்தன வென்பது கூறுமலே அமையும். மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபா சம்பளம் வாங்கிவந்த உயர்தர ராஜபார்ட் ஜி. எஸ். முனிசாமிநாயுடு முதல் பல ஆயிரக்கணக்கான ஆக்டர்கள் இவரது மாணவர்கள் என்பதும் ஈண்டுக் கூறிக்கொள்ளத்தக்க ஒன்றும். இவர் காலஞ் சென்ற தருணத்து,

"சுந்தரராவ் முதலாகத் துலங்கனந்தன் வரைவகுத்துச்
(சொல்லுங்காலை
எந்தநா டகத் தலைவர் நீயின்றி நடனவரங் கேறி நின்றார்
அந்தமார்க் கண்டனுக்கன் றரனளித்த வரமுனக்கீண்
(டருமையாச்சே
சந்தமார் சங்கரதாஸ் சாமிநினை யாங்காணுந் தருண
(மென்றே"

எனத் தமிழ்நாடு இவரது பிரிவாற்றா திரங்கி மனங் கரைந் திருக்கிற தென்றால், இவரது பெருமையை யாமெடுத் தியம்பலெங்ஙனம்? 'சுவாமி' சுவாமி, என்று நமது நாடு இவரைக் கொண்டாடிவந்த மகிமை ஒன்று பற்றி இவரைப் பெரியாரென்றும் இவரது பிறப்பை அவதார மென்றும் பரிமேயமிட்டுக் கூற நேர்ந்ததை உலகம் ஒப்புக்கொள்ளுமென்பதும் ஒரு துணிபு.

இற்றைஞான்றுங்கூட யாரேனும் ஏதேனுமொரு சரித்திரத்தை எழுதி அதில் இவரது பாட்டுக்களில் இரண்டொன்றைத் தலையங்கத்தே சேர்த்து இவரது திருநாமத்தை வைத்து அச்சிட்டுத் தக்க ஊதியம் பெற்றுவருகிற நுட்பமும் இவரது பெருமைக்குப் போதிய சான்றாமென்ப. இவரியற்றிய இதுபோன்ற சரித்திர நூற்களிற் பலவும் அந்தாதி, கோவை, கலம்பகம், வண்ணம், திருப்புகழ், பிரபந்தம் முதலிய சிலவும் நந்தமிழ் மக்களது நாவாகனமேறிப் பரவி வருவனபற்றி இதுவரை அச்சு வாகனமேறா திருக் கின்றனவாயினும் காலங்கருதி இனி விரைவில் அவை அனைத்தும் புத்தகரூபமாய்ப் பரவவேண்டியதும் ஓர் அவசியமாயிற்று. இனி இயற்றமிழ் நீங்கலாக இசை நாடகத் தமிழ், மாந்தர் மாட்டுக் காமத்தை விளைவித்து அவரைத் தீயவழியிற் புகுத்தும் எனச் சங்கநூல் உரை யாசிரியரும் இரண்டொருவர் தமது உரை நடையிற்

புகுத்திவிட்ட மாற்றமே இந்நடத்தமிழினது வீழ்நிலைக்கொரு காரணமென்றுங் கொள்ளலாம். "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்றபடி சங்ககாவியம் முதல் எந்தக் காவியத்தும் அறப்பால், பொருட்பால், காமப்பால் முதலியன கலந்தே முடிவதன்றி அமையாதாகவே இவர் இயற்றமிழை நீக்கி இங்ஙனம் கொள்ளுதல் இழுக்குடைத்தாமென்ப. இத்தகையாரை எல்லா நூலினுஞ்சிறந்த வள்ளுவர் நூலில் காமத்துப்பாலில் "பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி வாலெயிறூறிய நீர்" என்னுந் தொடக்கத்துப்பல செய்யுட்களைக் கொண்டு "திருக்குறள் காமத்தை வருவிக்குங் கருவி" எனப் புறக் கணிப்பாருளரேல் அவரோடு ஒப்பிடுகின்றேமாக.

இந்நூலைப் பெரிதின் முயன்று அரிதின் வெளிப்படுத்தாராகிய தமிழறிவு சான்ற மதுரை மனோன்மணி விலாச அச்சியந்திரசாலைத் தலைவர் திரு. கு. மாயாண்டி பிள்ளையவர்கள் இவரால் ஆக்கப்பெற்றுள்ள மற்றைய நூல்களையும் சமயங்கண்டுழி ஒவ்வொன்றாய் வெளிப்படுத்தி வருமாறு கடவுள் கருணைகூர்ந் தருள் புரிவாராக.

வெண்பா

நாடகந்தான் முத்தமிழும் நன்கு விரவியநூல்
நாடகந்தான் வீடு நவில்முறை நூல்—நாடகந்தா
னேயீதென் றெண்ணுதீர் எந்தமிழீர் சங்கரதாஸ்
வாயீன்ற சொல்நுகர்வீர் வந்து.

இங்ஙனம்

மதுரை
1926

நா. கிருஷ்ணசாமி நாயுடு.
தமிழ் வித்வான்,
மதுரை தமிழ்ச் சங்கம்.

என்னுரை

இன்றைய மக்களின் ரசனைக்குத் தக்கவாறு நாடகங்களை எழுதி வெளியிட்டாலாவது பிரயோசனமுண்டு; பழைய நாடக நூல்களை யார் வாங்கப் போகிறார்கள் என்று சிலர் நினைக்கலாம், பழைமைக்குப். எப்பொழுதும் மதிப்புண்டு என்பதை விஷயம் தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

சிமெண்டும் இரும்பும் நவீனவசதிக்கு இல்லாத காலத்தில் கட்டிய கட்டிடங்கள் இன்னும் உறுதியாய் நின்று நம்மைப்பார்த்து ஏளனம் செய்கின்றன. இந்தக் காலத்தில் கட்டிய வானளாவிய கட்டிடங்கள் ஒரே ஆண்டில் வாயைப் பிளந்து கொண்டு, சிரிக்கின்றன. பார்ப்பதற்கு அழகாகயிருந்தால் மட்டும் போதுமா பயனுடையதாக இருக்க வேண்டாமா?

நாடகம் ஒரு சர்வகலாசாலை என்று கூறிய பெரியார்கள் சுவாமிகளின் நாடகங்களைப் பார்த்துத்தான் அப்படி கூறினார்களோ! என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

தமிழ் நாடகக் கலைக்கும், தமிழ்மொழிக்கும், சிறப்பைத் தேடித்தந்த சுவாமிகளின் நாடகங்களையும், அவரது பாடல்களையும், தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் படித்து, பயன்பெறவேண்டும் என்பதே எமது நோக்கம். அது மட்டுமல்லாமல் தமிழ்மொழி வளம் பெற்று வளரவேண்டும் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதுமா? சங்கரதாஸ் சுவாமிகள் போன்ற பெரியார்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்கு எந்தெந்த வகையில் பாடுபட்டிருக்கிறார்களென்று தெரிந்து கொள்வதற்காகவாவது அவருடைய நாடகங்களையும், பாடல்களையும், படிப்பது அவசியமென எண்ணுகிறோம்.

கருத்தும் தமிழ்ச்சுவையும் நிறைந்தசுவாமிகளின் நாடகங்களை மாணவர்களுக்கு போதிப்பது சிறந்ததென்றே கருதுகிறோம்.

ஏற்கனவே சுவாமிகளின் அபிமன்யு சுந்தரி, சுலோசனசதி ஆகிய இரண்டு நாடகங்களை வெளியிட ஆதரவு நல்கிய தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தார்,

இந்த "சதி அநுசூயா" நாடகத்தையும் வெளியிடுவதற்கு பொருளுதவி செய்து ஊக்குவித்தார்கள், அவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக.

பிழை திருத்தம் செய்துகொடுத்த டி. கே. எஸ். சகோதரர்களில் ஒருவரும், நாடகத்தில் அநுசூயாவாக நடித்து புகழ்பெற்றவருமான மாமா. டி. கெ. முத்துசாமி அவர்களுக்கும் வித்வான் மா. க. காமாட்சி நாதன் அவர்களுக்கும் நமது நன்றி.

9-9-67 தேதியில் நடக்கும் சுவாமிகளின் நூற்றுண்டு விழாவில் இந்த நூலை கவிஞர் எஸ். டி. சுந்தரம் எம். எல். சி. அவர்கள் வெளியிட ஒப்புக் கொண்டார்கள் என்றாலும், விழா வேலைகளின் நடுவில் இந்த நூலை வெளிக்கொண்டுவர முடியுமா என்று அஞ்சினேன்; மூவேந்தர் அச்சக நிர்வாகி திரு, ஜி. டி. முத்து அவர்களும், அவரது சகதொழிலாளிகளும் இரவு பகலாக பாடுபட்டு குறித்த தினத்தில் இந்நூல் வெளிவருவதற்கு உதவி செய்தார்கள் அவர்களுக்கும் எமது நன்றி.

டி. என். சிவதாணு
செயலாளர்
சங்கரதாஸ் சுவாமிகள்
நினைவு மன்றம்

மீனாட்சி கலா நிலையம்
27. சீனிவாசப் பெருமாள்
3-வது தெரு, ராயப்பேட்டை
சென்னை-14
தேதி. 4-9-67

விநாயகர் துதி

அன்புமிகுங் கற்பா ளநுகுயை நாடகத்தை
இன்பமுறப் பாடவெனக்கருளு—மின்புரையுஞ்
செஞ்சடையா னீன்ற திருக்குமரன் கஞ்சமல
ரஞ்சுகரன் செம்பொனடி.

சதி அனுசூயா

களம் : 1 **காட்சி : 1**

இடம் : மலைச்சாரல்

காலம் : காலை

பாத்திரங்கள் : அனுசூயா, தர்மதை

[தாகவிடாய்ப்பட்டு அனுசூயா தண்ணீர் இருக்குமிடந்தேடி பாடிக்கொண்டுவருதல்.]

அனுசூயா : பாட்டு

இராகம் : ஸ்ரீராகம் தாளம் : ஆதி

பல்லவி

தாகவிடாயு மாகுதே தண்ணீர் பருக (தா)
சஞ்சலமு நெஞ்சினிலே
மிஞ்சுதிங்கு கொஞ்சமல்ல (தா)

அநுபல்லவி

யோக சாதனையிலே உஷ்ணமதிகரித்து
ஒன்றிய நிஷ்டை கலைந்து வருந்திட
இன்று விடுத்தது சிந்தையும் நொந்திட (தா)

சரணம்

இந்த மலைமீதெங்கு மில்லை ஜல மாகையால்
எங்குந் திரிந்ததை கண்டுகை மொண்டு
மருந்தி மகிழ்ந்தவ லந்தவிர் கின்றது (தா)

இப்போதிம் மலைவிட்டி றங்கியடி வாரத்தி
லென் துயர் சென்றிட வும்புனல் தங்கிட
மொண்டது கண்டும ருந்துவன் மிஞ்சியே (தா)

ஆ! ஆ! யோக சாதனையினாலே உஷ்ணமதி கரித்து தாகவிடாயுண்டாயிற்றே, ஐந்து வருஷ காலமாக மழையில்லை, மேலும் இது கோடை காலம், மலைச் சுனையாவும் வறண்டன. இனி இம்மலையினடிவாரத்திற்குப் போனால் ஜலம் கிடைக்குமோ கிடையாதோ. அதுவுஞ் சந்தேகந் தான். பசி பொறுக்கினும் பொறுக்கலாம் தாகம் பொறுப்பது சாத்தியமல்லவே.

வானின்றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று.

என்பதால், ஆத்மகோடிகள் ஜீவிப்பதெல்லாம் தண்ணீரின் உதவியாலல்லவா? இதற்கென்ன செய்வது? நல்லது அடிவாரத்திற் போய்ப் பார்ப்போம்.

[போகிறாள்—எதிரில் வந்த நர்மதை அநுசூயாவைக் கண்டு வணங்குதல்.]

நர்மதை : பாட்டு

இராகம் : சங்கராபரணம் தாளம் : ஆதி

பல்லவி

தாயே வந்தனம் நான் தந்தேன்
தாயே வந்தனம்

அநுபல்லவி

மாயமா முலகில் வாழும் பெண்களுக்கு
மகிமை யுண்டாக்கிய வுன்பாதங்களுக்கு (தா)

சரணம்

கற்பே யாபரணம் காரி கைஸ்மரணம்
கணவரே தெய்வ மென்று காட்டுமுன் சரணம் (தா)

அம்மா; நமஸ்கரிக்கிறேன்.

அநு : மங்களமுண்டாகுக; மங்களமுண்டாகுக; பொற்பின் மிகுந்த அற்புத வநிதாமணி! நினது இனிய மொழியும், வணக்க வொடுக்க மரியாதையும், எனக்கு மகிழ்வுண்டாக்கின. நின்னைப் பார்த்தால் மன்மதனம்பு பாயாத தேகத்தை யுடைய—உலகாநுபவத்துக்கு வராத சிறுமியாகக் காணப்படுகிருய். இந்த இளம்பிராயத்தில் தவக் கோலங் கொண்டு வந்த காரணமென்ன ?

தர்க்கப்பாட்டு

இராகம் : மோகனம் தாளம் : ரூபகம்

பல்லவி

(நல்ல) இளம்பி ராயத்திலே நீ
இந்தத் தவக் கோலங்
கொண்டுற்ற தேனே சொல் (இ)

அநுபல்லவி

களங்க மில்லாத சந்திரனுன் முகம்
கண்களை வாரிசம் மேனியைச் சண்பகம்
காணுமேல் நாணமே பூணுமே
காதலைக் கைவிட்டு நீ தவத்துட்பட்டு (இ)

அம்மா; அழகிலும், பருவத்திலும், குணத்திலும் சிறந்த நீ இல்லற தருமத்திற்குட்படாமல், இந்த இளம் பிராயத்திலே தவக்கோலங் கொண்டு வந்த தேதுக்கு?

நர்ம: பாட்டு

(அம்மா) சிறப்பு வாய்ந்திடுமா
சிற்றின்பச் சீருக்குப்
பற்றுள்ள பேருக்குச் (சி)

அநுபல்லவி

பிறப் பிறப்பிலே பெரிய சங்கடம்
பேதை மதியுள்ளார்க் கேது மனத்திடம்
பெண்ணிறாற் புண்ணியம் நண்ணிறாற்
பெற்றுச் செய்வார் தவம்
மற்றுச் செய்தாலவம் (சி)

அம்மா! பிறப்பிலும், இறப்பிலும், பெரிய சங்கடமென்பதுணர்ந்தால், உலகாநுபவ போகத்தில் இச்சையுண்டாகுமா? ஆணாகவிருந்தாலென்ன? பெண்ணாகவிருந்தாலென்ன? இளம்பிராயமாகவிருந்தாலென்ன?

'தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வாராசையுட் பட்டு,

என்பது வேதமொழியன்றோ? தவத்தை யல்லாது மற்ற தான தரும விதிநிஷேத இல்லற வாழ்க்கை யென்னும் உத்தம மார்க்கங்களெல்லாம் முடிவில் பயனற்ற தொழிலாகவே போவதனல், அற்ப சுக மாகிய சிற்றின்பத்தை வெறுத்து பேரின்ப மடைய இந்தத் தவக்கோலங்கொண்டேன். இதில் தோஷமென்ன?

அநு: நான் தோஷமென்று சொல்ல வரவில்லை. தவ மென்பது ஆடவருக்கிவ்விதமென்பதும், பெண் களுக்கிவ்விதமென்பதும் நீ விளங்கிக் கொள் வதற்கேதுவாகிய பருவமில்லாத சிறுமியாகை யால், தவமென்ற சொல்லின் பாகுபாட்டுப் பொருளை உணர்ந்தாயில்லை; தவத்திற்கு மனத் திடம் வேண்டும்; மனத்திடம் புருஷர்களுக்குரியது. பெண்களுக்கியல்பாகவுள்ள நான்கு குணங்களில் அச்சமுமொன்ருகச் சொல்லப்பட்டிருப்பதால், மாதர்களை ஏழைகளென்றும், அவர்களுக்குத் தவ நிலை கடினமாக விதிக்காமல், வேத முதல்வன் எளிதாக விதித்திருக்கிருன். அதன் விபரத்தைச் சொல்லுகிறேன். கவனமாகக் கேள்.

சரணம்

மாதர் மனத்திட மில்லாருண்மை யிது
வாட்டமில் லாமல்நா தன்பணி செய்வது
மாதவம் பேதையர்க் கீதலால்
மற்றதில்லை யென்று
சற்றிலையோ வின்று **(இ)**

வாயுவை மூக்கின் வழியே உள்ளேயிழுத்து ரேசக, பூரகக் கும்பகங்களைச் செய்து வருத்தங்களை யடையாமல், அக்கினி சாட்சியாகத் தங்கள் கை

தொட்ட நாதனுக்குப் பணிவிடை செய்வதே பெண்களுக்குத் தவமென்று சொல்லும் வேதாகம உபநிடத சாஸ்திரங்களை நீ படிக்கவில்லையா என்ன ?

நர்ம : பாட்டு

கற்பு நிலையே தவம் பெண்களுக் கென்று
கற்றதுமுண்டு நான் காரணமுண்டொன்று
காதுகே ளோதுவேன் தீததைக்
கல்யாணம் நன்றன்று
சொல்வேனுன் முன்னின்று (சி)

தாயே! பெண்களுக்குக் கற்பே தவம், கணவனே தெய்வமென்று போதிக்குஞ் சாஸ்திரங்களை கற்றிருக்கிறேன். ஆயினும் ஓர் காரணம் பற்றிக் கல்யாணம் எனக்கு நன்மையைத் தராது, தீமையே விளைவிப்பதால், மணத்தை வெறுத்திருக்கிறேன். வேறில்லை.

அநு : பாட்டு

என்ன காரணம் வெறுத்தாய் கல்யாணத்தை
இங்கு விபரமாக நீயவ் விதத்தை
இப்புவி யொப்பவே செப்புவாய்
இன்னு மேன்தாமதம்
கன்னிசொல் சம்மதம் (இ)

நீ அப்படிக் கல்யாணத்தை வெறுத்த காரணம் யாது? அது உலகம் ஒப்பும் விதமாக வில்லையே! சுருதி யுக்தி ஆதாரமில்லையேனும், அனுபவ முறையில் கண்டிருப்பினும் தீமையை விளைவிப்பது இன்ன காரணமென்று சொல்.

நர்ம: பாட்டு

எத்தனையோ முறை கல்யாண வேற்பாடு
என்றந்தை செய்தாரவ் வேளையெல்லாங்கேடு
ஏற்றது சாற்றவே ஆற்றிலேன்
என்மனம் நோகுது
ஏக்கமுண்டாகுது (அ)

அம்மா! எத்தனையோ முறை என் தந்தை கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தார். அவ்வேளை களிலெல்லாம் விக்கினங்களுண்டாகி மணம் நிறை வேருது போயிற்று. அவ்விபரத்தை நினைக்க என் மனம் நடுங்கி ஏக்கமுண்டாகிறதம்மணி! நானென்னசெய்வேன் ?

அரு: பாட்டு

விபரஞ்சொல்லாமல் வருந்தலாகுமா
வேதனையுமூழ் வினைவிட்டுப் போகுமா
வேதையே ஞதலா லோதுவாய்
விந்தையென் முன்வந்த
சுந்தரியே இந்த (இ)

அம்மா! நீ விபரத்தைச் சொல்லாமல், துக்கங் கொள்வது ஞாயமல்ல, உன் தந்தை உனக்கு மணம் நிறைவேற்ற முயன்றபோதெல்லாம் நேரிட்ட இடையூறென்ன? அவ்விபரத்தை விளக்க மாகச் சொல்.

நர்ம: பாட்டு

இயற்றுங் கல்யாண வேளையெல்லாம் பண்டு
என்குடும்பத்திலொருவர் சாவ துண்டு
ஈங்கிதால் மாங்கல்யம் பூண்கிலேன்

எண்ணிச் செய்வேன் தொண்டு
புண்ணியரைக்கண்டு (சீ)

அம்மா! எனக்குக் கல்யாண முயற்சி செய்யும் போதெல்லாம், எங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவர் இறப்பது வழக்கமாயிற்று. எத்தனை தரம் முயன்றரோ தந்தை அத்தனை பேர்களிறந்தார்கள். ஆதலால், இறப்பதே உலக சுபாவமென்றாலும், என் சுபகாரிய முயற்சியிலிறந்தாரென்று சொல்லும் பழி என் மீதுசுமத்தப்படுவதால், நான் கல்யாணத்தை நீக்கிநின்றால், இப்பழிக்கு ஆளாகமாட்டேனன்றோ? அதனாலேயே கல்யாணத்தை ஆயுள் பரியந்தம் வெறுத்து தவசிரேஷ்டருக்குத் தொண்டு செய்து, கிருதார்த்த மடைய இத்தவக் கோலங் கொண்டு வந்தேனம்மா.

அநு : பாட்டு

இராகம் : தேசிகதோடி. **தாளம் : ஆதி**

பல்லவி

அம்மா நீயே பாக்கியவதி
அற்புத மிகுந்த பெண்களுக்குளே சிலாக்யவதி (அ)

அநுபல்லவி

இம்மாநிலத்தினிலுனக் கிணைசொல்ல யாருமில்லை
என்று மங்கள முண்டாக மிசைத்தேனா சீர்வாதச்சொல்லை
(அ)

சரணம்

இஷ்ட காமியார்த்தமுனக் கிம்மியேனுங்குறையாது
எப்படிச் செய்யவெண்ணினு மப்படிச் செய்வாய் தப்பாது
கஷ்டசுகம் விட்டவரிற் கன்னியுனை யொப்பாரேது
கர்ணவுனக்கு விருப்ப மானவிடஞ் செல்லிப்போது (அ)

அம்மா ! நீயே பாக்கியவதி, குணசீலி, உத்தமி உனக்கு நிகரான ஒரு பெண் மூவுலகிலுங் கிடையாது. உன் மனோபிஷ்டம் நிறைவேறும். நினைத்ததைச் செய்து முடிக்கும் ஆற்றலடைவாய் இனி இஷ்டமான இடத்திற்குச் செல்லுவாய்! ககன சஞ்சாரமுங் கருதில் முடியும். இதோ எனது பூரண ஆசீர்வாதம். போய்வா மங்களமுண்டாகுக;

[அநுசுயா நர்மதையை ஆசீர்வதித்தனுப்புகிருள்]

காட்சி முடிவு

களம் : 1 **காட்சி : 2**

இடம் . மலைச்சாரல்

காலம் : காலை

பாத்திரங்கள் : நர்மதை, கங்கை

[நர்மதை கங்கையை வணங்குகிருள்]

கோடையும் நீடியது மழையைந்து வருடமில்லை
குவலய ஜீவரெல்லாம்
குடிதண்ணீரில்லாது வாடியுயிரழிகிருர்
கொடுமையிது கொடுமையிதுவே
ஓடைகுளம் ஆறுகால் வாய்கள் நீர்பெருக நீ
உயர்வானம் விட்டிறங்கி
ஒருதொடியில் வரவேணுமேமழைகட்கெந்தாயு
முதவுகங்கா தேவியே

[கங்காதேவி தோற்றம்]

கங் : அம்மா! நர்மதா! விசனமுருதே இதோ நான் மகாதேவனின் ஜடாபாரத்தினின்று மிறங்கிப் பூலோகத்தில் வந்து யாவரையும் ரட்சிக்கிறேன்.

[மழைபொழிகிறது]

காட்சி முடிவு

களம் : 1 காட்சி : 3

இடம் : ஆச்ரமம்

காலம் : நண்பகல்

பாத்திரங்கள் : அநுசூயா, அத்திரிமுனிவர், மாண்டவ்யர், நாரதர்

[அத்திரி முனிவரும், மாண்டவ்யரும் நிஷ்டையிலிருக்கிறார்கள்]

[கங்கை பிரவாகமாகி வருவதைக் கண்டு ஆச்சரியத்துடனும், ஆனந்தத்துடனும் அநுசூயா பாடி வருகிறாள்.]

அநு :

இராகம் : அமிர்கல்யாணி தாளம்—ரூபகம்

கண்ணிகள்

வானுலகம் நீங்கிக் கங்கையாளிங்கே வருகின்ற
ளென்ன விந்தை இங்கே
வருகின்ற ளென்ன விந்தை இங்கே
வருகின்ற ளென்ன விந்தை
மரமட்டைகள் மலைமுற்றிலு
முழுகித்தெரி யவு முற்றில (வா)

நானறியே னிந்த வாறு புவியிலோர் நாளும் நடந்ததில்லை
புவியிலோர்
நாளும் நடந்ததில்லை புவியிலோர்
நாளும் நடந்ததில்லை
நதியன்றிது கடலென்றிட
நுரைகொண்டலை யெறிகின்றது (வா)

அண்டமுடைவது போலேமுழங்கி யலையோசைகேட்கிறது
முழங்கி
யலையோசை கேட்கிறது முழங்கி
யலையோசை கேட்கிறது

அவனிச் செயல் வகையற்றதோ
அறலுப்பிர ளயமுற்றதோ (வா)

தொண்டர்கள் பாவந் தொலைக்கவருள் கொண்டு
தோற்றமுன் வந்தாளோ அருள்கொண்டு
தோற்றமுன் வந்தாளோ அருள்கொண்டு
தோற்றமுன் வந்தாளோ

தொடர் பஞ்சமு மகலும்படி
மழையின்றிய நிலைகண்டவள் (வா)

நாதா! இதோ பாருங்கள் நமது ஆச்ரமத்திற்குச் சமீபமாக ஆகாய கங்கை பிரவாகமாக பூலோகம் வருகிறது.

[அத்திரி நிஷ்டை கலைந்து கங்கை பிரவாகமாக வருவதைப் பார்த்து]

அத்திரி: ஆம்; ஆம்; மிகுந்த சந்தோஷம்! மிகுந்த சந்தோஷம்! மாண்டவியரே; தண்டுகமண்டலத்தை யெடுத்துக்கொண்டு என்னோடு வாரும், நாமிருவரும் கங்கா ஸ்நானம் செய்து வருவோம்.

மாண்ட: அப்படியேவருகிறேன்.

[இருவரும்– போகிருர்கள். நாரதர் வருகிருர்.]

நார :

இராகம் : தோடி பாட்டு தாளம்—ருபகம்

பிறவியாகிய துயரினுல் வசு பெரிய பாதக வினைகளால்
அறமு நீதியு நினைகிலாரெவ ரவர்கள் பூமியி லழிவரால்
துறவியாயினு முணர்விலாதவர் சுகசொருபம தடைவரோ
மறலியூர் புகும் வழிசெலாவகை மருவுமானிட ருரியரே

[அநுசூயா நாரதரை எதிர்கொண்டழைக்கிருள்]

அநு : பாட்டு

நாதமே பிரம ருபமாமென நாடி நாடியெந் நாளிலும்
வேதமே துதி யோதி யோதி விளம்புமுண்மை விளங்கவே
போதமே புரி ஞானபோதக புண்ணியவுரு வாகுமும்
பாதமே பணி யேழையேலருள் பாலியு மிது வேளையே

சுவாமி! நமஸ்காரம்.

[வணங்குகிருள்]

நார : மங்கள முண்டாகுக! மங்கள முண்டாகுக;

[ஆசீர்வதிக்கிருர்]

அநு : சுவாமி! தங்கள் திருப்பாத பரிசம்பட எங்கள் சிறுகுடில் என்ன மாதவஞ் செய்ததோ? அறியேன். இவ்வாசனத்திலமருங்கள்.

[நாரதர் அமருகிருர். அநுசூயா அவருக்கு பாத பூஜை செய்கிருள்]

சுவாமி! அடியாளிருக்குமிடம் நாடி எழுந்தருளிய காரணம் யாது?

நார: அம்மா! நான்றான் திரிலோக சஞ்சாரியென்பதை நீ அறிவாயே. இன்று மத்யலோக சஞ்சாரத்தில் இம்மார்க்கம் வர நேரிட்டது. உடனே உங்கள் ஞாபகம் வந்தது. பார்த்துப் போகலாமென வந்தேன். அம்மா! உனது பர்த்தா எங்கே? அவரைக் காணேமே! எங்கு போயிருக்கிறார்.

அநு: சுவாமி! இன்று ஆகாய கங்கை பூமியிலிறங்கி வந்தபடியால், மாண்டவ்யரிஷி மகாநோடு எனது நாயகரும் கங்கா ஸ்நானம் செய்துவரச் சென்றிருக்கிறார்.

நார: அப்படியா? நிரம்ப சந்தோஷம்! நிரம்ப சந்தோஷம்; வேறு ஏதாவது விசேஷமுண்டா?

அநு: சுவாமி; பர்த்தாவின் பணிவிடையேயன்றி எனக்கு வேறு விசேஷமென்ன தெரியும்?

நார: அம்மா! பதிவிரதா! உன்போன்ற பதிவிரதா சிரோன்மணிகள் இருக்கும் இக்காலத்தில் தர்மாதர்மம் தவறி நடக்குமா?

அநு: என்ன சுவாமி இப்படிச் சொல்லுகிறீர்கள்? இக்காலத்தில் தர்மாதர்மம் தவறி நடக்குமா என்றால், அப்படித்தவறி நடக்குங் காலமும் ஒன்று உண்டென்பதல்லவோ வெளிப்படுகிறது?

நார: ஆம்; அப்படித் தர்மாதர்மம் தவறி நடக்குங் காலமும் ஒன்றுண்டு அதுவும், நெடுந்தூரமில்லை. சமீப காலந்தான்.

அநு: அது எந்தக் காலம் விளங்கச் சொல்லுங்கள்?

நார: அம்மா! இக்காலம் இரண்டாம் யுகமாகிய திரேதாவின் அந்தமும், மூன்றும் யுகமாகிய துவாபரத்தின் ஆதியுமாகும். இனி வருவது நான் காம் யுகமாகிய கலியுகம். அக்காலத்தில் தர்மா தர்மங்கள் தட்டுக் கெட்டுத் தடுமாறி, மேல் கீழாகவும்கீழ் மேலாகவும் புரண்டு நடக்கும். அந்தக் கலியுகத்தின் அதர்மாதிகாரத்தை யாரால் சொல்ல முடியும்? அதன் கொடிய பெருமையே பெருமை அம்மா!

அநு: சுவாமி! அப்படித் தர்மாதர்மம் தவறி நடப்ப தென்றால், உலக ரட்சகனுகிய அரசன் கொடுங்கோ லனுகவேண்டும்.

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்(கு)
இறை யென்று வைக்கப்படும்

என்பது நீதி வசனம். ராஜன் முறை தவறி நடந்தபோதுதான் தர்மாதர்மம் தலை தடுமாறும்.

"வேந்தொரு தருவுஞ்சாகை மிகுந்த மந்திரியும் பூமி,
போந்திடுமிலையும் மூலம் பூசுரர்"

என்றதால் அரசனை ஒரு விருட்சமாகவும், மந்திரி களை அவ்விருட்சத்தின் கிளைகளாகவும், பூமி பாகங்களை அம்மரத்தின் இலைகளாகவும், அந் தணர்களையம் மரத்திற்காதார மாகிய வேர்களாக வும், உருவகப்படுத்தியிருப்பது கொண்டு, அம் மரத்தைத் தாங்கும் வேர்களாகிய அந்தணர்கள் எந்தக் காலத்தில் தங்கள் ஆச்சார அனுஷ்டான யாக எக்ய கர்மங்களை ஒழுங்காக நடத்தாது

விடுவார்களோ, அந்தக் காலத்திற்றான், அரசனாகிய மரமழியும்; அப்போதுதான் அவனுங் கொடுங் கோலனாவான். தர்மாதர்மமுந் தலை தடுமாற்றங் கொள்ளும். அது ஏது?

"உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப்பாளர் தங்கொள்கையிற் குன்றார்"

என்றதால், உயிர் போயினும் அந்தணர்கள் தங்கள் சுகர்மத்தை ஒருக்காலத்திலும் விட மாட்டார்களே, அப்படியானால் தர்மாதர்மம் எப்படித் தலைதடுமாறி நடக்கும்?

நார : அம்மா! நீ சொல்லியபடியே பிராமணர் களுடைய அநாச்சாரத்தாலேதான் உலகம் பாழடையும். இப்பொழுதிருக்கும் பிராமணர்களைப் போலக் கலியுகத்திற் பிறக்கும் அந்தணர்களும் ஆச்சார அனுஷ்டானத்தோடு நடந்து வருவார் களென்று நினையாதே.

அநு : அப்படியானால் அக்கலியுகத்தின் செயல்களை யெல்லாம் அடியாளுக்கு விஸ்தரித்துச் சொல் லுங்கள் சுவாமி!

நார : பாட்டு

இராகம் : நாதநாமக்கிரியை **தாளம் : ஆதி**

பல்லவி

நாலாம் யுகக் கலியின் பெருமை அந்த—ஆதிசேஷன்
நாவாலுரைத்திடவு மருமை

அநுபல்லவி

சீல்மானதவ விரதங்கள் கெடுக்கும்
சித்தமயக்கங்கொள்ளத் துக்கத்தைக் கொடுக்கும் (நா)

சரணம்

வேதியரன்னம் விற்றுப் பிழைப்பார்—நீசர்களுக்கு
வீணுயடிமைப்பட்டு முழைப்பார்—ஆசாரமில்லா
ஜாதியீனரை வீட்டு ளழைப்பார்—சாஸ்திரத்துக்குள்
தங்கள் கொள்கையை மெள்ளநுழைப்பார் விதியிதென்று

ஜாலமொழி பேசியநி யாயவழி யோதியமர் தொடுப்பார்
தாரணிதனில்
தாமொருவ ரேதரும நீதிநெறி யாளரென அடுப்பார்
அனுதினஞ்செய்
காலைநடு வேளையோடு மாலைமூன்று காலவிதி விடுப்பார்
கள்ளோடுனுண்டு
காதகம நேகவித மேவியுமூரார்குடியைக் கெடுப்பார்
மிகுதியான
காதலுமேவியே நீசரின்மாத ரோடுறவாடி லீலையுமாடி வருவார்
இந்த நிலைமை
காணுலகோர்கள் கேவலமாக ஏசுவர்பாவ மார்மெனநாண
பேராசை கொண்டு [முறுவார்
சூதுகளாடு வாரதுவேளை தேவியர்தாலி யாயினுமீடு தருவார்
குடும்பச்சாவு
சூசகமான நாளினில்நீரி லேமுழுகாது போசனமுண்ணவருவார்
இம்மட்டோவின்னும்

சொன்னசொல்லை மாற்றிச் சத்தியம் செய்திடுவார்
தொடர் வழக்கிட்டேழையை யிடர்கள் செய்திடுவார்
கன்னக் கோலுமெடுத்துக் களவுஞ் செய்திடுவார்
காமவேச வேசையர்க்கு மாமாத்தொழில் செய்திடுவார்
(நா)

சைவர் வீட்டில் மாமிச மவிப்பார் மிக்கவருந்திச்
சற்சன ரன்ன மின்றித் தவிப்பார் மனமறிந்தும்
பொய்சொல்வார் வீட்டிற் பொன்னைக் குவிப்பார்
[சண்டாளரான
புலையர்ராஜராய் முடி கவிப்பார் காலமுறையாய்

பூமிபயிர் விளையாது வானமழை பொழியாது மேலும்
பொய்சூது வஞ்சம்
பூரண மடையுமிது காரணம்வி லகிடாத தாலும்
கொள்ளைகள் நேரும்
காமியர் மிகுதியாகி யூரிலலை வெறிநாய்கள் போலும்
பெண்களைக் கண்ட
காலமிவர் மாறுமாத ராமென நினைவுருமல் மாலும்
அவர் மீதுற்றுக்
கட்டிய ணைத்துமு கத்தினில் முத்தம
திட்டுநி னைத்தவி தத்தைமு டித்திடு வார்கள்
இணங்காவிட்டால்
வெட்டிவி ழுத்திவ தைத்தவ னிக்குள்ளொ
ளிக்கநி னைத்தொரு கத்தியெ டுத்திடு வார்கள்
பொல்லாத துஷ்ட
மட்டிய ரக்கரு மிப்படி யுற்றவி
தத்தில டுத்திலர் சற்றுதி டுக்கிடு வார்கள்
எனச் சொல்லலாம்
எட்டியு தைத்துயர் கற்பின ரைத்தம
திட்டம திற்குறை பட்டுவதைத்திடு வார்கள்
கொடுங்கோல் மிஞ்சி

ராஜரெல்லோரும் யுத்தந் தொடங்குவார் பண்டை
ராமாயணத்திலுங்கா ணுப்பெருஞ் சண்டை
மாச டைந்திறக்குமா னிடர்தலை மண்டை
மலைபோலக் குவிந்திடும் ரணகளத் தண்டை

(நாலாம்)

அம்மா! கலியுக நிலைமையை நன்கு தெரிந்து கொண்டாயா ?

அநு : சுவாமி! தெரிந்துகொண்டேன்.

நார : அம்மா! நான் ககன சஞ்சாரஞ் செய்ய வேண்டும். போய் வருகிறேன்.

அநு : நல்லது சுவாமி! நமஸ்கரிக்கின்றேன்.

நார : மங்களமுண்டாகுக! மங்களமுண்டாகுக!

[நாரதர் போகிறார்.]

காட்சி முடிவு

களம் 1 **காட்சி 4**

இடம் : ஊரையடுத்த காடு
காலம் : காலை
பாத்திரங்கள் : காவலர்கள், சூர்தாஸ்

[இரண்டு காவலர்கள் திருடனைத் தேடி வருகிறார்கள்.]

1–வது காவலன் : பாட்டு

இராகம்–அபூர்வம் **ஏகதாளம்**

கண்ணிகள்

காணேமெங்கோ கள்ளன் மறைந்தொழிந்திட்டான்
காவலன் தண்டிப்பதாய்க்கடின கட்டளையிட்டான்

2வது காவலன்

மெல்லவதோ பதுங்கவழி பார்க்கிறான்
மேனியைமறைத் துருதெரியாது மிருக்கிறான்

1-வது காவலன்

எங்கேயெங்கே கண்ணுக்குத் தோன்றவில்லையே
இன்றிருள் சூழ்ந்ததனு லெனக்கு நேர்ந்த தொல்லையே

2-வது காவலன்

அதோ அதோ கைத்தடியாலே தட்டுறான்
அங்குள்ள செடிக்குள்ளேநுழைந்து போகக் கிட்டுறான்

1-வது காவலன்: ஆமாடா லே! அந்தக் குத்துச் செடிக் குள்ளே பதுங்கிக்கினு ஒளியப் பார்க்கிறான். போயிப் பிடிச்சுக்கினு ஒதைச்சு இசித்துக்கினு போவோம் வாடாலே வா.

2-வது காவலன்: அடா லே! இந்தா லே!

[எதிரில் தட்டுக்கெட்டுத் தடுமாறிவரும் அந்தகன் சூர்தாசைப் பிடித்தடித்து இம்சிக்கிறார்கள்.]

[காவலர்களின் அடி தாளாது]

சூர்தாஸ்:

பாட்டு

இராகம்: இந்துஸ்தான் தோடி தாளம்: ஆதி

ஏழைப் பிராமணன் நான் கண்ணில்லாதவன்
ஏனடிக்கின்றீ ரையா
எலும்பு முறிந்து உடம்பு வருந்து
தெனக்கிது போது மையா
குற்றமென்ன செய்தேன் கையை முறுக்கிநீர்
குத்துகின்றீரே ளையயா

கோபத்தை விட்டு மனமிரங்கித் தயை
கொண் டுகாப்பாற்று மையா
உஞ்சவிருத்தி யெடுத்துண்ணு மென்னை
உதைத்திட லாமோ வையா
உம்மையல்லாது துணையில்லை யேழைக்
குதவி செய்தாளு மையா

1–வது காவலன் அடே! இவன் ஊருக்குள்ளே பிச்சை வாங்கித் துண்ணும் கண்ணில்லாத குருட்டுப் பாப்பாண்டாலே! ஐயோ பாவந் தெரியாமெ எத்தனை ஒதை ஒதைச்சுப் போட்டோம். கள்ளப் பயல் எங்கேயோ யோடிவிட்டான் இவனை விட்டுவிட்டு அவனைத் தேடிப் போவோம் வாலே.

2–வது காவலன் : அடேலே பாப்பான்! ஓடிப்போலே இங்கே ஏன் திருஞ்சுக்கினுருக்கே? ஊருக்குள்ளே போலே! பிச்சைவாங்கித்துண்ணலாம் போலே! போ!

[காவலர்கள் போகிறார்கள்]

சூர் : (அடிபட்டு வேதனையுடன்) ஐயோ! உடம்பெல்லாம் நோகுதே? தலைவிதி என்ன செய்யலாம்? கண்ணில்லாத எனக்கா கடவுள் இவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கிறார். உரலுக்குள் தலை கொடுத்து உலக்கைக்கு அஞ்சினால் தீருமா? பிறவியெடுத்த போதே கஷ்டமுந் தொடர்ந்து விடுமன்றோ; இதைக் குறித்து வருந்துவதில் என்ன பயன் எங்கேயாவது போவோம்.

[தடிகொண்டு தட்டித்தடுமாறி போகிறார்.]

காட்சி முடிவு

களம் : 2 **காட்சி : 1**

இடம் : கற்பகச்சோலை

காலம் : காலை

பாத்திரங்கள் : பார்வதி, லட்சுமி, சரஸ்வதி, நாரதர்.

[பார்வதி, லட்சுமி, சரஸ்வதி, மூவரும் தம் தம் பெருமைகளைப் பற்றிப் பேசிக் கொள்ளல்]

பார்வ: அடி லட்சுமி! பாரதி! எத்தொழில்களையும் தம் முள் அடக்கிக்கொண்ட முத்தொழில்களுக்குத் தனித்தனி முதல்வர்களாகிய திருமூர்த்திகளை நாம் மூவரும் கணவராக அடைந்தோம்; அந்த மூன்று தொழில்களிலுஞ் சிறந்த தொழிலெது? உங் களுக்குத் தெரியுமா?

சர: ஏன் தெரியாது? சிருஷ்டித் தொழில்தான் சிறந்தது.

லட்சு: அதென்ன அப்படிச்சொல்லுகிருய்? உண்டாக் கிறைற் போதுமா? அதைக் காப்பாற்ற வேண் டாமா? அதனலே திதித்தொழில்தான் சிறந்தது.

பார்வ: உண்டாக்குவதும், அதைக் காப்பாற்றுவதும் பெரிய காரியமா? அதைத் தன்னிடம் ஒடுக்கிக் கொள்ளுதலல்லவா சாமர்த்தியம் ஆகையால் சங்காரத் தொழில்தான் சிறந்தது.

சர: அது எப்படியாகும்? இல்லாததை உண்டாக்கு வது சாமர்த்தியமா? இருப்பதைக் கெடுப்பது சாமர்த்தியமா?

பார்வ: அப்படியில்லை. நீ அருத்தம் விளங்காமல் பேசுகிறாய் இல்லாததை உண்டாக்க யாவராலு முடியாது. இருப்பதுதான் வெளிவரும். ஆனால் அதன் சக்தி குன்றி மறைவாகவிருக்கும். அந்த சக்தியை தோற்றும்படி வெளிப்படுத்துவதுதான் சிருஷ்டியென்பார்கள். ஆலமரத்தின் கிளை இலை பழம் முதலான சக்திகளையெல்லாம் ஆலவித்து அடக்கிக் கொள்ளும். அப்பால் வித்திலிருந்து கிளை இலை பழங்கள் வெளிப்படும். அதுபோல சர்வ சங்கார காலத்தில் என் நாதருக்குள் சகல பிராணிகளும், அண்ட பிண்ட சராசரங்களும் ஒடுங்கும். மீண்டும் அதை வெளிப்படுத்துவது (சரஸ்வதியை சுட்டிக் காட்டி) உன் கணவன் தொழிலாகும். அதனாலே, சிருஷ்டித் தொழிற்கு மூலகாரணம் சங்காரத் தொழிலே. எந்த இடத்திலொடுங்குமோ அந்த இடத்திலிருந்தே மீண்டுந்தோன்றுவதால், எனது நாயகரது சங்காரத்தொழிலே சிறந்ததாகும். அவரும் எனக்கு அர்தாங்கத்தைக் கொடுத்து விட்டபடியால், நானே சிறந்தவளென்பதை வெளிப்படையாகவும் சொல்லுகிறேன். தெரிந்துகொள்ளுங்கள். என்னைப் போலொருத்தி மூவுலகிலுந் தேடிப் பார்க்கினும் அகப்படாள், ஆகையால் பெண்களில் சிறந்தவள் நான்றான்.

சர: அப்படியில்லை,—

தர்க்கப்பாட்டு

இராகம். சங்கராபரணம் **தாளம்-ஆதி**

பல்லவி

நானே சிறந்தவள் இந்த
நாகலோகம் பூவுலகம்
வானுலகந் தேடினும் (நா)

அநுபல்லவி

மானிடருக் கறிவுமென் மேலே ஓங்கி
வளரச் செய்வேன் வித்தையி னாலே இங்கு
ஆனதன்மையி லென்னைப் போலே வேறு
யார்க்குண்டு மகிமை சொல்லுங்காலே (நா)

நாளொருவன்மீது கருணை நோக்கம் வைப்பேனானால், அவன் சகலரும் புகழ்ந்து போற்றும் வித்துவானாகிவிடுவான். ஆகையால் நானே சிறப்புடையவள். வித்தைக்கதிபதி, என்னைப் போல் மேன்மையுடைய பெண் எவளிருக்கிறாள்? ஒருவருமில்லை.

லட்சு : பாட்டு

சாதியிலே தாழ்ந்தவனானாலும் நல்ல
சம்பத்தளித்து ராசனைப் போலும் அவன்
ஓதிய ஏவல் கேட்டுமென் மேலும் ஊரார்
ஊழியஞ் செய்யச் செய்வே னெக்காலும் (நா)

ஒரு ஈன ஜாதியிலே பிறந்தவனாகயிருந்தாலும் சரிதான், நான் தயவு செய்வேனானால், அவன் கிரீடாதிபதியாய்ச் செங்கோலதிகார ராஜ செல்வங்களைப் பெற்று, மேற்குல மானிடரையெல்லாம் தன், பாதசேவை செய்யும் பணிவிடைக்காரராக்கிக் கொண்டு, சகல போகங்களையுமடையு முன்னதனாகி விடுவான். ஆகையால், வித்தையிலென்ன மகிமையிருக்கிறது? எல்லா மகிமையும் பொருளுக்குள்ளேதான் அடங்கியிருக்கிறது. அந்த பொருளுக்கதிபதி நானே. தன்னிமித்தம் எனக்கு மிஞ்சிய சிறப்புடைய பெண் ஒருத்தி திரிலோகங்களிலுமில்லையென்பது நிச்சயம். ஏன் வீண் குதர்க்கம், விட்டுவிடு; நானே சிறந்தவள்.

பார்வ : பாட்டு

வித்தை செல்வ முடையோருங் கண்டு தம்மை
வேதை செய்வாரென்று பயங் கொண்டு போற்றி
நித்தமுமொருவனுக்குத் தொண்டு செய்து
நிற்கச்செய்வே னென்னைப் போலா ருண்டு (நா)

வித்தையிருந்தாலென்ன? செல்வமிருந்தாலென்ன? பலமல்லவோ பிரதானம். படிப்புள்ளவனும், பொருளுள்ளவனும், பலமுள்ளவனைக் கண்டு உதைப்பானென்று பயந்து, அவனுக்குத் தொண்டு வேலை செய்து வருவதை நீங்கள் கண்கூடாகக் கண்டதில்லையோ? நான் மாத்திரம் சற்றனுக்கிரகஞ் செய்வேனுனல், அறுகம்புல் தட்டி அறுபது இடம் விழும் ஒரு அற்பமானவனும், அண்டமிடிந்து விழுந்தாலும், தலையிலே தாங்கும் வலுவுடையவனுகி, கண்டோரையெல்லாம் அஞ்சுவித்துத் தனக்கு ஏவலாளராக்கிக் கொள்வான். 'வலியவருக்கு எப்பொருளுந் தமதன்றோ' என்ற வாசகத்தையேனும் நீங்கள் கேட்டதில்லைபோலும் ஆகையால் வலிக்கதிபதியாகிய சத்தி நானே சிறந்தவளென்று தெரிந்து கொள்ளுங்கள்.

சர : பாட்டு

வல்லமை செல்வமிருந்த தாலே போற்றி
வாழ்த்தி நிற்பாரோவிப்புவி மேலே போதஞ்
சொல்லுவா ரையாருந் தெய்வம் போலே என்றுந்
துதிப்பாரே குருவென்றன் பாலே (நா)

அதிக வல்லமையிருந்தாலென்ன? ஏராளமான செல்வமிருந்தாலென்ன? இவ்வுலக ஜனங்கள் அவர்களைத் தெய்வமாகப் பூசித்து நிற்பார்களோ?

ஞானமுதிர்ச்சி கொண்டுபோதனை செய்பவரைக் குருவாக மதித்து அன்பு கொண்டு தொழுது, அவர் வரை கடவாமல் நடப்பார்களன்றோ? அந்த ஞான வுணர்வைக் கொடுப்பது என் வித்தை மகத்துவந் தானே? ஆதலால் நானே சிறந்தவள்.

லட்சு : பாட்டு

போதமும் பலமு நல னேது உலகில்
பொருளின்றி யொன்றும் நட வாது சொன்னேன்
ஆதலால் செல்வர் சொல்கட வாது மற்றோர்
யாவரும் பணிவார் தவறுது (நா)

வித்தையிருந்தாலும், பலமிருந்தாலும், அவைகளி ஞலே என்ன நலமிருக்கின்றன? பொருளில்லா விடில், உலக போகங்களிலொன்றேனுமனுபவிக்க இயலாது.

'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்'

என்பதை நீங்கள் கேள்விப்பட்டதில்லையோ? ஒரு பாண்டத்திற்குள் நெய்யிருக்குமாஞல், எறும்புகள் உள்ளே புகுந்து அதனைக் கொள்ளுவதற்கியலாத தடைகளேற்பட்டிருப்பினும். அப்பாண்டத்தை விட்டு அப்புறம் போகாமல், அதன் புறத்திலேயே சுற்றிச் சுற்றித் திரிவதுபோல், செல்வமுடையோ ரொருவர் தரித்திரராகியவருக்குக் கொடுக்காத 'கிருபண சிகாமணிகளென்று, தங்களுக்குத் தெரிந் திருப்பினும், ஒரு வேளையில்லாது போனாலும், மற் றொரு வேளை கொஞ்சமாயினுஞ் செல்வத்தை யடையலாமென்னும் ஆசை மேற்கொண்டு திர வியவந்தரை விடாது உடலை நிழல் தொடர்வது

போல், அவர் போகுமிடங்களெங்கும் போய், அவர் தயவைச் சம்பாதிக்கும் பொருட்டு அவர்களேவாத சிறு தொழிலையுந் தாமாகவே செய்து அவர்களின் பணிவிடைக்காரர்களாக நடந்து வருவார்களென்றால், அந்தச் செல்வத்தின் மகிமையை என்னவென்று விஸ்தரித்துச் சொல்வது? இவ்வளவு மேன்மை பெற்ற பொருளுக்கதிபதி நானே. ஆதலால் நானே சிறந்தவள்.

பார்வ : பாட்டு

இச்சையா லொருவனுக்கு வீரம் நான்
ஈந்தா லவன் செய்வானதி காரம் சொன்னேன்
நிச்சயமி தெங்குஞ்சவிஸ் தாரம் இதை
நீங்களறி யீரோ லோகா சாரம் (நா)

இன்னும் நீங்கள் உலக நிலை தெரியாமல் பேசுகிறீர்கள். வீரமுடைய ஒருவனே சகல அதிகாரங்களையும் வகித்து நடத்தவுரியவனாவான். எறும்பு கடை யானைமுதல் அஃறிணைப்பொருளுமறியும். நீங்களறியாதது வியப்பாகத்தானிருக்கிறது. என் மகிமையறிந்ததினாலேயே உலகம் 'சத்திமயம்' என்று தொன்று தொட்டு வழங்கி வருகிறது. இந்தப் பழமொழியையாவது நீங்கள் கேள்விப்பட்டதில்லையோ? ஆகையால் நானே சிறந்தவள்.

[நாரதர் பாடிக்கொண்டு வருகிறார்]

நார : பாட்டு

இராகம்-பியாக் தாளம்-ஆதி

பல்லவி

சரிகமபதநியா மெழுசுர நிலைய
சங்கீத சுகமே பெரிய சுகக் இசை (சரி)

அநுபல்லவி

கரியுரியுடையவன் அடிதொழுதனு தினம்
கதிபெறும் வகையது கருதுவதுவே மனம்
சுரிகுழல் நெடுவிழி மடவரிவைய ரினம்
தோய்மன மடையுமோ சுக மவுனம் (சரி)

செவியுணவுக்குநிக ரவியுணவுமா காது
தேடினுலு முவமை யோர்பொருள்கிடை யாது
குவியும் ஐம்பொறியிசை கொண்டிடில்விரி யாது
குரங்கா மன மொடுங்கும் தா வாது (சரி)

[நாரதர் மூவரையும் பார்த்து வணங்குதல்]

அம்மணிகாள்! நமஸ்கரிக்கிறேன்! நமஸ்கரிக்கிறேன்! நமஸ்கரிக்கிறேன்!

மூவரும்: மங்களமுண்டாகுக! மங்களமுண்டாகுக! மங்களமுண்டாகுக!

நார: அம்மணிகாள்! நீங்கள் மூவரும் ஒருங்கு கூடியதே அபூர்வ சம்பவம்-இக்காட்சியைக் கண்டு புனிதமானேன். ஆயினுந்தாங்கள் ஏதோ ஓர் ஆலோசனையிலிருப்பதாகத் தெரிகிறது. இவ்வேளை சந்தர்ப்பந் தெரியாமல், வந்ததற்காக மன்னிப்பதோடு நானிருக்கும் பட்சத்தில் தங்கள் ஆலோசனைக்குத் தடையேற்படுமானுல், எனக்கு உத்திரவு கொடுங்கள். நான் போய் வருகிறேன்.

[மெல்ல புறப்பட முயல]

பார்வ: இல்லையில்லை நாரதா! போகாதே, போகாதே, நீ இருப்பதினுலே எங்கள் ஆலோசனைக்கு விக்கினமில்லை. நில்லு! நில்லு!

லட்சு: நீதானே எங்கள் வழக்கை மத்தியஸ்தனாக விருந்து தீர்த்துவிடு.

நார: என்னம்மா! சொல்லுகிறீர்கள்? நீங்கள் சொல்லுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே? எங்கள் வழக்கை மத்தியஸ்தனாகவிருந்து தீர்த்துவிடு என்கிறீர்கள்? உங்களுக்கு நேர்ந்த வழக்கு யாது? அதனை முன்பு சொல்லுங்கள்?

சர: நாரதா. நீ திரிலோக சஞ்சாரியானதால், சகல விதங்களையுமறிவாய்; எங்களுடைய வழக்கின் சாராம்சம் பின்பு சம்பாஷணையின் மூலமாகவே தெரிவாய்.

லட்சு: அதெல்லாமிருக்கட்டும், உலகிலுள்ள மானிடர் ஒவ்வொருவருக்கும் முக்கியமாக வேண்டிய தென்ன? அதனை முன்பு ஆலோசித்துச் சொல்?

நார: இது நல்ல வேலையாயிற்றே, நீங்கள் உங்கள் வழக்கைத் தீர்த்துவிட வேண்டுமென்று முன்பு சொன்னீர்களே. அப்படியானால், வழக்காளிகளாகிய நீங்கள் நான் கேட்பதற்குப் பதில் சொல்ல வேண்டியது உங்கள் ஒவ்வொருவருக்கும் கடமையாயிருக்க, என்னையே கேள்வி கேட்க ஆரம்பஞ் செய்து வீட்டீர்கள்? நன்றாயிருக்கிறது.

பார்வ: அப்படியில்லை. அந்தக் கேள்வியினெதிர் மொழியாலேயே எங்கள் வழக்கு விஷயம் விளங்கிவிடும். மானிடர் ஒவ்வொருவருக்கும் முக்கியமாக வேண்டியதென்ன?

நார: உலகிலுள்ள மானிடர் ஒவ்வொருவருக்கும் கல்வி, செல்வம், பலம் இம்மூன்றும் முக்கியமாக வேண்டியவை.

சர: அப்படிச் சொல்லு! அப்படிச் சொல்லு! கேட்டீர்களா நாரதன் சொன்னதை? இன்னுமுங்களுக்கு என்ன சந்தேகம்? இதனாலேயே நான் சிறந்தவளென்று தெரியவில்லையா? அவன் சொல்லிய மூன்று வகையிலும் முதலாவது கல்விதானே சிறந்தது. ஆதலால்,

பாட்டு

இராகம்-காம்போதி **தாளம்-அடதாளம்**

பல்லவி

கல்வியையல்லது நல்லபயன்தர
வல்லது சொல்லவுண்டோ உய்வுமுண்டோ (க)

அநுபல்லவி

செல்வ மொழிந்திடுந் தேகமழிந்திடும்
தேவ போகங்களுஞ் சேதம் விளைந்திடும் (க)

செல்வமழிந்துபோம், தேகபல மொழிந்துபோம் கல்வி அப்படியன்று

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து

என்றதால், எழுபிறப்பிலு முதவுதலைச் செய்யும். ஏன் நாரதா! நீயே விளக்கமாகச் சொல்லு? பொருளும் பலமும் பிரயோசனமற்றவை. கல்விதானே சிறந்தது?

நார: அதற்கென்ன தடை? கல்விக்கு நிகரென்ன இருக்கிறது?

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுணராக்—கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்மர றுக்கு மருந்து.

என்று நீதி நூலே விளங்கக் கூறுகிறதே? அல்லாமலும் அனுபவத்திற்பார்த்தாலும் ஒருவனுக்குக் கல்விதானே அவசியம். படிப்பில்லாதவன் மிருகத்துக்குச் சமானமாக மதிக்கப்படுகிருன்.

கண்ணுடைய ரென்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

என்பதால், அவனேக் குருடனென்றே கூறுகிருர்கள். ஆகையால், கல்வியினுடைய அருமை பெருமைகளும் அதற்கு அதிபதியாகிய தங்களது உன்னத மகத்துவமும், யாருக்குத் தெரியாது?

சர: ஆ! ஆ! ஆ! சந்தோஷம், சந்தோஷம் (மற்ற இருவரைப் பார்த்து) நீங்கள் கேட்டுக் கொள்ளுங்கள்.

லட்சு: நாரதா! என்ன சொல்லுகிருய்? இன்னும் உலக விவகாரங்களே நீ நன்ருயறியவில்லே போலிருக்கிறது?

பாட்டு

பல்லவி

செல்வத்துக்கு நிக ரில்லே மற்ருென்றென்று
சொல்லத் தடையேது கிடையாது (செ)

பல்வகையான புகழ் மதிப்பைத்தரும்
பாரிலுள்ளோர்களெல் லோரும் போற்றப்பெறுஞ்(செ)

செல்வத்திற்கு நிகரானது வேறென்ன இருக்கிறது? பணமில்லாத ஒருவன் பிணமாக மதிக்கப் படுகிருனன்றி அவனுக்கு மரியாதை எவர்கள் கொடுப்பார்கள்? உலகத்தில் செய்யாத தொழில்களைச் செய்வதும், ஆடுவதும், பாடுவதும், கப்பல் யாத்திரை செய்வதும், போர் சேவகராகி ரணகளத்தில் உயிரிழப்பதும், எல்லாம் பொருள் சம்பாத்தியத்தைக் குறித்தல்லவா? அப்படியிருக்க கல்வியைப் பிரமாதகச் சரஸ்வதி மெச்சிக்கொள்வதை நீயும் ஒப்புக் கொள்கிருயா என்ன?

நார: அது எப்படி ஒப்புக்கொள்வது? கல்வி என்ன அவ்வளவு பிரமாதமா? பொருளில்லாவிடில், கல்வியும் பிரகாசிக்கதே? நன்ருக ஒருவன் கற்றுக் கொண்டானென்று வைத்துக்கொள்வோம்; அவன் பொருளில்லாத வறியனுக விருந்தால், பல மேதாவியர் கூடிய சபையில் தன் வித்துவத்திறத்தைக் காட்டிப் பிரசங்கித்தாலும், அங்குள்ளவர் யார் அவன் பிரசங்கத்தையும், கவித்துவத்தையும் நன்கு மதிப்பார்கள்? ஒருவரும் மதிக்கவேமாட்டார்கள். அரை வித்தை கால்வித்தை ஒழுங்காக படிக்காது போனலும், ஒருவன் காதிலே கடுக்கன், கையிலே காப்புக் கொலுசு, சங்கிலி மோதிரங்கள், கண்டருத்ராட்ச முதலான ஆபரணங்களைப் பூட்டி, அந்தச் சபையிலே கன்னு பின்னு காமா சோமாவென்று உளறினலும், அங்குள்ளவர்களெல்லாம் சபாஷ்! சபாஷ்! என்று மெச்சிப் புகழ்ந்து கரகோஷஞ் செய்வதை மற்றிடங்களில் காணுது

போனலும், நாடகக் கொட்டகையில் அனுதினம் திட்டமாக நேரிற்காணலாமே? இத்தோடே போயிற்ரு? அரிவருக்கம் இன்னதென்றறியாத அந்த நாடக வித்துவ சிரேஷ்டர்களுக்கு மன மோகனம், சபாரஞ்சிதம், அலங்காரபூஷண, ஆடம்பர, விக்ரக நளின கோலாகலம் என்னுமிவ்வித மான அநேக பட்டமுஞ்சூட்டுகிருர்கள். இதென்ன கண்கூடாக நிதமுங்காணுங் காட்சியல்லவா? இதற்காகத்தானே ஆதியில்,

விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரனிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனில்
பஞ்சேனும் பட் டேனும் வேண்டுமவர் கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

என்று ஒரு வெண்பா வெளிவந்திருக்கிறது. இவ்வளவுதானு? 'இரக்கப்போயினும் சிறக்கப்போ' என்னும் பழமொழியை என்னவென்று நினைக்கிறீர்கள்? பிச்சையெடுக்கப் போனலும் ஜம்பமாய் உடை உடுத்திக் கொண்டுபோய், பிள்ளையார் கோவில் கட்டப் போகிறேன், சிதம்பர நடராஜாவுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளை நடத்துவிக்கப் போகிறேன், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமிக்குப் பாற்காவடிப் பிரார்த்தனை செலுத்துவிக்கப் போகிறேன். திருவண்ணமலை அருணசலவீசுரருக்குக் கும்பாபிஷேகஞ் செய்யப்போகிறேன். நான் எவ்வளவு திரவியவந்தனகவிருந்த போதிலும், திருப்பதி வெங்கிடாசலபதி என் கனவிலே வந்து சொந்த ஐவேஜிலிருந்து நீ பிரார்த்தனை செலுத்திலை் ஒப்புக்கொள்ளமாட்டேன், ஊரூராயலைந்து பிச்சையெடுத்து அந்தக் காசைக்

கொண்டு வந்து காணிக்கையாகச் செலுத்தி ஞற்ருன் நான் ஏற்றுக் கொள்வேனென்று சொன்ஞரென்று, ஊரார் குடியைக் கெடுக்கும் வஞ்சனை வார்த்தைகளைச் சமத்காரமாகப் பேசிப் பிச்சை கேட்பவர்களுக்கு ஆயிரக்கணக்கான தங் கம், வெள்ளி நாணயங்களை பெரும் பிச்சையாக கொடுப்பார்களன்றி அன்று பட்டினியென்று அழுத கண்ணீருங்கம்பலையுமாக நின்று ஆகாரத் திற்குத் தவித்து நிற்குங் கந்தைத துணி கட்டிய ஒருவனைக் கண்ஞற்றிரும்பியேனும் பாராமல் அப் பாலே போடா அசட்டுப்பயலேயென்று அடித்துத் துரத்துவதும், பிரத்தியட்சந்தான். இவ்வளவே துக்கு, உங்களுக்கு மாதுர்ஸ்தானமாகிய பாற்ச முத்திரம் நாராயணமூர்த்திக்குத் தங்களை மனைவி யாகக் கொடுத்துச் சிவபிரானுக்கு ஏன் விஷத்தைக் கொடுத்தது? உயர்ந்த பீதாம்பர ஆடைக்கும், கிழிந்த தோலாடைக்குமுள்ள வித்தியாசங் கண்டதேயாகும். ஆகையால்,

பொருளிலார்க் கின்பமில்லை புண்ணிய மில்லையென்று
மருளறு கீர்த்தியில்லை மாந்தரிற் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெற வழியுமில்லை
பெருநிலத் திடைநடக்கும் பிணமெனப் படுவரன்றே

என்றதால், பொருளில்லார்க்கு ஒன்றுமேயில்லை. இப்படியிருக்க சரஸ்வதியம்மாள் சொல்லுங் கல்வியெப்படிச் சிலாக்கியப்படும்? நாவலர், பாவலர், கவிராயர், பிரசங்கியார், எத்தனை பேர் கால் கடுக்கவோடிச் செல்வர்கள் வீட்டுத் தலை வாசலில் கையேந்தி, அவர்கள் வரவையும் தயவை

யும் நோக்கிக்கொண்டு நிற்கிருர்கள். இது தெரியாமல் அந்த அம்மாள் பிதற்றுவதை யாரம்மா ஒப்புக்கொள்வார்கள்? பொருளே மேன்மையுடையது, அப்பொருளுக்கதிபதியாகிய நீங்கள் சிறப்புடையவர்கள். தடையில்லே, தடையில்லே.

லட்சு: அப்படிச் சொல்லு, ஆ! ஆ! ஆ! நிரம்ப சந்தோஷம், சந்தோஷம், (மற்ற இருவரைப் பார்த்து) கேட்டீர்களா நாரதன் சொன்னதை?

பார்வ: நாரதா! என்ன மதிகெட்டுப் பேசுகிருய்?

பாட்டு

பல்லவி

வல்லமை யல்லது சொல்லவும் வல்லது
புல்லறி வாகுமன்ரே வேறு நன்ரே (வ)

அநுபல்லவி

வெல்லுவாருக் கின்று எல்லாஞ் சொந்த மென்று
வேதமநு நீதி யோது மெதிர் நின்று (வ)

வல்லமைக்கு நிகராக வேறென்னவிருக்கிறது? சத்தியானுசாரமென்னு மொழிக்கு என்னவுரை சொல்லுகிருய்? யார் யாருக்கு எவ்வளவு பலமிருக்கிறதோ அவ்வளவு மேன்மை அவருக்கு உண்டென்பதல்லவோ அம்மொழியின் கருத்து. எவ்வளவு கல்வியுடையவனுக விருந்தாலென்ன? எவ்வளவு பொருளுடையவனுக விருந்தாலென்ன?

அது எதுவரை? பலமுடையவன் தாடையிலே ஒரு அடி போடும்வரைதான். அப்பால் அவரோட்டம் பிடிக்க வழி தேடுவார்களன்றி எதிர் நின்று வாதிப்பாரோ? குயவனுக்குப் பல நாள் வேலே, தடி கொண்டவனுக்கு ஒரே நாள் வேலே, என்பதை நாரதா! நீயுமறந்தாயோ?

நார: அது எப்படியம்மா மறக்கக்கூடும்? கல்வி சிலாக்கியமானதென்ருலும், பொருள் அதனைப் பிரகாசிக்கச் செய்யுமென்ருலும், பலத்துக்குள் பொருளொடுக்கமாக இருப்பதினலே பலமே மேன்மையுடையது. இது சாதாரணமாக யாருக்கும் வெளிப்படையாகத் தெரிந்ததுதானே? ஒரு பலமுடையவனெதிர் வந்தால் 'செல்லாக்கோபம் பொறுமைக்கழகு' என்பதுபோல் கல்வியுடையவன் முதுகிலேயடி வாங்காமல் 'அடக்கம் அமரருளுய்க்கும்' என்ற நீதியைச் சொல்லியோடித் தப்பித்துப் போவான். பொருளுடையவன் அப்படியல்ல, கெருவங்கொண்டு, நம்மால் ஆகாது போனலும், பத்துப் பேருக்குக் கூலி கொடுத்து, இவனையுதைக்கச் சொல்லுவோம், மிஞ்சினலும் நியாய சபையில் வேண்டிய பொருளைச் செலவிட்டு வழக்குத் தொடுத்து இவனை மாட்டிவிடலாமென்று முதலில் நினைத்து திமிர்கொண்டு வாதிட்டுநின்று, அவன் நியாயமாக ஏதாவது கொஞ்சந் திரவியங்கொடுவென்று கேட்டாலும், இம்மியளவுங் கொடுக்க மாட்டேனென்று பிடிவாதஞ் செய்வான். அப்பால் என்ன நடக்குமென்ருல், பலமுடையவனலே தண்டப்ரயோகம், முஷ்டிப்பிரசாரம், பாதபிரட்சாடனமெல்லாமடைந்து,

**பொருட்பாலை விரும்புவர்கள் காமப்பா லிடைமூழ்கிப்
புரள்வார் கீர்த்தி
அருட்பாலாம் அறப்பாலைக் கனவிலுமே விரும்பார்கள்
அறிவொன் றில்லார்
குருப்பாலர் கடவுளர்பால் வேதியர்பால் பாவலர்பால்
கொடுக்கக் கோரார்
செருப்பாலே யடிப்பவர்க்கு விருப்பாலே கோடிச்செம்பொன்
சேவித் தீவார்**

என்று பெரியோர் சொல்லியபடி வந்தனுபசாரங்களோடு ஏராளமான பொருட்குவியலைப் பலவானுக்குப் பாதகாணிக்கையாகச் சமர்ப்பிப்பார்கள். அப்படியானால் சக்தி மேன்மையானதோ? பொருளும் கல்வியு மேன்மையானவைகளோ? சத்தியே மேன்மையானது. அந்தச் சத்தியாகிய பலத்துக்கு அதிபதியாகிய தாங்களே சிறந்தவர்கள் அதற்குத் தடையில்லை, தடையில்லை, அவர்களிருவரும் பித்துப் பிடித்துப் பேசுகிறார்கள். அப்பேச்சை நீங்கள் கவனிக்க வேண்டாம் அம்மா!

பார்வ: (மகிழ்ச்சியுடன்) ஆ! ஆ! ஆ! நிரம்ப சந்தோஷம், நிரம்ப சந்தோஷம். (மற்ற இருவரையும் பார்த்து) கேட்டீர்களா?

சர: (கோபமாக) நாரதா! என்ன உன் குணத்தை விட்டாயில்லையே?

பாட்டு

**தீயாலே வேகாது நீரால் நனையாது
திருடர் கொள்ளலா காது நன்னைச்
சேர்ந்த சகோதரர் பங்கிடலாகாது
சிந்தை மயங் காது**

ஓயாமலீந்தாலு மோங்கும் குறையாது
ஒருமையே யெழுமையுமு தவுந்தவருது (க)

இவ்வளவு மேன்மை பெற்ற கல்வியைப் பார்க்கிலும் பலம் மேன்மையென்று சொல்லுகிருயே?

நார: யார் சொல்லுகிருர்? கல்வியைப் பார்க்கிலும் பலம் எப்படி மேன்மையாகும்? பலமானது கல்வியிஞலுண்டாகுமல்லாது கல்வியானது பலத்திஞலுண்டாகாதே? அப்படியாஞல் கல்விதானே மேன்மையுடையதாகிறது. "புத்திமான் பலவாஞவான் பலமுளான் புத்தியற்ருல், எத்தனை விதத்திஞலுமிடரது வந்தே தீரும்" அவர்கள் சும்மா சொல்லிவிட்டுப் போகட்டும். நீங்கள் கவனிக்க வேண்டாம். கல்வியே மேன்மையானது.

லட்சு: நாரதா! (கோபமாக) இப்படி வா!

பாட்டு

கண்டோர்களெல்லோருங் கைகட்டி வாய்பொத்திக்
கால் பணிய விடுக்கும் தான்
காதலித்த பெண்ணை மேலாங்குலத்தார்
களித்தீயவுங் கொடுக்கும் புகழ்
கொண்டாடியூரார் கூட்டம் நட்புக்கடுக்கும்
கொன்ற கொலையைத்தானின்றென்று தடுக்கும் (செ)

இவ்வளவு மேன்மை பெற்ற செல்வத்தைப் பார்க்கிலும், என்னென்னவோ மேன்மை யென்கிருயே ?

நார: நாஞ சொல்லுகிறேன், அவர்களென்னென்னவோ சொல்லுகிருர்கள்.

குணமிருந் தாலுங் குலமிருந்தாலுங் கொழுந் தமிழின்
மணமிருந் தாலு மதியிருந் தாலும் வழுத்திடுவங்
கணமிருந் தாலுமோர் காசும்பெருது சிங்கார வரைப்
பணமிருந் தாலவர்க் கெல்லோரு மஞ்சலி பண்ணுவரே

என்றதனுல் செல்வந்தான் மேன்மையுடையது. அவர்களென்ன வேணுமானுலுஞ் சொல்லட்டும். நீங்கள் சும்மாவிருங்களம்மா!

பார்வ: (கோபமாக) நாரதா! இப்படி வா! என்ன சொல்லினை?

நார: நானென்ன சொன்னேன்? உங்களுக்கு விரோதமாக ஒன்றுஞ் சொல்லவில்லையே.

பாட்டு

வேண்டும் பொருள்தனக் கில்லாத தொன்றில்லை
வெற்றியால் பெற்றுக் கொள்ளும் உயிர்
வேதை செய்யும் விஷ ஜெந்தோடு துஷ்ட
விலங்கையும் வெட்டித் தள்ளும்
தாண்டிக் குதித்துத் தனது மேன்மை விள்ளும்
தன்பகை கொண்டு நின்ருர் தலையைக் கிள்ளும் (வ)

இவ்வளவு மேன்மை பெற்ற வல்லமைக்கு மேலானது என்ன இருக்கிறது?

நார: ஒன்றுமில்லை.

[ஒரு பெண், பாடுங்குரல் கேட்கிறது. குரல் வந்த திசையை எல்லோரும் உற்று கவனிக்கிருர்கள்.]

[நர்மதை பாடுகிருள்.]

பாட்டு

இராகம்: ஆரபி தாளம்: ஆதி

பல்லவி

பெண்களிலனுசூயா போலே
பெருமையையுடையோர் யார் சொல்வீரே (பெ)

அநுபல்லவி

மண்புவி யதுவொன்றேபோயாய் வீர்
மலரயன் அரியரன் நகரிலுமெ வருளர் (பெ)

சர: நில்லுங்கள், நில்லுங்கள், பேச்சை நிறுத்துங்கள், ஏதோ ஒரு இனிய குரலோசை கேட்கிறது?

லட்சு: ஆம், ஆம். நாரதா! உனது வீணையின் நாதத்திலும் இக்குரலோசை மிகு இனிமையாயிருக்கிறது.

பார்வ: வாஸ்தவந்தான். யாரோ ஒரு பெண் பாடி வருவதாக நினைக்கிறேன்.

நார: உண்மை இதுநான். பூலோகத்திற் கேட்ட ஒரு பெண் குரலென்றே நினைக்கிறேன்.

சர: இப்படிப் பாடுமினிய குரல் வாய்ந்தவர் மத்திய லோகத்திலுமிருக்கின்றார்களா?

லட்சு: இல்லாமலா நாரதன் சொல்லுகிறான்?

பார்வ: அடி பேச்சை நிறுத்துங்கள். முற்றுங் கவனித்துக் கேட்போம்.

[எல்லோருஞ் செவி கொடுத்துக் கேட்கிறார்கள்.]

பாட்டு

சரணம்

நாதனே தன்னீ னென்றும்
நனவுங் கனவுங் நினைவா ளென்றும்
பாதபூஜையான தொண்டு
பண்பாய்கைக் கொண்டு போற்றி
ஓதுவா ளெந்நாளுங் கண்டு
உளரோ அவள் போற் கற்புபெண்டு
ஆதலினுலே மெல்லோரும்
அவள்பாதமதே தொழுவோம் வாரும் (பெ)

சர : தர்க்கப்பாட்டு

இராகம்: கேதாரம் தாளம். ஆதி

பல்லவி

அநுசூயை யெனுமொரு வநிதைக்கு நிகராக
அணங்கொருவருமில்லையாம் எவ்வுலகிலும் (அ)

அநுபல்லவி

இனியென்ன பெருமைகளி ருக்கின்றன வெனக்கு
ஏனமுமாயினது ஆதலினுல் கற்பினுக்கு (அ)

சரணம்

நித்தமுங் கணவனுக்குப் பத்தி செய்து சொற்படியே
நின்றவரின் ஞெண்டு புரிந்தும் மாதர்
நீதிக்குக் கொஞ்சமாயினு மாறு செய்தல் தீதெனு
நியாயங்களை நன்கு தெரிந்தும்
சத்தியந்தயவு சீலம் நற்குண மெலாம் பொருந்தும்
தையலென் பெருமை முற்றும் வையகமறிந்திருந்தும் (அ)

லட்சு : பாட்டு

எப்பொழுதும் நாதனுக்கு தப்பிதமில்லாமலே ந
டப்பது தான் நற்புக ழென்றும் அவர்
ஏவலுக்குமாறு செய்யும் பாவையர்க்கும் மேன்மைநிலை
இல்லையில்லை யெள்ளளவென்றும்
முப்பொழுதும் போற்றி நான்
முறைப்படி செய் வேனென் றென்றும்
மூவுலகு மென் கற்பை மொ
ழிந் தண்டிப் புகழ்ந்து நின்றும் (அ)

பார்வ : பாட்டு

நாதனன்றி வேறு தெய்வ மாதர்களுக் கேதுசொல்ல
நாடியன்பு மூழியத் தொண்டும் தினம்
நானியற்றி யீசனுட னேயிருக்கு மேன்மை பெற்ற
நன்மையவர் தேகமோ உண்டும்
பேதமதிலாத நிலை யோகி மகிழ்வார்கள் பண்டும்
பேருலகி லென்னைநிக ராருமில்லை யென்றுகண்டும் (அ)

நார : நீங்களென்ன யோசிக்கிறீர்கள்? நான் அப்பொழுதே சொல்லவில்லையா, இது மத்திய லோகத்தில் கேட்ட குரல் போலிருக்கிறதென்று? சந்தேகமில்லை. நீங்கள் தனித்தனி நான் சிறந்தவள், நான் சிறந்தவளென்று தற்புகழ்ச்சி செய்வதை விட்டுவிட்டு நான் சொல்லுகிற இரண்டு பெண்களின் சிறந்த தன்மையை முன்பு கவனியுங்கள்!

பாட்டு

இராகம்: ஆரபி **தாளம்: ஆதி**

பல்லவி

இல்லறமே துறவறமே
எனுமிரண்டு வழிக்கு மிருபெண்கள் குருவாவர் (இ)

அநுபல்லவி

நல்லறந்தமிழ் வேத மில்லற மாமெனினும்
நவை யில்லாத் துறவற மதுவுஞ்சமான மெனும் (இ)

சரணம்

இல்லறமுடையவளநுசூயை மாது
ஈசனே கணவனென் றிசைந்தக லாது
சொல்லிய பணிசெய்து தொழுவாள்தப் பாது
தோகையர் கற்பிலவள் போலுள ரேது (இ)

துறவற முடையவள் நருமதை மங்கை
சுத்தத்திலவள் நிக ரில்லையே கங்கை
பிறவி விளைக்குமன மாம்பொல்லாக்கு ரங்கை
பிணித்தாள் பெண்களின் மேலாமெமக்கேனோ சங்கை (இ)

நன்கு கேட்டுணர்ந்து கொண்டீர்களா? இப்பொழுது பாடியவள்தான் நருமதை. அநுசூயா பிரதிஷ்டா வனத்திலிருக்கிறாள். இந்த இரு பெண்களே சுவர்க்க மத்திய பாதாளலோகங்களிலுமுள்ள பெண்களிலே சிறந்தவர்கள். வேண்டுமானால், நேரிலே போய்ப் பரீட்சை செய்து அறியுங்கள். நான் போய் வருகிறேன்.

[நாரதர் நமஸ்காரஞ்செய்து போகிறார்.]

சர: நாம் மூவரும் ஒருவரோடொருவர் வாதிட்டு நான் சிறந்தவள், நான் சிறந்தவளென்று பெருமை பாராட்டிக் கொண்டிருந்தோம். நம்மிலு மேன்மையான பெண்கள் இருக்கிறார்களாம்; அவர்களை பரிசோதித்துப் பெருமையைக் குறைக்க வேண்டியது அவசியமே.

லட்சு: துறவறத்துக்குரியவள் நருமதையாம். அவளைப் பற்றி நமக்கவசியமில்லை. அவள் தவ சீலியெனும் பெருமைதானடைவாள். அவளை நாம் பரிசோதித்தறிய வேண்டாம். இல்லறத் துக்குரியவள் அநுசூயா ஆனதினால், அவளே பதிவிரதை யென்னும் பெருமைக்குப் பாத்தியப் பட்டு நம்மிலுஞ் சிறந்தவளென்று புகழ்ந்து பேசும் யோக்கியதையை யடைந்து வருகிறாள் போலிருக்கிறது. ஆகையாலவளுடைய பெரு மையையே பரிசோதித்துக் கெடுக்க வேண்டும். இதற்கென்ன உபாயஞ் சொல்லுகிறீர்கள்?

தர்க்கப் பாட்டு

இராகம்: பியாகு — அடதாளம்

பார்வ: அப்படியானால் மூவரு மிப்பொழுதே யங்கு சென் றவள் கற்பை நாம் சோதித்திடலாம்

லட்சு: அட்டியதற்கேது காமஞ லன்னாள் நெஞ் சத்தைப் பேதித்திடலாம்

சர: நம்மாலாகாத காரிய மேதுண்டு லோகத்தில் யாவுஞ் சாதித்திடலாம்

பார்வ: வாரும் அவளிடம்போ யடுத்திடலாம்

சர: காமன்ரதியையு மழைத்திடலாம்

காம-ரதி: காலமெப்போ நேருமென்று காத்திருந்தோம் நீர் நினைத்த
காரணத்தால் வேகமாய் வந்தோம்

பார்வ: காரணமுங்களுக்குத்தா னேதெரிந்ததாதலாலே
வேகமாகப் போவோ மகிழ்ந்தோம்

[காமன் ரதியோடு மூவரும் போகிருர்கள்.]

காட்சி முடிவு

களம்: 2 காட்சி: 2

இடம்: காட்டின் வழி

காலம்: காலை

பாத்திரம்: நர்மதை

[நர்மதை சுவர்க்கலோகத்திற்குப் போக வருகிருள்.]

நர்ம: அநுசூயா மாதின் அனுக்கிரகப் பலனைக் கொண்ட நான் எங்கு செல்ல வேண்டுமென்று விரும்புகிறேனே அங்கு போய் வருகிறேன். இன்று இந்திராதி தேவர்கள் ஒருங்கு கூடியிருக்கும் காட்சியைக் காண என் கண்கள் விரும்புகின்றன. மனம் அவாவுறுகின்றது. ஆகையினலே,

பாட்டு

இராகம் : யதுகுல காம்போதி ஏக தாளம்

மகிழ்சியாயித் தினத்திலே நான்
சுவர்க்கலோகம் போவேன்
மந்தாரை நீழ லிந்திராதிதேவர்
வந்து சூழ்ந்திடும் விந்தை தனை
இன்று காண வென் சிந்தை மிக
வாஞ்சை யுற்றது நேர்ந்த திந்நாளில்
சேர்ந்திடாவிடில் நிந்தை
வானமார்க்கமதாயிவ் வேளை சீக்கிரமாய்
மாறிலா நினை வோடு பூதல
வாசமேய கலாதிவ் வேளையில் (மகி)

[போகிருள்.]

காட்சி முடிவு

களம் : 2 காட்சி : 3

இடம் : சுவர்க்கலோகம்

காலம் : பகல்

பாத்திரங்கள்: பிரம்மா, விஷ்ணு, சிவன், தேவர்கள், நாரதர் முதலியோர்.

[சுவர்க்கலோகத்தின் காட்சிகளைக் காண நர்மதை பாடிக் கொண்டு வருகிருள். அதை மும்மூர்த்தி களும் கவனிக்கிருர்கள்.]

சிவன் : பாட்டு

இராகம் : பியாகு தாளம் : ஆதி

துக்டா

சுருதி தரும மறியாதவள் நருமதை
சுவர்க்கம் வருகிரு ளிப்போது
சுருக்கினிவளிந்த இடத்திலுருமலே
தடுத்திடுவாய் வர வொப்பாது

விஷ் : பெருமையுடைய வில்லறநெறி மறைவிதி
கருதியதி லேயவள் முப்போது
பேதமை மிஞ்சிய மாதவள் வந்திடில்
தீது விளைந்திடுந் தப்பாது

பிரம் : பெண்ணினர் புரி தவ புண்ணியமெலாம் தினம்
மண்ணில் நாயகன் பணி எண்ணி வாழ்வதாம்
விதி மாறுசெய்தவள் வரலாமா விதி
மாறுசெய்தவள் வரலாமா

சிவன் : இந்திரா! ஸ்திரி தருமங்களையறியாத நர்மதை இச்சுவர்க்க பதவிக்கு வர நியாயமில்லை—ஆகையாலவளை இங்கு வந்து சேராமல் தடுப்பாயாக.

இந்திரன் : பாட்டு

இராகம் : காப்பி தாளம் : ஆதி

பல்லவி

உத்தரவுபோல் நடப்பேன் தடையொன்றில்லை
உத்தரவுபோல் நடப்பேன் சுவர்க்கம்
உத்தமருக்கு கிட்டுந்தான்
மற்றவருக்கு கட்டந்தான் (உத்)

சித்தத்தில் பயமின்றி நருமதை மாது
தேடிச் சுவர்க்கத்திற்கு வருவது தீது அவள்
தேகத்தைக் கனல் வாதைக்குட்பட
வேவிட்டுத் தவ ருது
வேகச்சுட்டுடல் தீய கட்டளை
யாகப் பட்டிது போது
வேதையாகியம் மாதுநோக வுந்தீது செய்து (உ)

ஆரடா! அடே! வாயில் காப்போரே! நருமதை யென்னு மானிடப்பெண் நம் சுவர்க்கத்திற்கு வருவாளாஞல், அக்கினிச் சுவாலையை அவள்மீது வீசும்படிச் செய்து இங்குப் பிரவேசிக்க விடாது அவளை அப்புறப்படுத்துங்கள்.

காவலர் : அப்படியே.

[நருமதை உள்ளே செல்லவொட்டாமல் அக்கினிச் சுவாலையை வீசி விரட்டுகிருர்கள்.

நருமதை அக்னி சுவாலை வீசுவது தாளாது திரும்புகிருள்.

காட்சி முடிவு

களம் : 2 **காட்சி : 4**

இடம்: தேவலோகத்தில் ஓர் பகுதி

காலம்: நண்பகல்

பாத்திரங்கள்: நருமதை, நாரதர்

[அக்கினிச் சுவாலையால் பாதிக்கப்பட்ட நருமதை வருந்துகிருள்.]

நர்ம : பாட்டு

இராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

ஐயையோ நான் பாவி துய
ரானேன் போகுதென் ஞவி

அநுபல்லவி

மெய்யுந் தீயினுல் வெந்து மன
வேதையாகினே ஞெந்து இனிச்
செய்யும் வகை தானேது இது
தேவரால் வந்த தீது (ஐ)

நான் ஒரு பிழையுஞ் செய் தறியேனே வேறு
உதவி செய்பவருங் காணேனே முன்
கருமவிதியது தானே கேடு
காலமோ என் செய் வேனே (ஐ)

[நாரதர் வருகிருர்; நருமதையின் நிலையை உணர்ந்து]

நார : அம்மா! நருமதா! விசனப்படாதே.

நர்ம: சுவாமி! நமஸ்காரம். அநியாயமாகத் தேவர்கள் என்னை அக்கினி பாதைக்குட்படுத்தி, இவ்வித அவஸ்தையடையச் செய்து விட்டார்களே, நானென்ன செய்வேன்?

நார: அம்மா! நான் சொல்லுவதைச் செவிசாய்த்துக் கேள்.

பாட்டு

இராகம்: யதுகுல காம்போதி ஏகதாளம்

கண்ணிகள்

இகத்திலில்லறம் நடத்தினோருக்குச்
சுவர்க்க பதவி கிடைக்கும்
இல்லாத வருள்ளே செல்ல வழியின்றி
பொன்னுலகுக் கத வடைக்கும்
மகத்தில் தானத்தில் தவத்தில் பூஜையில்
மகத்துவ மிக வுண்டு
மற்றது மில்லறம் பெற்றவர்க்கே பல
னுற்றிடும் பற்றுகைக் கொண்டு
மங்கையருக்குப்பர்த் தாவே தெய்வமன்றி
மற்றொரு தெய்வம் வே றேது
மாது நீ கல்யாணஞ் செய்திங்கு வந்தால்
வழி திறக்குந்தவ றுது
சங்கை கொள்ள வேண்டா மென்சொல்லை நம்பு நீ
சடுதியிற் பூமியி லுறுவாய்
தக்க புருஷனைக் கல்யாணஞ் செய்தவன்
தாளடி போற்றிப்பின் வருவாய் (இ)

மத்தியலோகத்தில் இல்லற தருமத்தை நடத்திய வருக்கே, சுவர்க்க பதவி கிடைக்கும் மகிமையுடை

யது. எவ்வளவு நற்குணம், நற்செய்கையுடையோராயினும், மனையறம் செய்யாதாருக்கு சுவர்க்கமிடங்கொடுக்காது. ஆகையால் இப்பொழுதே நீ பூலோகத்திற்குப் போய் மனதிற்குவந்த ஒரு தவசீலனை, மணவாளனாக்கிக்கொண்டு, பின்பு நீ சுவர்க்கம் வருவாயானல், தடை செய்யாது சுவர்க்க வாசல் கதவு திறக்கும். என் சொல்லை உறுதியாக நம்பிப் போய் வா. எனது பூரண ஆசி.

நர்ம: சுவாமி! தாங்கள் அனுக்கிரகப்படி இதோ போய் மணமுடித்துக்கோண்டு வருகிறேன்.

[போகிருள்.]

காட்சி முடிவு

களம் : 3 **காட்சி : 1**

இடம்: பிரதிஷ்டாவனம்

காலம்: மாலை

பாத்திரங்கள்: பார்வதி, லட்சுமி, சரஸ்வதி, காமன், ரதி, அநுசூயா, தர்மதேவதை, அத்திரிமுனிவர் முதலியோர்.

[ஒருபுறம் முனிவர்கள் நிஷ்டையிலிருக்க, அத்திரி முனிவர் மட்டும் நிஷ்டையிலிருந்து எழுந்து வருகிருர்.]

அத்: அநுசூயா! நான் பதரிகாச்ரமம் போய் வருகிறேன். விடை கொடுத்தனுப்பு.

அநு: நாதா! தாங்கள் பிரியத்திற்கு மாறுமுண்டோ? போய் வாருங்கள். நமஸ்காரம்.

அத்: கல்யாண் (போகிறார்)

[பார்வதி, லட்சுமி, சரஸ்வதி, ரதி. மன்மதன் பிரவேசிக்க.]

சர: விருத்தம்.

பத்திநற் றவங்கள்யோக பாவனைபுரியு மின்னோர்
சித்தஞ்சஞ் சலிக்குமாறு சிறந்தநாட் டியமும் பாட்டும்
அத்தசெய்கை யுஞ்செய்திட்டா லநுசூயை யென்னும்
பெண்ணாள்
இத்ததியுதவ நேர்வா ளிஷ்டசோதனை செய்வோமே

இனிநாம் சும்மாவிருக்கக்கூடாது, இங்கு தவவிரதானுஷ்டானங்கள் நடத்தும் பிராமணோத்தமர்கள், மனஞ்சலிப்படைந்து சிற்றின்பத்தை நாடுமாறு, நாம் ஆடல் பாடல்களை நடத்தினால், இவர்கள் தங்களுக்கு உதவி செய்ய அநுசூயையைக் கூவி யழைப்பார்கள். அப்பால் அவள் சுகர்மங் கெட வழி தேடுவோம். என்ன சொல்லுகிறீர்கள்?

லட்சு. விருத்தம்

ஓச்சலில் லாமலோடி யொருவர்மற் றொருவர் மீது
பூச்செண்டு கொண்டெறிந்தும் போக சல்லாபவின்பப்
பேச்சுகள் மொழிந்துங்கூடிப் பெரும்வியப் புறச்சிரித்துக்
கூச்சம்போல பிநயித்துக் குலவுவோம் வருகுவீரே

அடி! இது நல்ல யுக்திதான். நாமொருவருக் கொருவர் மாறுபட்டு மலர் கொய்தும், செண்டு கட்டி வீசியெறிந்தும், பந்தடித்தும், வெள்ளை

யாகிய மொழிகளினுலே சிற்றின்பப் பாடல்களை பாடிச் சம்பாஷணைகளைச் செய்தும், நகைத்தும், ஓடியும், கண்களைப் பொத்தி விளையாடியும், திரிவோம் வாருங்கள். பாடுவதார்? ஆடுவதார்?

பார்வ: விருத்தம்

பாட்டிலே கெட்டிக்காரி பாரதி பாடவேண்டும்
ஆட்டத்தில் ரதியேமேலா மவள்தானே யாடவேண்டும்
நீட்டிக்கை யபிநயிக்க நீயிலக்குமியே யுங்கள்
கூட்டத்தில் நானுஞ்சேர்ந்து குதூகலித்துலவுவேனே

பாடுவதில் வல்லவள் சரஸ்வதியானதினுலே, அவளேதான் பாட வேண்டும், ஆடுவதில் வல்லவள் ரதியானதாலே, அவளேதான் ஆடவேண்டும். அபிநயம் செய்வதில் நீ (லட்சுமியைக் காட்டி) வல்லவளானதனுலே அவர்கள் பாடல்களுக்கு இசைந்த பதப்பொருளை விளக்கும்படி நீயேதான் அபிநயம் செய்ய வேண்டும். நானும் சும்மாயிருக்காமல், உங்களோடு கூடி சமயோஜிதம் போல் குதூகலம் கொண்டாடி வருகிறேன்: வாருங்கள். நேரமாகுது. வந்த வேலை ஆரம்பஞ்செய்வோம்.

தர்க்கப் பாட்டு

இராகம்: பியாக் ஏக, தாளம்

சர: மலர் பறிப்போம் பந்தடிப்போம்
மாலை கட்டிச் சூடுவோம்

லட்சு: மற்ருேர் கண்ணைப் பொத்திக் கொள்ள
மறைந் தொளிக்க வோடுவோம்

ரதி: மதன வேதமான பாடல்
மதுர மோடு பாடுவோம்

பார்வ: வாசி போலு மோடி மீனு
மூசலேறி யாடுவோம்

மதன்: மா தவர் செய் தவயோக நிலை
மாறி மோக மீறவொளி தூவுவேநானிதந்தி

இனி சும்மா விருக்கலாகாது. நாம் நமது பாணங்களைப் பிரயோகம் செய்வோம் (பிரயோகிக்கிருன்)

[நிஷ்டையிலிருக்கும் முனிவர்கள் மீது மன்மதன் புஷ்பபாணத்தை விடுகிருன். முனிவர்கள் நிஷ்டை கலைந்து அநுசூயாவைக் கூப்பிடுகிருர்கள்.]

முனிவர்கள்: அம்மா! அநுசூயா! நீயே துணை. நீயே துணை. ஓடி வந்தெங்களுக்கு உதவி செய்வாயாக.

அநு: (வந்து) அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்! உங்கள் மனஞ்சலிக்காமல், வேண்டிய நன்மைகளைச் செய்து, தவவிரதானுஷ்டானத்திற்குக் கெடுதி வராமல் பாதுகாக்கிறேன்.

காமன்: (தனியாக) இனி ஒரு உபாயஞ் செய்தாலொழிய நாடி வந்த காரியங் கைகூடாது. அதாவது அத்திரிமகா முனிவரைப்போலுருவெடுத்து, இந்த அநுசூயா கற்பைப் பேதிப்போம். இதோ உருமாறி வருகிறேன். (மறைகிருன்)

பார்வ: (அநுசூயாவைப் பார்த்து) அம்மா! வா வா! எங்களோடு நீயும் விளையாடலாம்.

அநு: அம்மா! ஸ்திரீகள் அநுதினம் செய்யவேண்டிய வேதகருமானுஷ்டங்களை விடுத்து, வீண்காலமாகப் பொழுது போக்குவது ஞாயமா? பதித்தியானத்தை நீங்கிய பெண் பாவகாரியன்ரு? என் நாதரோ பதரிகாச்ரமம் சென்றிருக்கிருர். அவர் வதனும்புயம் ஊனக் கண்ணிற்குக் காட்சியாகும் வரையிலாவது அத்திவ்யமங்கள சொரூபத்தை என் மனக் கண்ணுல், தெரிசித்துக் கொண்டிருக்க வேண்டாமா: பொழுதோ விருதாவா அகல்கிறது. எனக்குக் கட்டளை கொடுங்கள். நான் பதித்தியானஞ் செய்யப் போகிறேன்.

லட்சு: என்னடியம்மா! இப்படிச் சொல்லுகிருய்? பதித்தியானஞ் செய்ய வேண்டியதவசியந்தான். அதற்காக ஸ்திரீகள் தங்கள் தங்கள் குதூகல விளையாடல்களை நடத்திச் சந்தோஷிக்கக் கூடாதென்று விதியிருக்கிறதோ? நாங்களெல்லோரும் விளையாடவில்லையோ? வா வா விளையாடலாம்.

சர: அம்மா! பதித்தியானம், பதித்யானமென்கிருயே, பதியாகிய ஆடவர்கள் சிறந்தவர்களா? சதியாகிய ஸ்திரீகள் சிறந்தவர்களா?

அநு: அது என்னம்மா! அப்படிக் கேட்கிறீர்கள்? சுதந்திரம் என்பது எவர்க்கு சாஸ்வதமோ அவர்களே சிறந்தவர்கள். ஆதலால் ஆடவர்களே சிறந்தவர்களென்று தெரியவில்லையோ?

பார்வ: ஆனல், பெண்களுக்கு சுதந்திரம் கிடையாதோ?

அநு: கொண்டவன் பணி செய்வதொன்றே, பெண்ணொருத்திக்குச் சுதந்திரம். வேறு சுதந்திரமேது?

லட்சு: நன்ருய் சொல்லுகிருய்? ஆண் பெண் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாகச் சுகதுக்கானுபவங்களுக்குரியவராவார். ஆகையால் புருஷர்களுக்கு எவ்வளவு சுதந்திரம் உண்டோ, அவ்வளவு சுதந்திரம் ஸ்திரீகளுக்குண்டு.

[ரதி அநுசூயா கழுத்தில் அவளுக்குத் தெரியாமல் ஒரு முத்தாரத்தை போடுகிருள்.]

அநு: அது என்னவோ அம்மா! தாங்கள் படித்த பள்ளிக்கூட போதனை அப்படியிருக்கிறது போலும், சுதந்திரம் ஆடவர்களுக்கென்று வேதவிதிப்படி நடப்பவர்களே ஆண், பெண், பகுதியாரில், சிறந்தவர்களென்றும் நான் கேட்டறிந்து உணர்ந்திருக்கிறேன். (தன் கழுத்தைப் பார்த்து) இது என்ன நூதனமாக இருக்கிறது? இந்த முத்தாரம் என் கழுத்திலிட்டவா யார்?

[முத்தாரத்தை கழற்றப் போக]

ரதி: அம்மா! அம்மா! அதைக் கழற்ருதே. இந்த ஆரம் உன் கழுத்திலணிந்திருப்பது மிக்க அழகாயிருக்கிறது. அது அப்படியேயிருக்கட்டும்.

அநு: அம்மா! ரிஷி ஆச்ரமவாசிகளுக்கு ஈசஞதிரவியங்களிலொன்ருகிய இவ்வாபரணங்கூடாது. பெற்றுக் கொள்ளுங்கள். மேலும் பெண்கள் நாயகர் கண்டு மகிழ்வதற்காகவே, அணி பணி அலங்கா

ரஞ் செய்து கொள்வதன்றி, தம்மைக் கண்டு அன்னியர் புகழ்ந்து பேசுவதற்கல்ல. ஒரு உத்தம பதிவிரதா சிரோமணி தன் கணவன் அயலிடம் போயிருக்கும்போது தனக்கலங்காரம் செய்ய முயன்ற தன் உயிர்ப்பாங்கியிடஞ் சொல்லியதை உங்களுக்குச் சொல்லுகிறேன் கவனியுங்கள்.

உண்ணல் பூச் சூடல் நெஞ் சுவத்த லொப்பனை
பண்ணலெல் லாமவர் பார்ப்ப தற்கன்றோ
அண்ணல்தம் பிரிவினை யறிந்துந் தோழிநீ
மண்ணவந் தனையிது மடமை யாகுமால்,

அதாவது: அடி சகி! பெண்கள் உண்பதும், உடுத்துவதும், மலர் சூட்டிக்கொள்வதும், பரிமள களப வாசனாதிகளைப் பூசிக்கொள்வதும், சகல செய்கைகளும், தம்மைக் கொண்ட நாயகர்கள் மகிழும்படியல்லவா? அப்படியிருக்க என்னாயகர் பிரிந்து போயிருப்பதைப் பிரத்தியட்சமாய்த் தெரிந்த நீ இப்பொழுதெனக்கு அலங்காரஞ் செய்ய முயன்றது உனது அறிவில்லாத் தன்மை யாகு மென்றாள். ஆகையால் என்னாயகர் இப்பொழுது பதரிகாச்ரமம் போயிருப்பதால், நீ மகிழ்ந்தலங்கரிப்பது தகாத செய்கையாகும். பெற்றுக் கொள் எனக்கு வேண்டாம்.

[அநுசூயா தன் கழுத்திலிருந்த முத்தாரத்தைக் கழற்றி ரதியிடம் கொடுக்கிறாள். ரதி அதைப் பெற்றுக் கொண்டு போகிறாள். பார்வதி, லட்சுமி. சரஸ்வதி, தொடர்ந்து போகிறார்கள். காமன் அத்திரிமுனிவரைப்போல் வேடம் மாறி வருகிறான்.]

காமன்: சகி அநுசூயா! வா ஆச்ரமத்திற்குள் நாம் போய் இஷ்டானுபோகங்களை அனுபவிப்போம்.

பாட்டு

இராகம்: பியாகு தாளம்: ஏகம்

கண்ணி

அன்பான மாதரசி நின்பாலிவ் வேளையினில்
நண்பாகினே னணையா வா வா வா
இன்பான வாயமுத முண்டாலல் லாதுமய
லென்பா லாறுது இதழ் தா தா தா
ஏக்க மடைந்தநிலை பார்ப்பாயடி அணை
ஏற்றி யடைந்த மயல் தீர்ப்பாயடி
இச்சைமிக முற்றியது லஜ்ஜையை யகற்றியது
இத்தருணம் நத்தியெனை சேர் சேர் சேர்

[அநுசூயா யோசித்து உண்மை தெரிந்து கொண்டு கோபமுடன்]

அநு: பாட்டு

இராகம்: கமாசு தாளம்: ஆதி

பல்லவி

என் கணவனைப் போலுரு வெடுத்து வந்திருக்கிறாய் நீ
அடே காமா நானறியேனோடா (க)

அநுபல்லவி

அணையவே யெண்ணங்கொண்டு ஆகாதமொழி விண்டு
அண்டிய செயலினாலே துன்பமே உனக்குண்டு (க)

சரணம்

கற்புள்ள மாதருக்குக் காலமூன்றும் விளங்கும்
கள்ளா அடே கள்ளா அடே கள்ளா
கற்புள்ள மாதருக்குக் காலமூன்றும் விளங்கும்
காணப்படும் விழி தோணப்படுமொளி
போயித்திதி குரு டாகக் கடவையென் (க)

அடே மகாதுஷ்டனுகிய மதனு; நீ மாறுருவங் கொண்டு என் கணவனைப் போல், நடிப்பதை நானறிவேன். பதவிரதா ஸ்திரீகளுக்கு திரிகால வுணர்ச்சியுண்டென்பதை யறியாயோ? இதோ பார் உன் கெதி...

விருத்தம்

பொல்லாத துஷ்டனுன்னைப் போலில்லைப் பூதலத்தில்
இல்லான வறத்தை நீக்கவென்பதி ரூபமுற்றுச்
சொல்லாத சொல்லைச் சொலித் தொடர்ந்தனை விழிவிளங்க
மல்லாத துயரத்தாலின் றந்தக னுருவாயே

நீ குருடனுகப் போகக்கடவாய்.

[காமன் தன் சுயரூபத்துடன் கண்ணொளி இழந்து வருந்துகிறுன்.]

காமன் : பாட்டு

இராகம்: காப்பி தாளம்: ஆதி

கண்ணிகள்

கண்ணொளியிழந் தேனே மனங்
கலங்கியும் நொந் தேனே
கற்பினள் சாபம் பற்றியதாலே
கனதுன்ப மடைந் தேனே

எண்ணும லறிவு கெட்டேன் நான்
ஏன்மாறு வேட மிட்டேன்
ஈசன்மால்வேதன் தேவிமாராலே
யிந்தத்துக்கத்துக்குட் பட்டேன்
அம்மா அநு சூயா கஞ்
அருள்கொண்டுபா ராயா
அந்தகனுக நொந்தவென்றுன்ப
மகற்றியுந்தீ ராயா

விருத்தம்

சற்றுமெண் ணுறல்மோகந் தாங்கியே மமதை கொண்டு
சிற்றறிவாலே யிந்தத் தீத்தொழிற் குடந்தையாகிக்
குற்றமா மொளிநீங்கிக்கண் குருட னுமானேனின்று
நற்றயை யுடன் கண்ணிற்கு நல்லொளி தருவாய்த் தாயே

அம்மா அநுசூயா! நான் செய்த பிழையை முற்றும் பொறுத்து, என் கண்ணொளி விளங்கும்படி செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

அநு : வெண்பா

குற்றம் புரிந்துங் குருடாகிப் போற்றியதால்
செற்றந் தணிந்தின்று சித்தத்தில்—நற்றயையால்
முன்போலுன் கண்விளங்கு மோகமினிக் கொள்ளாதே
அன்போ டனுக்கிரக மால்.

முன்போல் உன் நேத்திரம் விளங்கக்கடவது.

காமன் : அம்மா! உங்கள் கருணையை என்றும் மறவேன்.

[காமன் போக—தருமதேவதை தோன்றல்]

தரு: தேவர்களாயினும் தகாத செய்கைக்குட்பட்டு பதி விரதா நிலைக்கு விரோதியர்களானபடியால் இவர் களை சிட்சிக்காமல் போனால் நாம் தருமதேவதை யென்னும் பெயர் கொண்டிருப்பது நியாயமில்லை. ஆதலாலிப்பொழுதே அக்கினி சொரூபமாகி இந்த வனமெங்கும் வியாபித்து, இவர்களையும் இம்சிக் கிறேன்.

[அக்கினி வனமெங்கும் பற்றி எரிகிறது. எல்லோரும் கூச்சல் போடுகிறார்கள். பார்வதி, லட்சுமி, சரஸ்வதி, ரதி, மன்மதன் முதலியவர்கள்.]

எல்லோரும்: ஆ ஆ! அம்மா! அம்மா! அநுசூயா! நீதானெங்களை இந்த அக்கினியினின்று காப் பாற்ற வேண்டும்.

அநு: அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்! உங்கள் தவவிரு தானுஷ்டானங்களுக்கு கெடுதி வராமல் காப் பாற்றுகிறேன்.

வெண்பா

தர்மநெறி யெண்ணுமற் சஞ்சலத்தைச் செய்வதற்கு
வர்மமிவர் கொண் டிங்குவந்தாலும்—கர்மநெறி
எக்கியத்துங் கற்பிடத்து மெங்கெங்கும் தானாகும்
அக்கினியே நீ குளிருவாய்.

[அக்கினி குளிர்ந்து போதல்]

சர: இனி நாம் இங்கு நிற்கக்கூடாதடி. நின்றால் ஏதா வது ஆபத்து விளையும். எல்லோரும் நமதிருப் பிடம் போகலாம்.

எல்லோரும்: ஆம்; ஆம். வா போகலாம்.

[போகிருர்கள்]

காட்சி முடிவு

களம்: 3 **காட்சி: 2**

இடம்: ஆசிரமம்

காலம்: காலை

பாத்திரங்கள்: நருமதை, சூர்தாஸ்

[கண்ணொளிஇழந்த சூர்தாஸ் உட்காந்திருக்கிருர். நருமதை வருகிருள்.—சூர்தாஸைப் பார்த்து]

நர்ம: பாட்டு

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

இவரே யெனக்குத் தக்க நாதர் ஒளி
இருகண்ணி லாராஞலும்
எனக்கு மன்மத ஞவர் (இ)

அநுபல்லவி

சிவனுரு வெனவுடன் முழுதும்வி பூதி
திகழ்கிற தெனதிரு விழிபெருஞ் சோதி
தவநிலை யுடையதி லிவரது கியாதி
தனைநிகர் பவரிலை யெனுமொரு சேதி

சாற்றுவார்க ளடி
போற்றுவார்கள் பணி
யாற்று வார்கள் துயர்
மாற்று வார்க ளிது

சரதஞ்சரதஞ் சரதந்தவ றிலை
விரதந் தவசிந் தனையுங்குறை யிலை

சத்திய முற்றவர் சற்குரு சொற்படி
நித்தந டப்பவர் பக்திவி திப்படி

தார ணிக்கு ளிப்படிப் பொற் பாரிருப்ப ரொப்புரைக்கக்
கார ணக் கருத்தெனக்குந் தோணுதற்கிலை சொலற்குத்

தட்டுக் கெட்டுத் தவறுது நாவும்
முட்டுப் பட்டுக் குளறுது யாவும்

சர்சன ரிவருடைய பொற்பதத்தை நானெப் போதும்
அர்ச்சனை செய்து துதிக்கு நற்றவ மொன்றுமேபோதும் (ஓ)

நல்லது இவர் பாதத்தை வணங்கி, அபிப்பிராயத்தைச் சொல்லுவோம்.

(சூர்தாஸை வணங்குகிருள்.)

நர்ம : பாட்டு

இராகம் : ஆரபி. தாளம் : ஆதி

பல்லவி

பாதமே போற்றிப் பணிந்தே னே
பணிந்தென் சிரசி லணிந்தே னே

அநுபல்லவி

ஆதரவானதுவே றில்லை
ஆதலா லடைந்தேனிவ் வெல்லை
மாதவமுனிவரே நற் சொல்லை
வாக்கால் சொல்லி நீக்குமெந் தொல்லை (பா)

சரணம்

ஜெனன மரண வினை யத | ஞலே |
செத்துப் பிறந்து மிந்தப் புவி | மேலே |
மனவுணர் வில்லாப் புழுவது | போலே |
வருந்தி யிளைத்து நொந்தேன்பல | காலே | (பா)

அனைய கொடியபாவ முழுவதும் | நீக்கி |
அநுதின மடையுமென் னவதிகள் | போக்கி |
இனியுமது மெய்ஞான வுணர்வினைத் | தேக்கி |
இன்ப கைவல்யசுக மெனக்குண் | டாக்கி |
இங்கெனக் கிதுபோது | ஒருதீது |
அணுகாது செய்து | |
மங்களங்களை மொழிந்துரை | சாற்றிடும் |
மங்கையி னெண்ணங்களை | நிறைவேற்றிடும் | (பா)

அடியாள் நமஸ்காரம்.

சூர்: மங்களமுண்டாகுக! உன் மனோபீஷ்டம் நிறைவேறுக.

நர்ம: என் மனோபீஷ்டம் நிறைவேறுமல்லவோ?

சூர்: அதற்கென்ன சந்தேகம்? என் வார்த்தை பொய்க்குமா? இப்பொழுதுஞ் சொல்லுகிறேன். சத்தியமாக உன் மனோபீஷ்டம் நிறைவேறுக.

நர்ம: மிகுந்த சந்தோஷம். வாருங்கள் போகலாம்.

சூர்: என்னை யெங்கே யழைக்கிருய்?

நர்ம: நீங்கள் என் மனோபீஷ்டம் நிறைவேறிவிட்ட தென்றீர்கள், அதற்காகத்தானழைக்கிறேன்.

சூர்: நீ என்னை உன் மனோபீஷ்டம் நிறைவேற வேண்டுமென்று வரங்கேட்டாய், அப்படியே நிறை வேறும்படி அனுக்கிரகஞ் செய்தேன். அதற்கு என்னையேன் அழைக்கிறாய்?

நர்ம: நன்றாய்ச் சொன்னீர்கள்? தாங்கள் என்னோடு வராமல் என் மனோபீஷ்டம் எப்படி நிறைவேறும்?

சூர்: இதுவென்ன நீ சொல்லுவது ஒன்றும் விளங்க வில்லையே?

நர்ம: உங்களுக்கு நான் சொல்லுவது விளங்கவில்லை யென்றால் யார் நம்புவார்கள்? என் மனோபிஷ்டம் பின்னாலே நிறைவேறப் போகிறதை முன்னாலே ஞானதிருஷ்டியாலுணர்ந்து சொன்ன தாங்களிப் போது, பரிகாசம் செய்கிறீர்களா என்ன? பரிகாச மெல்லாம் நான் கோரிய இடத்திற்குப் போய்ச் செய்து கொள்ளலாம் வாருங்கள்.

சூர்: இதேது மோசமாகயிருக்கிறது, உன் மனோபீஷ் டம் தானென்ன? எங்கே என்னை அழைக்கிறாய்?

நர்ம: வாருங்கோன்னா எல்லாம், அங்கே வந்தபின் சொல்லுகிறேன்.

சூர்: என்ன காரியத்திற்காக என்னையழைக்கிறாய்? அதனையாவது சொல்லு?

நர்ம: அப்படிக்கேளுங்கள், நன்றாகச் சொல்லுகிறேன்.

சூர்: சொல்லு சொல்லு கேட்கிறேன்.

நர்மதை: பாட்டு

இராகம்: பைரவி தாளம்: ரூபகம்

பல்லவி

கண்டேன் மோகங் கொண்டேன் உன்மேற்
காதலாகி னேனே சாமி (கண்)

அநுபல்லவி

தொண்டாகு வேனே சொந்தத்தேவி நானே
சுந்தர ரஞ்சித வின்பம ணஞ்செய
வந்தன னன்பொடு நேரிலே (கண்)

சரணம்

வாச மலர்சூடி மருவி விளையாடி
மாலைகாலை யெந்த வேளையிலுங் கூடி
லீலைசெய் வோம் மையல் தீரவே (கண்)
அண்டாத தேனே அகலல் விதிதானே
அட்டியெ தற்கினி விட்டேன் மொழிப்படி
அணையவரு வாய் நாயகா (கண்)

சூர்: ஓகோ! இதென்ன கிணறு வெட்டப்போய் பூதம் புறப்பட்டாப் போலாயிற்று; சிவசிவா! நானென் செய்வேன் ஓடி ஒளியவுங் கண்ணொளியில்லையே, இந்த ஆபத்துக்கெப்படித் தப்புவேன். இவள் என்னைவிட்டுப் போவதாகத் தெரியவில்லையே? பரமேசா! கருணாநிதி! இதுவும் சோதனையோ?

நர்ம: என்ன ஆலோசிக்கிறீர், வாரும், காலதாமதம் செய்ய வேண்டாம், என் மனோபீஷ்டம் உம்மைக் கல்யாணஞ் செய்து கூடிச் சுகிப்பதேயன்றி

வேறில்லே. இனி என்ளுல் சகிக்க முடியாது. வாரும்.

சூர் : விருத்தம்

இருந்தது போலிருந்தே யிடியிடித் ததுபோல் நெஞ்சம்
வருந்திட வார்த்தை சொன்ளுய் மங்கையீ தடுத்தி டாதே
அருந்தவ விரதத்தோனு னதிலுங்கண் குருடு வாய்ந்தோன்
பொருந்துதல் ஞாயமாமோ பூவைநீ யகலுவாயே

ஏ மாதே! இருந்தது போலிருந்து திடீரென்று தலையில் இடி விழுந்ததென்பார்களே, அதற்கொப்ப நியாயமில்லாத வார்த்தையை நீ சொல்லலாமா? நானோ தவ விரதம் பூண்டவன். மேலும் கண்ணிலாக் குருடன், நானுன்னோடு சல்லாபிப்பது தகுதியோ? நீயுமென்னையிச்சிப்பது நீதியோ? வேண்டாமிந்தப் பாவச் செய்கையை விட்டு அப்பாலே போய்விடு.

நர்ம : விருத்தம்

நேரிலென்ம ேைபிஷ்டந்தான் நிறைவேறு மென்று
சொன்னீர்
பாரினி லுமதுவாக்குப் பயனின்றிப் போகலாமோ
ஆரண மில்லறத்தை யகற்றியும் வகுத்ததுண்டோ
காரண மறிந்த நீரிக் கல்யாணங் கைகொள்வீரே

நான் தம்மைப் பணிந்தபோது என் மனேபீஷ்டம் நிறைவேறுமென்று சொன்னீரென்ருல் அந்த வாக்குத் தவறலாமோ?

வாய்மைதப்பி ஞர்களிந்த மானிலத்தி லீனராய்
தீமையுற்று மேலுளோர் பழிக்கவே திரிந்துபின்
தூய்மையற்ற கும்பியில் துளைந்த ழுங்கு வாரென
ஆய்மநுப் பகர்ந்தவேத சாகைமுற்று மறையுமே

ஆதலால் உமது வாக்குப் பொய்க்குமானல் நீர் நரகத்தையடைய நேரிடும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ரோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

என்பதைக்கவனித்து, என் மனேபீஷ்டப்படி மண முடித்துக் கொள்ள வாரும்.

சூர் : விருத்தம்

முகக்கண்கள் குருடாய்ப்போன முறைமையைப் போலவேயென்
அகக்கண்ணுங் குருடாய்ப்போன தாதலாலிவ் வரங் கொடுத்தேன்
இகத்திலவ் வரத்தைக்கொண்டே யென்னைத்தன் ஞேடுகூடி
சுகித்திட வழைக்கின்ருளித் தொல்லைக்கென் செய்குவேனே.

என் முகக் கண்கள் குருடாய்ப் போனதுபோல், அகக் கண்ணும் குருடாய்ப் போயிற்று. இல்லையேல் இவள் மனேபீஷ்டம் இன்னதென்று ஆலோசித்து உணராமுன், அது நிறைவேறுமென்று ஆசீர்வதிப்பேனு? அந்த ஆசீர்வாதமாகிய என் சொல்லையே ஆதாரமாகக் கொண்டு, என் தவ விரதத்தைக் கெடுக்க வாதிக்கின்ருளே நானிதற்கு என்ன மறுமொழி சொல்வேன்? தெய்வமே!

நர்ம : விருத்தம்

ஏனுமக் கையம்வேண்டா மிங்குரைப் பேனும்மைப்போல்
நாஞெருதவப்பெ ணைன்பேர் நருமதையென்று சொல்வார்
வானுல கில்லறஞ்செய் வார்களுக் குரியதென்ருர்
ஆனதா லென்னைக்கூடி யவ்வறம் நடத்துவீரே

ஏன் நீர் சந்தேகப்படுகிறீர்? உம்மைப் போல் நானும் தவஞ் செய்யப்பட்டவள்தான். என் பேர் நருமதை. நான் சுவர்க்கலோகம் போனேன், அங்குள்ளோர் நிராகரித்துத் தள்ளினர். இல்லற தரும மனுபவிக்காதவர்களுக்கு சுவர்க்க பதவி கிடைக்காத நிலையை நாரதராலுணர்ந்து மீண்டு வந்தேன். உமக்குமிப்படித் தான் சுவர்க்க பதவி கிடைக்காமல் போகும். ஆகையால் நாமிருவரும் தம்பதிகளாக இல்லற வாழ்க்கை நடத்துவோமேயானல், இருவரும் சுவர்க்க பதவியையடையலாம். கரும்பு தின்னக் கைக்கூலி கொடுத்தாலும் வெறுப்பாரைப்போல், வலுவில் வந்து உமக்கு சுவர்க்க பதவி கொடுக்க நினைக்கும் என்னை வெறுத்துப் பேசுகிறீர். இது உமக்கு நலமா? வாரும் வாரும், இஷ்டானு போகத்துக்கு ஏதுவாகிய மணத்தைச் செய்து கொள்ளலாம்.

சூர் : தர்க்கப்பாட்டு

இராகம்: முகாரி தாளம்: ஆதி

பல்லவி

கண்ணொளி யிழந்தோ ஞன் என்னை
எண்ணி நீ நொந்தாயே மாதே (க)

நர்ம : பல்லவி

அருமைக் கணவ னிரே எனக்கு
அருள் செய்து சுகிப்பீரே சாமி (அ)

சூர் : அநுபல்லவி

மண்ணிலுனக்குவேறு மாப்பிள்ளை கிட்டலையோ
புண்ணியமின்றிப் பாவம் பொருந்தியதித் தொல்லையோ
பொல்லாங்கு இந்த சொல் நீங்கு

நர்ம : அநுபல்லவி

ஒருமைக்கென் மனம்வேறு ரொருவரையும் நாடாது
இருமைக்கும் நீரேதுணை யெனைக்கை விடலாகாது
இடர்தீரும் என் னுடன் வாரும்

சரணம்

சூர் : புவியிற் பழியை யடைதற் குரிய (பொ)
நர்ம : இதுநற் புகழைத் தருமுற் றிலுமென் (இடர்)
சூர் : புத்தியுமட்கி யெடுத்து உரைப்பது (பொ)
நர்ம : இக்குவி லுக்கிறை விட்ட மலர்க்கணை (இடர்)
சூர் : பூதல மீதிது தீதுத காதது (பொ)
நர்ம : ஏளன மோதுத லேனிது வேளையில் (இடர்)
சூர் : புண்பட வும்பெரு நிந்தைத ருஞ்சரி (பொ)
நர்ம : இங்குசு கம்பெற வந்துக லந்தெனை (இடர்)
சூர் : புகழ்போ யிகழ்வா கவுமே செயுமோர் (பொ)
நர்ம : இனிமே மயிலோ சகியே னதனுல் (இடர்)
சூர் : போதமும் மானமும் வாழ்பொருள் மாநிதி
யாவையு மோர்நொடி கீழ்பட வேசெயும் (பொ)
நர்ம : ஏகவை போகம தாகிய லீலையி
லேயிரு பேரும ஞேகர மாயுற (இடர்)

சூர் : யுணர்ச் சியைப் போலுமுண்டோ
வேறொரு தீங்கு (கண்)

நர்ம : இன்னுந் தாம தமேனோ
எனைக்கூடிச் சேரும் (அரு)

சூர் : ஓஹோ இது என்ன?

நர்ம : என்ன ஆலோசிக்கிறீர் ? [கையைத் தொடு கிறாள்]

சூர் : விருத்தம்

விரதமுங் கெட்டுப் போச்சு வேதனை மிகுதியாச்சு இவள்
கரமது பட்டபோது காமமு முளைக்கலாச்சு
சுரதமுஞ் செய்யவாசை தோன்றிய தெனக்கிவ்வேளை
பரமனே பிழைபொறுத்துப் பக்தனை யாளுவாயே

இவளெப்பொழுது என் கையைப் பரிசித்தாளோ அப்பொழுதே யென் விரதமும் கெட்டுப் போயிற்று. ஜெகதீசா! நீதானென்னைக் காப்பாற்றி ரட்சிக்கவேண்டும்.

நர்ம : விருத்தம்

ஆணென்று பெண்ணென்றாக அயன்படைத் திட்டதாலே
காணலா முலகவாழ்க்கை கருதிய விரதமொன்று
கோணலாய்ப் போனால்வேறு கொள்ளவும் விரதமின்றே
வீணிது வாருங்காம விரதத்தை யனுஷ்டிப்போமே

பிரமன் ஆணென்று பெண்ணென்றாக ஜீவ ராசிகளைப் படைத்தது எதற்கு? ஒருவருக்கொருவர் கூடி வாழ்வதற்கல்லவா? ஏதோ ஒரு விரதங்

கெட்டுப் போனாலென்ன? வேறு விரதங்களில்லையா? இதற்காக ஏன் விசனப்படுகிறீர்? வாரும் வாரும். காமவிரதத்தை யனுஷ்டிப்போம்.

சூர் : இனியென்ன செய்வது? எனக்கும் ஆசையதிகரித்து விட்டது. இவள் சொல்லுவதெல்லாம் நியாயமாகவும், உலக நீதியாகவுமிருக்கிறது. ஆனால்,

[ஆலோசிக்கிறார்]

நர்ம : என்ன ஆலோசிக்கிறீர்?

சூர் : வேறொன்றும் யோசிக்கவில்லை, உன்னைக் கல்யாணம் செய்ததாக வைத்துக்கொள்ளு.

நர்ம : வைத்துக் கொள்ளுகிறதாவது, இன்னும் சந்தேகமா?

சூர் : சந்தேகமில்லை.

நர்ம : பின்பென்ன?

சூர் : உன்னைக் கல்யாணம் செய்துகொண்டால், நான் போகிற இடமெல்லாம் வருவாயோ?

நர்ம : அது என்ன அப்படிக் கேட்கிறீர்? கல்யாணம் செய்துகொள்வதெதற்கு? நாதனைவிட்டு தனியாயிருப்பதற்காகவா? உடலிரண்டும் உயிரொன்றுமாக வாழ்வதற்கல்லவோ? மேலும் பதிகளில்லாத இடத்திலிருக்கும் பெண்களை உலகம் நிந்திக்காதா என்ன?

சூர் : அப்படியானால் நான் போகுமிடங்களுக்கெல்லாம், என்னோடு நீயும் வருவாயென்று சொல்லு?

நர்ம: அதற்குத் தடையென்ன?

சூர்: ஆனால் போகலாம் வா. நேரமாகிறது.

[இருவரும் கைகோர்த்துப் போகிறார்கள்.]

காட்சி முடிவு

களம் : 3 **காட்சி : 3**

இடம்: ஊர் வெளிப்புறக் காடு

காலம்: மாலை

பாத்திரங்கள்: காவலர்கள், மாண்டவ்ய முனிவர், நருமதை, சூர்தாஸ்.

[அரசனுடைய அரண்மனையில் ஆபரணம் களவு போனதற்காக மாண்டவ்யரை கள்வனெனப் பிடித்துக் கொண்டு வந்து கழுவிற்போட கழு மரம் முறிந்து விழுகிறது.]

1வது கொலையாளி: இது என்னடா விபரீதம்! இந்தக் கழுமரம் முறிச்சுட்டுதே.

2வது கொலையாளி: ஆமா; இவனல்ல மனுசண்டா அண்ணே! அதனாலே கழுமரம் முறிஞ்சுட்டது.

1வது கொலை: நாம் போய் ராஜாவுக்கு சொல்லுவோம் வாடா!

(கொலையாளிகள் போகிறார்கள்.)

(கழுமரம் முறிந்து கீழே விழுந்து அதனால் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும் மாண்டவ்ய முனிவரை

அந்தகனுகிய சூர்தாஸ் மிதித்து விடுகிருர். கோபத்துடன் மாண்டவயர்]

ஐயோ! நான் என்ன செய்வேன்? என் பிராரப்துல கருமத்திஞலே, திருடனென நிச்சயிக் கப்பட்டு கழுவிலேற்றி உபத்திரவமடைந்து கீழே விழுந்து கிடக்குமென்னே, காலால் உதைத்தவன் சூரிய உதயமானவுடனே மரணம் அடையக் கடவன்.

[என்று சாபமிட—முனிவரிட்ட சாபத்தைக் கேட்ட வுடன்[

நர்ம : பாட்டு

ஒருணர் யோகியின்ஞு ருரைத்த சாபத்திஞலே
சூரிய னுதிக்கிலோயென் சுந்தரநாதர் சாவார்
பாரிலென் ஞதர்க்கேற்ற பதிவிரதை நாஞுல்
வீரிய விரவுகாலம் விடியா மலிருக்க லாமே

நான் பதிவிரதையென்பது உண்மையாஞல் பொழுது விடியாதிருக்கக் கடவது

(உடனே சூரியன் மறைய இருள் வந்து சூழ்திறது:

நருமதை சூர்தாஸைக் கூட்டிக் கொண்டு போகிருள்]

காட்சி முடிவு

களம் : 3 காட்சி : 4

இடம். அரண்மனை

காலை: மாலை

பாத்திரங்கள்: அரசன், மந்திரி, முதலியோர்

[எங்கும் இருள் மயமாயிருக்கிறது. அரசன் மந்திரி யுடன் ஆலோசித்தல்.]

அரசன் : பாட்டு

இராகம்: பியாகு ஏக தாளம்

துக்டா

என்ன ஆச்சர்யமிது ஆ ஆ
எங்குமிருள் சூழ்ந்துல கிருண்டிருக்குது
ஏழு நாளோர் வாரத்துக்கு மேலானது (எ)

இத்தனைநாள் சூரியனு திக்காத காரணமென்ன
ராசிபுகும் நவக்கிரக வக்ர பேதமா இந்த
நானிலமுற்று மழியவந்த சேதமா அல்லது
நானியற்றும் ராச்யபாரந் தானநீதமா
நன்று கண்டு இன்று சொல்ல வேண்டுமது (எ)

மந்திரி! இதுவென்ன அனர்த்தகாலம்? உலக மெங்கும் இருள்மூடி அந்தகாரமாயிற்றே? பஞ்ச பூத பிரளய காலமிருப்பதாக மாத்திரம் சாஸ்திர மூலமாக உணர்ந்திருக்கிறோமன்றி, இருள் பிரளய காலமிருப்பதாகக் கேட்டதுமில்லை; நவக்கிரகங் களின் வக்கிரக காலமோ? அல்லது எனது செங்கோலானது வழுவிக் கொடுங்கோலான நிலையா? வேறு பெரியோர்களினால் நேர்ந்த

சாபமா? உலக நாசமேற்பட்ட நிலையென்ன ஆராய்ந்து சொல்லும்.

மந்திரி: மகாராஜா! நாம் அரண்மனையில் நவரத்தின மாலைகள் திருட்டுப் போயினதென்று கள்ளனைப் பிடித்துவர, தலையாரி கொத்தவால், காவற்காரரை யனுப்பினோம். அவர்கள் ஒருவரைப் பிடித்து வந்தார். அப்படிக் கொண்டுவரப்பட்டவர் கர சரண முகலட்சணங்களை நோக்க அருந்தவ விரதயோக நிஷ்டராகக் காணப்பட்டார். நாம் கேட்குங் கேள்விகளுக்குப் பதில் சொல்லாது மௌனமாயிருந்தபடியால், திருடரபிநயிப்பது இயல்பென்றும் நன்கு ஆராயாதும், கழுவி லேற்றி வர சிட்சை விதித்தோம். அப்பொழுது கொண்டுபோய்த் தண்டனை நிறைவேற்ற முயன்ற கொலைஞரும் கழுமர முறிந்ததென்றும் வந்து சொன்னார். அவ்வேளையேனும் கவனிக்காது அலட்சியமாகவிருந்து விட்டோம். தற்கால நிலைமையைக் கவனிக்குங்கால், அந்த மகாத்மாவுக் கியற்றிய துன்பத்தினிமித்தம் உலக ஜீவராசி களுக்கு இவ்வித அந்தகாரம் சூழ்ந்துகொண்ட தென்று நினைக்கிறேன் மகாராஜ்!

அரசன்:

விருத்தம்

மந்திரிவாஸ் தவந்தான் மணிமாலை திருடிப்போன
தந்திரர் யாரோ நல்ல தவத்தரைக் கழுவிலிட்டு
வந்திடச் சொன்னோமந்த மரமது மொடிந்த'தென்று
ரந்த வேளையு மெண்ணோ லாபத்திற் குள்ளானோமே

மதிநுட்பமிகுந்த மந்திரி! நீர் சொன்னது உண்மைதான். மகாத்மாவுக்குத் துன்பம் விளை

வித்த அபராதிகளுகி விட்டோம். நன்கு கவனஞ் செலுத்தி ஆராயாத பிழையொன்றினுலே, லோக ஜீவருக்கும் அநேக துன்பமுண்டாக்கி விட்டோம். இதற்கு வேண்டிய பரிகார உபாயங்களைத் தேடாமல், சென்ற காரியத்தையெண்ணி மேல் நடக்கவேண்டிய காரியத்தையும், விரும்பாம லிருப்பது அறிவீனர் செய்கையன்ரே? இதற் கென்ன உபாயம்?

மந்திரி: மகாராஜ்! மூவுலகுங் கொண்டாடும் மகா பதிவிரதையான அநுசூயா மாது நினைப்பா ளானுல், எந்தக் காரியத்தையும் நிறைவேற்றி வைப்பாள். கற்புடைய மங்கையர் நினைத்த வற்றைச் செய்து முடிக்கும் ஆற்றலுடையவ ரென்றும் வேதங்களும் உரைக்கின்றன. ஆகை யால் அந்த மாதரசியின் அநுக்கிரகத்தை யடைவதே உபாயம். வேறு உபாயம் ஒன்றும் செல்லாது மகாராஜ்!

அரசன்: மந்திரி! தாம் சொல்லியதே தக்கவுபாயம். நான் இப்பொழுதே ஆச்ரமம் சென்று மகா பதிவிரதா சிரோமணியான அநுசூயா மாதின் அனுக்கிரகத்தைப் பெற்று வருகிறேன்.

காட்சி முடிவு

களம் : 4 **காட்சி : 1**

இடம்: ஊரின் வெளிப்புறக் காடு

காலம்: முற்பகல்

பாத்திரங்கள்: அரசன், மாண்டவ்யர்

[அரசன் அவஸ்தையிலிருக்கும் மாண்டவ்யரை பணிந்து போற்றல்]

அரசன் : சுவாமி! க்ஷமிக்க வேண்டும். தெரியாமல் தாமதகுண மயக்கங்கொண்டு, அறிவு திரிபு பட்டுத் தம்மைத் துன்பத்திற்காளாக்கினேன் அந்த அபசாரத்தாலே உலகத்திற்கே பெரிய அனர்த்தத்தை விளைத்த கொடும்பாவியானேன். ஜீவாத்மாக்களெல்லாம் அந்தகாரமென்னும் இருளினுல் திக்குமுக்காடிப் பிரலாபிக்கின்றன. அதன் நிமித்தம் சூரியோதயமாகும்படி அனுக்கிரகிக்க வேண்டுகிறேன்.

மாண்ட : (கோபத்துடன்) அடே துஷ்டா! பரம சண்டாளா! பதிதா! நிர்லச்சா! பாவி! துரோகி! மடையா! வெறியா! மதிமந்தா! நீ என்ன சொன்ன போதிலும், நான் உன்மீது கருணை செய்யேன்; இனி இங்கு நின்ருல். உனக்குக் கொடிய சாபத்தைக் கொடுப்பேன். என் கண்ணிற் காணுமல் ஓடிப் போடா!

[அரசன் போகிருர்]

காட்சி முடிவு

களம்: 4 காட்சி: 2

இடம்: நகர் வெளிப்புறக் காடு

காலம்: இரவு

பாத்திரங்கள்: மாண்டவ்யர், அநுசூயா, நருமதை, சூர்தாசர்

தர்க்கப் பாட்டு

இராகம்: நீலாம்புரி தாளம்: ஆதி

கண்ணிகள்

அநு: அன்புடைய நர் மதையே
உன் மகிமை யாரறிவா ரம்மா

நர்ம: அம் மணியே யுன் வருகை
யானந்தம் பாதம் பணிந்தே னம்மா

அநு: மங்களமுண் டாகுந்தீர்க்க
மாங்கல்யசு கம்பெறுவா யம்மா

நர்ம: மாதாவுன் கிருபை பெற்ருல்
யாதுகிடை யாதபொரு ளம்மா

அநு: லோகமிரு ளானதினுல்
ஜீவகோடி வாடுதுபா ரம்மா

நர்ம: நோக்கியென்ன லானதென்ன
தீர்க்கமாக வோத வேணு மம்மா

அநு: வைத்தவரே யெடுக்க வேணும்
வழி தெரிந்தோர் நடக்கவேணு மம்மா

நர்ம: வாஞ்சைகொண்ட தாயேயுன் சொல்
மாறுவேனே நீயுரைப்பா யம்மா

அநு : பொழுதுவிடி யாதிருக்கப்
புகன்ற சாபம் நீக்கி வைப்பா யம்மா

நர்ம : பொழுதுவிடிந் தாலென்றுதர்
அழிவாரே நா னேதுசெய்வே னம்மா

அநு : இறந்தாலுன்ற னுதனுயி
ரெழுப்பியிங்கு நான்றருவே னம்மா

நர்ம : எனக்குவேறே யென்னவேண்டு
யிரவிதோன் றியுதிக்கச் செய்வே னம்மா

தாயே! தங்கள் ஆக்ஞைபோலவே நடந்து கொள்கிறேன். தங்கள் திருவாக்குப்படி, என் நாயகரை உயிர்பெற்றெழச் செய்வதோடு, அவர் பிறவியிலேயே அந்தகராகவேயிருக்கும், அங்க வீனப்பழுதையும் நீக்கி, புடமிட்ட தங்கம், பிரகா சத்தையும், மேல் மதிப்பையுமடைவதுபோல், அவர் கண்ணொளி விளங்கச் செய்ய வேணு மென்று மிகுதாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்டவ்: அம்மா பதிவிரதா! நீ பொழுதுவிடிய அனுக்கிரகிப்பதும் அநுசூயா தேவி உன்னாயகன் உயிர்பெற அநுக்கிரகிப்பதுமானால், நானே உன் கணவன் கண்ணொளி விளங்கச் செய்கிறேன். இம்மொழி சத்தியம்! சத்தியம்! முக்காலும் சத்தியம்.

நர்ம : விருத்தம்

தானமுந் தவமு மில்லின் றருமமு மருளு மன்பும்
ஞானமும் வீடு மென்றன் நாயகன் பணியென் றெண்ணும்
மானினி யான கற்பு மாதுநா னானால் சூழ்ந்த
சூனிய விருளை நீக்கிச் சூரியன் றோன்று வானே

[சூரியோதயமாகிறது. சூர்தாஸ் விழுந்திறக்கிறார்.]

அநு : விருத்தம்

குன்றங் ளெட்டு மண்ட கோளங்க ளெவையும் வானும்
பொன்றினுங் கணவன் பாதபூஜையிற் றவறேனுனல்
நன்றருள்கொண்ட விந்த நருமதை நங்கைநாதன்
இன்றுயிரோடு நேரி லெழுவது முண்மையாமே

[சூர்தாஸ் உயிர் பெற்றெழுகிறார்]

மாண்ட : நான் அஹிம்ஸையே முக்கிய தருமமென்று மறந்தும், சோர்வுற்றும், பிறவுயிருக்கு மனத் தாலும், வாக்காலும், காயத்தாலும், துன்ப முறுத்தாமலிருந்தால், இந்தச் சூர்தாசரின் அந்தகத் தன்மை நீங்கி, இவர் கண்கள் ஒளி விளங்கக் கடவது.

[பிறவி அந்தகனுகிய சூர்தாஸுக்கு இரண்டு கண் களும் தெரிய காண்பவை எல்லாவற்றையும் பார்த்து ஆச்சரியப்படல் — அநுசூயாவும், மாண்டவ்யரும் போக]

சூர்தாஸ் : [மரத்தைக் காட்டி]

சூர் : பாட்டு

இராகம்; காப்பி தாளம்: ஆதி

கண்ணிகள்

ஆ! ஆ!

என்ன ஆச்சர்ய மிதுபுதுமை
இப்பொரு ளெப்பொருள் நீயோது
இதன் பெயர்யாது எனக்குத் தெரியாது ஆ ஆ (எ)

நர்ம : காணுமிது தானே கல் லத்திமரம்
காய் காய்த்து பழுத்தது வானுயரம்

நாதா! இதுதான் கல்லத்தி மரமென்பார்கள்.

சூர் : (ஆச்சரியத்துடன்) கல்லத்தி மரமா இது? ஆ! ஆ! ஆ! என்ன அழகாயிருக்கிறது? கல்லத்தி மரம், கல்லத்தி மரம். கல்லத்தி மரம்.

[சூரியனைக் காட்டி]

பாட்டு

ஆ! ஆ!
என்ன ஆச்சர்ய மிதுபுதுமை
இப் பொருளெப் பொருள் நீயோது
இதன் பெயர்யாது எனக்குத் தெரியாது

நர்ம: சொல்லக் கேளும் சூரியனுகு மிது
தோன்றித் தொல்புவி வாழ்விப்பது

நாதா! இதுதான் சூரியன், இச்சூரியனில்லா விட்டால், உலகச் செயல் ஒன்றுமே நடக்காது பாழ்பட்டுப்போம்.

சூர் : இதன் பெயர் சூரியனு?

நர்ம : ஆம்; ஆம்.

சூர் : சூரியன், சூரியன், சூரியன்.

[கழுமரத்தைக் காட்டி]

பாட்டு

ஆ! ஆ!
என்ன ஆச்சர்ய மிதுபுதுமை
இப் பொரு ளெப்பொருள் நீயோது
இதன் பெயர் யாது எனக்குத் தெரியாது

நர்ம : தேகத்தை சிட்சிக்குங் கழுமரந்தான்
தேறுமதன் பேரைய மேனிநுந்தான்

நாதா! இது குற்றஞ் செய்த மனிதரைச் சிட்சை செய்யப்பட்ட கழுமரம்.

சூர் : கழுமரமா இது?

நர்ம : ஆம்; ஆம்.

சூர் : கழுமரம்! கழுமரம்! கழுமரம்!

[ஆடையைக் காட்டி]

பாட்டு

ஆ! ஆ!

என்ன ஆச்சர்ய மிது புதுமை
இப்பொரு ளெப்பொருள் நீயோது
இதன் பெயர்யாது எனக்குத் தெரியாது

நர்ம : அங்கத்தில் போர்த்திடும் ஆடையிது
ஆகையா லெவர்க்குமா னங்காப்பது

பிரிய நேசா! இதன் பேர் ஆடை இது ஒன்று இல்லாவிட்டால், யாவரும் அவமானப்படுவார்கள்.

சூர் : இதன் பேர் அவமானப்படுவார்கள்.

நர்ம : இதன் பேர் அவமானப்படுவார்களென்று சொல்லவில்லே,

சூர் : நீ இப்பொழுது சொன்னுயே?

நர்ம: இதன் பேர் அவமானப்படுவார்களென்று சொல்லவில்லை. இது ஒன்று இல்லையாகில், யாவரும் அவமானப்படுவார்களென்றேன்.

சூர்: ஆனால், இதன் பெயரென்ன?

நர்ம: இதன் பேர் ஆடை, சேலை, துகில், என்று பல பேராகும்.

சூர்: ஆடை சேலை துகில்! ஆடை சேலை துகில்! ஆடை சேலை துகில்!

நர்ம: அப்படியல்ல; இது பல சொல், ஒரு பொருள், ஆடை யென்றாலாவது, சேலையென்றாலாவது, துகிலென்றாலாவது, ஒரு பெயர் சொன்னால் போதுமானது. எல்லாம் ஒரே பொருள்.

சூர்: ஆனால், நானென்ன சொல்வது?

நர்ம: ஆடையென்றாற் போதும்.

சூர்: ஆடை! ஆடை! ஆடை!

(பர்வதத்தைக் காட்டி)

பாட்டு

ஆ! ஆ!

என்ன ஆச்சர்யமிது புதுமை
இப் பொருளெப்பொருள் நீயோது
இதன் பெயர் யாது எனக்குத் தெரியாது

நர்ம: இங்கு காணுமிதன்பேர் பர்வதமாம்
இன்னுமைய மேனே வாரும் போவோம் நாம்

இதன் பெயர் பருவதம் — மலை என்றும் சொல் வார்கள். வாரும் போகலாம்.

சூர்: அப்படியா! சரி வா போவோம்.

(இருவரும் போகிறார்கள்)

காட்சி முடிவு

களம்: 4 **காட்சி: 3**

இடம்: கற்பகச்சோலை

காலம்: பிற்பகல்

பாத்திரங்கள்: நாரதர், பார்வதி, லட்சுமி, சரஸ்வதி, பிரம்மா, விஷ்ணு, சிவன்]

(நாரதர் அநுசூயாவைப் பற்றி பாடிக்கொண்டு வருகிறார்.)

நார: பாட்டு

இராகம்: பியாகு தாளம்: ஆதி

பதிவிர்தை அநுசூயை தத்துவமே
பகரவுங் கேட்கவு மகத்துவமே
பணியுல கமரர்கள் உலகவனியிலிலை
பார்த்திடுவீர் ஐயந் தீர்த்திடுவீர்
பதவியி லுயர்வெனப் போற்றிடுவீர்

நாதன் பணிவிடையே நாளுந்தவ மென்று கொண்டாள்
ஞானமதியுணர்வால் நாற்பொருளி னுண்மை கண்டாள்
தீதெனுஞ் சொல்லையேனுஞ் செப்புவர்கள்பக்க மண்டாள்
சித்திகை வஶ்யமேவு முத்தமியுமான பெண்டாள்

சிறந்தவ ரிறந்தவ ரெழுந்திட வரந்தரு
திறமுடையாள் நல் லறமுடையாள்
திடவலியுளதவ வுரமுடையாள் (பதி)

(நாரதரின் பாடலை கேட்டு பார்வதிலட்சுமியைப் பார்த்து)

பார்வ: அடி லட்சுமி! நாரதன் பாடி வருகிற பதப் பொருளை யுணர்ந்தாயா?

லட்சு: ஆம்; உணர்ந்தேன். அநுசூயாவின் தத்துவ மகாத்மிய கற்பைப் புகழ்ந்து பாடி வருகிறான்.

சர: நாரதா! என்ன உளறிக்கொண்டு வருகிறாய்?

நார: அம்மா! நீங்கள் சொன்னாலும், சொல்லாது போனாலும், வாஸ்தவத்தில் உளறிக்கொண்டு தான் வருகிறேன். காரணம் மெய்மறந்துதான் வசமற்றுப்போனேன்.

பார்வ: எதற்காக மெய்மறந்து வசமற்றாய்?

நார: என்றுங் காணாத, அதிலும் எவரிடத்திலும் காணாத, மேலும் எந்தயிடத்திலும் காணாத இன்னும் மனதிற்கு நினைக்கவொண்ணாத விந்தையைக் கண்டால் யார்தான் மெய்மறக்க மாட்டார்கள்.

லட்சு: முழ நீளம் வார்த்தையை நீட்டி விஸ்தரித்து வீண் காலம்போக்காதே, கண்ட விந்தையைச் சவிஸ்தாரமாய்ச் சொல்.

நார: முன்னொரு முறை நருமதை பாடியதைக் கேட்டுச் சந்தோஷங் கொண்டீர்கள். என்

மொழியைக் கேட்டும் பரிட்சித் துணர்ந்தீர்களன்றோ? அந்த மகா பதிவிரதையான அநுசூயாவின் மகத்துவ கற்பின் தத்துவத்தை நேரிற் கண்டு மெய்மறந்து வசமற்ற நான் இன்னது சொல்வது என்று தெரியாமல் உளறுகிறேன். சுருக்கமாகச் சொல்லில், உங்கள் மூவரிலும் அநுசூயா பலவகையிலும் சிறந்தவளென்று முக்காலும் பிரமாணத்தோடு சொல்லுவேன்.

பார்வதி : தர்க்கப் பாட்டு

இராகம்: இந்துஸ்தான் தோடி தாளம்: ஆதி

பல்லவி

நம்மிலுஞ்சி றந்தா ளென்று நாரத னநுசூ யையின்
நற்புகழை யோது கிறன் ஆ! ஆ! ஆ!

அநுபல்லவி

செம்மையா யவள்கற்பைத் தெரிந்திடு வதற்குச்
சென்றுசோ திக்கச் சொல்வோம் நமது நா தருக்கு
சும்மா விட்டு விட்டாலே யிழிவுண்டாம் நமக்கு
சொன்னே னிங்கு உங்களுக்கு
இன்னுந்தாமத மெதற்கு (நம்)

லட்சு : மானிடப் பெண்ணமக்கு மேலானு ளென்று
வார்த்தையைக் கேட்டுச்சும்மா விருத்தல்னன் றன்று
நானவ ளைச்சோ தித்து வரமொழி யொன்று
நாதருக்குச் சொல்வே னுங்கள்
நாதருக்குஞ் சொல்வீ ரின்று (நம்)

சர : உங்களபிப்பிராய மெனக்குஞ்சம் மதமே
உரைப்பேனு னுதருக்குச் சோதிக்கும் விதமே
இங்கிது வேளை யோசித் ததினல்லு சிதமே
இன்றி ரண்டி லொன்ற றிந்து
கொண்டிடலா மற்பு தமே (நம்)

நாரதா! நீ இனி நிற்க வேண்டாம் போ-அந்த அநுசூயாவினது நிலையை இன்னுங் கொஞ்ச நேரத்தில் அறிவாய்.

நார : அம்மணிகாள்! நான் போய் வருகிறேன். வீண் அப ஜெயப்படாதீர்கள்.

பார்வ: நான் சொல்வதைக் கேளுங்கள். நமது நாயகர் களிடம் நாம், தனித்தனி பிணக்கங்கொண்டு அவர் களை நமது அபிப்பிராயத்திற்குட்படுத்தி, அநுசூ யாவின் பதிவிரதாத் தன்மையைப் பரிட்சித்து வரும்படி செய்ய வேண்டும். ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளுங்கள். (லட்சுமியைப் பார்த்து) அடி லட்சுமி! நீ ஒருத்திதான் உன் புருஷன் வந்த வுடன் பல்லை ஈ இ என்று இளிக்கப் போகிருய், சிரித்தால் காரியம் கொட்டுப்போமடி. கொஞ்சம் பிகுவாயிரு. அப்போதுதான் காரிய சித்தி பெறு வாய்.

லட்சு : அடியம்மா! எனக்குச் சொல்ல வேண்டாம். உங்களுங்கள் புருஷன்மார்களை வசப்படுத்து வதில், கண்ணுங்கருத்துமாயிருங்கள். நான் என் காரியத்தைக் கவனஞ்செலுத்தி முடிக்கிறேன்.

[பிரம்மா, விஷ்ணு, சிவன், மும்மூர்த்திகளும் வரு கிருர்கள். ஒவ்வொருவர் மனைவியும் பிணக்கங்

கொண்டிருப்பதை பார்த்து அவரவர் மனைவியின் அருகில் போகிறார்கள்.]

தர்க்கப்பாட்டு

இராகம்: கமாசு — ஏகதாளம்

பல்லவி

மும்மூர்த்திகள்: கிட்டிவாடி மானே கிலேசமேன் கொண்டாய் நீ

மனைவியர்: எட்டிநின்று பேசும் இப்போது கிட்ட வேண்டாம்

அநுபல்லவி

மும்மூர்த்திகள்: அட்டிசெய்வ தேனிப்போது அவ்விபரந் தன்னையோது
திட்டமாகக் குறை யிருந்தால் தீர்த்து வைப்பேனென்றப் பாது (கி)

மனைவியர்: செப்புதற்கென்ன பிரமாதம் செய்கையாற்றாளெல்லாஞ் சேதம்
ஒப்புதற்குவமையில்லா வுமதுரையெல்லாம் விநோதம் (எ)

மும்மூர்த்திகள் உனக்கு நேர்ந்த தென்ன தொல்லை
ஒரு குறையுஞ் செய்ய வில்லை
மனக்கி லேசம் வந்ததென்ன
வாட்டந்தீர்ப்பாய்க் கேட்டென் சொல்லை (கி)

மனைவியர்: என்குறையைச் சொன்னவின்று
இச்சை கொண்டிணங்கி நின்று
இங்கிதன்படி நடப்பே
னென்றியம்புஞ் சத்ய மொன்று (எ)

மும்மூர்த்திகள்: அப்படியே சத்தியமாகச் சொல்லு கிறேன்.

பாட்டு

நடக்கத் தடையில்லை மாதே
நவிலுவா யதையிப் போதே
இடுக்கமெல்லாந் தீர்த்து வைப்பேன்
எதற்கும்நீ ஐயங் கொள் ளாதே (ந)

வேறு தர்க்கப்பாட்டு

இராகம்: தேசிகதோடி தாளம்: சாப்பு

கண்ணிகள்

மனைவியர்: அநுசூயை யெனு மாதுகற் பின்
ளா மெனக் கேள் வியானது
அவளைச் சோதித்து வருவீரிதுததி
அதுவே வியா குல மானது

மும்மூர்த்திகள்: பதிவிரதையரி னிடமணு குவது
பாவையே நல மாகுமா
பாவமாவர் கோபமாயுரை
சாபம் வீணிலே போகுமா

மனைவியர்: என்னிலு மவள் பதிவிரதை யெனி
லென்னை மதிப் பவரா ரின்று
எந்த விதத்திலு மவளைச் சோதித்து
இந்தவிடம் வருவீர் சென்று

மும்மூர்த்திகள்: அங்கு போயினி பரிட்சை செய்திட
அவசியமென்ன வந்தது
ஆளறோ டெதிர் பேசுறாய் கற்பி
லவளிலதிகம் நீ தெரிந்தது

கணவனாகிய என் மொழிக்கெதிர்மொழி பேசி வாதிக்கிறபடியால், அநுசூயாவைப் பார்க்கிலும் நீ கற்பில் மேலானவளென்று, இங்கேயே தெரிந்து விட்டது. இனி அங்கு போய் அவளைச் சோதிக்க வேண்டிய அவசியமென்ன?

மனைவியர்: வார்த்தை யாற்பரி காசஞ் செய்குறீர்
ஏற்குமோ வ்ங்கு சென்றிடும்
வாட்டமாகுது இல்லையே லென்றன்
வாஞ்சை வேண்டாம் அன்றிடும்

மும்மூர்த்திகள்: கோபமாவது மேனடி மட
மேவுமாமயி லேவிடு
கோதையாள் கற்பைச் சோதித்து வர
ஏகுவேன் விடை நீ கொடு

அடி நீ கோபங்கொள்ள வேண்டாம். உன் அபிப் பிராயப்படியே, அந்த அநுசூயாவைப் பரி சோதித்து வருகிறேன். விடை கொடு.

மனைவியர்: நமஸ்கரிக்கிறேன். சடுதி போய் வாருங்கள்.

[மும்மூர்த்திகள் மனைவியர்களிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போதல்.]

காட்சி முடிவு

களம் : 4 **காட்சி : 4**

இடம்: காடு

காலம்: பிற்பகல்

பாத்திரங்கள்: பிரம்மா, விஷ்ணு, சிவன், விகடன்.

சிவன்: நம் மூவருடைய சங்கதியும் ஒன்றுபோல முடிந்தது. நம் தேவியர்கள் நாம் வருவதற்கு முன்னமே ஒன்றுகூடி ஆலோசனை செய்து இன்ன விதம் செய்வதென்று தீர்மானப்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் கருத்திற்கிணங்கி, நாமும் அநுசூயாவின் பதிவிரதா தருமத்தை சோதித்து வருவதற்கு உடன்பட்டுவிட்டோம். இனி பின் வாங்க முடியாது. ஆகையால் அந்தக் கற்பினளிடத்திற்குப் போக ஒருபாயத்தை ஆலோசித்துச் சொல்லுங்கள்?

பிரம்மா: நாம் முத்தொழில்களுக்குரிய முதல்வர்களாயிருந்தாலும் நம் ஜம்பம் பதிவிரதையரிடம் செல்லாது. அதாவது 'கற்புடைத் தெய்வமில்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்' என்பது பிரசித்தம். ஆகையால் நமக்குத் தனித்தனியாயுள்ள சிருஷ்டி, திதி, சங்காரம், என்ற மூன்று தொழில்களும், பதிவிரதையொருவராலே நடத்தும் வல்லமைக்குள்ளடங்கியிருக்கின்றன. ஆகையினால், அவர்களிடம் போய் காரிய சித்தியோடு மீண்டுவருவதசாத்தியமே. நாமும் மனைவியருக்கு வாக்குத்தானம் செய்துவிட்டு வந்தோம். இனிப் பின் வாங்கவுமியலாது. பதிவிரதையரைச் சோதிப்பதென்றால், கற்பினுறுதியைக் கவனிக்க

வேண்டியதே. அதற்கு மாறுவேடம் அவசியம். இன்னவித மாறு வேடமெடுத்துப் போகவேணு மென்னும் உபாயந்தான் ஆலோசனைக்குத் தென் படவில்லை. என்ன செய்வது?

விஷ்ணு: பிரம்மா! நீ சொல்லியபடிக் கற்பினுறுதி யைக் கவனிக்க வேண்டியதென்றால், அவள் கற்பை நாம் கெடுக்க முயலுவதும், அவள் அக் கெடுதல்களுக்கிடங் கொடாமல் கற்பை உறுதி யாக நிலை நிறுத்திக் கொள்வதாக முடியும்; அப்படி நிகழுங் காலத்தில் அவள் பதிவிரதா தரு மத்தில் சற்று வழுவினவளாக யிருப்பின் நமது காரியம் சித்தி பெறுவது நிச்சயம். இல்லை யேல் நமக்கபாயமுண்டாவது உண்மை. ஏனெ னில், அக்கினி சொரூபம் அனந்தம், அவற் றில் கொடூரமான பசித்தீ, கோபத்தீ, காமத்தீ வகை களிலும் கற்புத்தீ உக்கிரமானது. அந்தக் கற்புத் தீயோ, சொல்லும் நாவையும், நினைக்கும் மனத் தையும் சுடும் வல்லமை பொருந்தியது, ஆகை யால் எந்த மாறு வேஷமெடுத்துப் போனாலும், ஆபத்து நேருமென்பதற்கு ஆட்சேபமில்லை. என்ன செய்யலாம்? தையலார் மய்யலிற்பட் டோர் தமக்கொரு செயலுண்டாமோ? என்றபடி நமது மனைவியர் சொற்குடன் பட்டுத் தொடவும் விடவுமுடியாமல், ஆலமரப் பொந்திலுள்ள குருட் டுக் கண் ஆந்தை போல அங்குமிங்கும் மிரளமிரள விழிக்கலானோம். நங்கையற் சொற்கேட்பதெல் லாம் கேடுவரும் பேருலகோர் நகைப்பர்மாதோ" என்றபடி சிறந்த தேவர்களாகிய நாம் இழிந்த மானிடர்கள் நகைக்கும்படி அபாக்ய நிலையில்

வந்து விட்டோம். இதற்கென்ன செய்யலாம்? எனக்கு ஒரு உபாயமுந்தோன்றவில்லை.

சிவன் : ஆனால் நான் சொல்லுகிறபடி கேளுங்கள்.

பாட்டு

இராகம்: தோடி **தாளம்: ரூபகம்**

பல்லவி

சன்யாசி வேஷங் கொள்வோம் இன்று
தக்கக் கற்பின்மிக்க தையலைச் சோதிக்கச் (ச)

அநுபல்லவி

முன்னூற்று நின்றுனம் மூவரைக் கண்டவள்
முடி வணங்கி விழுந்து கும்பிடும்
படி யிணங்கி மகிழ்ந்து நம்பிடும் (ச)

சரணம்

காவியுடை கட்டிக் கையிற்றிரு வோடு
கண்டருத ராட்ச விபூதிமேனி யோடு
மேவிப்போ மவள் வீடடின்வழி யோடு
வெளிவந்தவ ளெதிர் கண்டடி
தொழுதன்புடன் பணியும்படி (ச)

கண்டு வணங்கி பிச்சைக்கழைப் பாளின்று
காணும் நிர்வாணப் பிச்சையே வேணுமென்று
பெண்டவளைக் கேட்டாலென்ன செய்வா ளின்று
பேணப்படு மூணைத்தர
நாணப்படு வாளித்ததி (ச)

நிருவாணமாய்ப் பிச்சை யிட்டால் கற்புக் கெடும்
நீங்கிப்போ மில்லையென்ரு லில்லறங் கெடும்
இருவகையிற்றர்ம சங்கடமேற் படும்
எடுத்த முயற்சி முடிக்க வதற்கு
அடுத்த நமக்கு வருத்த மெதற்கு (ச)

[மும்மூர்த்திகளும் அநுசூயாவின் கற்பைச் சோதிக்க சன்யாசி வேடமிட்டு பிச்சை கேட்க புறப்பட்டுப் போதல்]

விகடன்: சிவன்தான் பரம்பரையாண்டி, அவர் கையிலே ஓடு கொண்டு அநுதினம் பிட்சையெடுக்கப்பட்டவர். அவர் இப்பொழுது சன்யாசி வேடம் போடுவதில் குற்றமில்லை. இந்த பிரம்மாவோ, உஞ்சவிருத்தி பாப்பான் குலத்திலே முதலாசாமி. அவருமிப்பொழுது சன்யாசி வேடம் போடுவது அகௌரவமாகாது. இந்த விஷ்ணு பகவானே பீதாம்பரதாரி. பரிமளசந்தனுதி மலர்மாலையலங்கார சோபித புருஷோத்தமனுயிற்றே, இவருக்குப் பிடித்த அஷ்டமத்துச் சனியென்ன? ஆண்டி வேடம் போடப்போகிருரே, ஐயோ வெட்கக்கேடு. பெண்டாட்டி சொல்லைக் கேட்டு நடப்பவருக்கெல்லாம் இப்படித்தானையா கேடு சம்பவிக்கும் நன்ருய் நீங்களிதைத் தெரிந்து கொள்ளுங்கள். தலைவிதி, என் பெண்டாட்டி மாத்திரம் ஏதாவது சொன்னுளோ? தவடையிலே யிரண்டடி தடார் தடாரென்று போட்டுப், பல்லையுதிர்த்து விடுவேன். அதுதான் எனக்கு ஒருவரும் பெண் கொடுக்க மாட்டேனென்றதால், நான் விக்னேச்வரரைப் போல், நித்திய பிரம்மசாரியாகித் தண்ணீர் துறை, வழிக்கரைகளிலெல்லாம் லைசென்ஸ்

இல்லாமல் அலைந்து வருகிறேன். இன்னும் என்ன வேடிக்கை நடக்கிறதோ பார்ப்போம். (போக)

காட்சி முடிவு

களம் : 5 **காட்சி : 1**

இடம்—பிரதிஷ்டாவனம்
காலம்—மாலை

பாத்திரங்கள்—அநுசூயா, பிரம்மா, விஷ்ணு, சிவன்.
[மும்மூர்த்திகள் சன்யாசி வேடத்தில் வருதல்]

மும்மூர்த்திகள் : பவதி பிட்சாந்தேகி! பவதி பிட்சாந்தேகி! பவதி பிட்சாந்தேகி!

அநு : (சன்யாசிகளை எதிர்கொண்டழைத்து)

பாட்டு

இராகம்: நாதநாமகிரியை **தாளம்: ஆதி**

பல்லவி

அடிபணிந்தேனுசி தருவீர்
அதிதி சத்காரம் செய்வேன்
அமுதுண்ண வருவீர்

அநுபல்லவி

படியிலெனைத் தொடரும் பாவங்கள் போக்கப்
பலவித அவதியாம் இடருகள் நீக்கப்
இடமெங்குந் ததும்பும் பேரின்பமுண் டாக்க
ஏழையடியாளென்மேற் கருணைக்கண் ணோக்க (அ)

சுவாமிகாள்! தங்கள் திவ்ய தேஜஸ் பரமாத்மா சொரூபம் விளங்குகிறது. ஏழையாகிய என் குடிலுக்குத் தாங்களெழுந்தருளியதை என்னவென்று சொல்லுவது? பூர்வ புண்ய விசேஷமே. அதிதி சத்காரம் செய்வேன் ஆச்ரமத்திற்கு வர வேண்டுகிறேன். கிருபை செய்யவேண்டும்.

மும்மூர்த்திகள்: பாட்டு

இராகம்: கல்யாணி **தாளம்: ஆதி**

துக்டா

இச்சைபோல நீயமுது தருவாயோ
தருவாயோ அமுது தருவாயோ
நிச்சயமாய்ச் சொன்னல் நாங்கள்
நேரில்வரச் சம்மதம்
நீயதற் கிசையா விடில்
சொல்ல வேணு மவ்விதம்
நிகழ்த்த என்ன தாமதம்
நினைக்க வேண்டாங் கற்பிதம்
நேமமா தாமிது ஆதலா லோதுவாய் (இச்)

சிவன்: உனக்கு மங்களமுண்டாகட்டும். நாங்கள் கேட்கும் விதம் நீ எங்களுக்கு இச்சா போஜனம் அளிக்கும் பட்சத்தில் அங்கு வரத் தடையில்லை. நாங்கள் நியமமுடையவர்கள். உன்னல் அவ் விதம் அளிக்க முடியுமோ? நாங்கள் கேட்கும் விதம் உன்னல் அளிக்க முடியாதென்ருல், இப் பொழுதே சொல்லிவிடு. நாங்கள் மீண்டுபோய் வருகிருேம்.

அநு : பாட்டு

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

கண்ணி

இச்சைபோ லேயமுது நிச்சயம் நான் தருவேன்
ஏனைய மெழுந்தருளும்

ஏக சொருபமுணர் ஞான முனிவர்களே
என்னோடெழுந் தருளும்
அதிதி சத்காரம் செய்து உபசரிப்பே னுங்களை
அங்கே எழுந்தருளும்
அதற்குப்பின் னீங்கள் கேட்குவிதத்திலமுதிடுவே
னன்பா யெழுந்தருளும்

சுவாமிகாள்! தாங்கள் எப்பொருளோடு அமுதிடச் சொல்லுகிறீர்களோ அப்பொருளோடு அமுதிடுவேன். தடையில்லை. முன்பு பாத பூஜையான அதிதி சத்காரங்களை முறைப்படி இயற்றுவேன். அதன்பின் உங்களபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்; தடை சொல்லமாட்டேன். வாருங்கள்.

விஷ்ணு: நிச்சயந்தானா?

அநு : நிச்சயமே.

பிரம்மா : பிரமாணத்தோடு சொல்?

அநு : சத்தியமாக நீங்கள் கேட்கும் விதம் இச்சாபோஜனமளிக்கிறேன். ஏனின்னுந்தாமதம் என்னோடு வாருங்கள்.

[அநுசூயா மூவருக்கும் பாத பூஜை செய்தல்]

அநு: பாட்டு

இராகம்: ஆரபி தாளம்: ஆதி

கண்ணி

தங்கள் திருப் பாதமலர்த் தாள்கழுவு மித்தீர்த்தம்
கங்கையிலும் யமுனையிலுங் காவேரி யிலுமேலாம்
அங்கையிலே நான் கொண்டேன் ஆனந்த மாய்நின்றேன்
இங்கெனது சிரந்தெளித்தேன் இடறெல்லாம் போயினவே

சுவாமிகாள்! போஜனத்திற்கு எழுந்தருளுங்கள். உங்களிச்சையெதுவோ வெளியிடுங்கள், எவ்வித போஜனம் வேண்டும்?

மூர்த்திகள்: சந்தோஷம்! சந்தோஷம்!

பாட்டு

இராகம்: பியாகடை தாளம்: ரூபகம்

பல்லவி

மெச்சுவோ முனை யிச்சை யாகிய பிச்சைநீ தருவாய்
மேதினி மீதினி லேயினி (மெ)

அநுபல்லவி

நிச்சய மென்று செப்பினை நின்று
நீ நிருவாணம தாயமுதே தருவாயிது வேளையில் (மெ)

நீ செய்த அதிதிசத்காரம் எங்களைப்பரவசப்படுத்தியது. நாங்கள் கேட்கும் விதம் இச்சா போஜனமளிப்பதாக முன்பு வாக்களித்திருக்கிறாய், ஆகையினாலே, எங்கள் மனோரத நியமப்படி நின் அவயவாதிகள் பரிஷ்காரமாகத் தோற்றும் வண்ணம்

அங்க மீதிலாடையின்றி நிருவாணமாக நின்று அமுதிடுவாயாக.

அநு : பாட்டு

பல்லவி

மறைகளோதிய முனிவரே சொல்லும் இதுவும் ஞாயமதா
மானமிலா மொழி யோதிநீர் (ம)

அநுபல்லவி

இறையு மீறினீர் முறையு மாறினீர்
என்னையே நிருவா ணமதா யிடவோதுகிறீர் தகுமா (ம)

நீங்கள் வேத சாஸ்திர விற்பனர்களாயிருந்தும், தகாதமொழி சொல்லுகிறீர்? தருமம் சகிக்குமா? பூமி பொறுக்குமா? அன்னிய புருஷர்கள் அங்கங்களை நோக்கும்படி, அரிவையர் நிருவாணமாய் வருவது ஞாயமாகாதே? அகஸ்மாத்தாக ஆடைகள் சோர்ந்த மாதர்களைப் பார்க்க நேரிட்டாலும் ஆடவருக்கு மகத்தான பாவமுண்டாகுமென்று ஆகமங்கள் முறையிட்டலறுகின்றனவே, மானமென்பது ஆடவர்கள், ஸ்திரீகள், யாவருக்கும் பொதுவன்றோ? நீங்களெப்படி வாய் கூசாமல், என்னை நிருவாணமாய் பிச்சையிடச் சொல்லுகிறீர்கள். இது தகாது தகாது சொன்னேன். உங்கள் பசி தீரவும், என் விரத மீடேறவும், தெய்வ சம்மதமாகப் போஜனங் கேளுங்கள்.

மூர்த்திகள் : பாட்டு

ஈகுவே னென ஓதினுய் முன்னம் மாறு பேசுதலாகுமா
தேகமேயுடை போய் நிருவாணமாய்

சிரமுதலடி தெரி வகையோடு விரைவினி லிதுபொழுதமுதிடு
லெஜ்ஜை யேனினி இச்சை மேவிய பிட்சை நீ தருவாய்

சிவன்: ஆதியிலே நீ எங்களைக் கண்டு பிச்சைக்குக் கூப்பிடும்போது, எங்களுக்கு நியமமுண்டென்றும், அந்நியமப்படி நாங்கள் கேட்கும் விதம அமுதளிக்க இஷ்டமிருக்கும் பட்சத்தில், அங்கு வரத் தடையில்லையென்றும், அவ்விதத்திற்கு இஷ்டமில்லாத பட்சத்தில், இப்பொழுதே போய்விடுகிறோமென்றும், பரிஷ்காரமாகச் சொன்னோம். அவ்வேளை கேட்டபடி அமுதளிக்கிறேனென்று பிரமாணஞ்செய்து கூட்டிவந்திருக்கிறாய். இனி அந்த வாக்குத்தத்தத்தின்றும் பிரழலாகாது. மனம், வாக்கு, காயம், எனும்கரணங்கள் மூன்றில், நடுநாயகமான வாக்கே சிறந்ததாகும்.

'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் லிழுக்கப்பட்டு,

என்பது வேதவாக்கியம். எவரொருவர் தமது நாவினால் சொல்லியபடி நடக்காதிருப்பாரோ அவர் முடிவில், அசத்தியத்திற்குட்பட்டுப் பல துன்பத்தையடைவர். ஆகையால் நீ வெட்கங் கொள்ளாமல் எங்களுக்கு நிருவாணமாய் நின்று அமுதிடுவாயாக!

அரு: சுவாமிகாள்! மீண்டும் மீண்டும், தகாத மொழிகளைச் சொல்லுகிறீர்கள். இது தருமமாகாது.

பாட்டு

வீணுரை மொழி யாடி நீர் நிருவாண மாய்வர வோதுநீர்
காணுவீ ரென்ன மானமில்லையா
கருதிய நிலையிது கெடுதி வருமென வறிவது தகுதி (ம)

தருமாதருமம் நோக்காமல், கண்டோர் கேட்டோர் அருவருத்து நிந்திக்கும் பாபச் செய்கைகளில் தலைப்பட்டுக் கொள்ளுகிறீர்கள். விபூதி, ருத்ராட்சக் காஷாசங் கொண்ட வேடத்திற்கேனும், இசைந்தபடி நடக்காதவராகின்றீர்.

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக் கோர் வித்து.

என்றதனாலே, பஞ்ச பொறிகளின் வழியே மனைதைச் செலுத்தின், கேடு சம்பவிக்குமேயன்றி நன்மையுண்டாகாது. மனமெனும் பறவையை பிடிப்பதற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து வலைகள் விரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் சாமான்யமானவைகளல்ல. சுருக்கு வலைகள் எப்பொழுது மனப் பறவை அவைகள் ஒன்றன் வழி வந்ததோ உடனே அவ்வலை தானகவே சுருங்கி, அப்பறவையைத் தம்மால் அகப்படுத்திக் கொள்ளும். நீங்கள் இவைகளை நன்குயாலோசித்து உணராமல், மேற்சொல்லிய ஐம்பொறிகளில் தலைமையும், வலிமையும், வேகமுமுள கட்பொறியின் வழி காட்சி திருப்தி எனும் படுகுழியில் விழ என்னை ஆடையின்றி அங்கந் தோன்றும் வண்ணம் நிருவாணமாய் நின்று அமுதிடச் சொல்லுகின்றீர்கள். இது தவசியருக் கொவ்வாத காரியம்.

'வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்,

என்றதால் உங்களுடைய கூடா வொழுக்க நிலையை உம்முள்ளிருக்கும் பிருத்வி, அப்பு, தேயு,

வாயு, ஆகாசமெனும் ஸ்தூலபூத கூறுகளான உள்ளம், மனம், புத்தி, அகங்காரம், என்னும் சூக்கும அந்தக்கரணங்கள் தமக்குள்ளே சிரித்துப் பரிகசிக்கும். வேண்டாம் நான் சொல்லுவதைக் கேளுங்கள். உலகத்திற்கொப்பான இச்சாபோஜன விருப்பத்தைச் சொல்லுங்கள். காலம் நீடிக்காமல் கண நேரத்திலளிக்கிறேன்.

சிவன் : வெண்பா

நீ சம்மதித்தபடி நிர்வாணப் பிச்சை தனை
யீசம்மதித்திலையே லிப்பொழுது—தோஷமீகும்
கோபெங் கொதித்துமெழுங் கோதாயிப் போதுனக்குச்
சாபம் கொடுப்ப துண்மைதான்'

நீ எங்களுக்கு முன்னுல் சம்மதித்து வாக்குறுதி சொல்லியபடியே இப்பொழுது நிருவாணப் பிட்சை கொடுக்க வேண்டும். இல்லையேல் நாங்களுனக்கு மகத்தான கெடுதியுண்டாகச் சாபங் கொடுப்போம். என்ன சொல்லுகிருய்?

அநு : ஓகோ! இதிலேதோ சூதிருக்கிறது. இவர்கள் உண்மையான தவசிகளல்லர்—மாறு வேடங் கொண்டவரென்றே சந்தேகிக்க இடமுண்டாகிறது. நல்லது ஞான திருஷ்டியாலறிவோம்.

(மூக்கில் விரல் வைத்து கண்ணைமூடியோசித்து)

ஆஹா! அறிந்தேன்! அறிந்தேன்! காளைவாகனச் சிவனும், அன்னவாகனப் பிரம்மனும், கெருட வாகன விஷ்ணுவும், என் கற்பைப் பேதிக்கும் நிமித்தமாக, இவ்வேடமிட்டு வந்திருக்கிருர்கள். இனி நாம் தாமதித்திருப்பது தகாது இவர்

களுக்குத் தக்க புத்தியைக் கற்பிக்க வேண்டும்; இதற்கென்ன செய்வது ?

(யோசிக்கிருன்)

விஷ்ணு : என்ன ஆலோசிக்கிருய்?

அநு : கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்—இதோ வந்து விடுகிறேன்.

பிரம்மா : இன்னுமென்ன பொறுப்பது? கேட்ட இச்சாபோஜனம் கொடு. காலதாமதமாகிறது.

அநு : உங்களுக்கு இச்சாபோஜனம் கொடுக்கத்தான் ஆலோசிக்கிறேன். (தனக்குள்) நமது இல்லற தருமம் பழுதுபடாது இவர்களுக்கு நம்மால் ஆகாரம் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் மனேரதமான நிருவாண பிச்சை நமது கற்பு பழுதுபடாவண்ணம் தானமுங் கொடுபட வேண்டும். நம்மை நிருவாணமாக்க எண்ணிய இவர்கள் ஆண், பெண், பாலகர் அருவருக்காமல் நோக்கும் நிருவாணிகளாகி, அவமானமடைய வேண்டும். இவ்வகைகளுக்கு இவர்களை ஆறுமாதக் குழந்தைகளாக ஆக்கி விடுவதே சரி.

சிவன் : சடுதி சடுதி நிருவாண பிட்சை கொடு?

அநு : இதோ பெற்றுக் கொள்ளுங்கள்.

விருத்தம்

ஏறுமே லேறுவானும் எகினமே லேறுவானும்
பாறுமே லேறுவானும் பதிவிரதஞ் சோதிக்க
மீறியே வந்தார் கற்பு மேவினே னெனிலிம்மூவர்
ஆறுமா தக்குழந்தை யாகுவருண்மை தானே

[அநுசூயா திருமூர்த்திகளின் மீது ஜலமெடுத்துத் தெளிக்க உடனே ஆறுமாத குழந்தை உருவாகி விடுகிருர்கள்-அக்குழந்தை களையெடுத்துத் தொட்டிலிற்கிடத்தி தாலாட்டுகிருள்.]

காட்சி முடிவு

களம் : 5 காட்சி : 2

இடம்—கற்பகச்சோலை
காலம்—காலை
பாத்திரங்கள்—நாரதர், பார்வதி. லட்சுமி சரஸ்வதி

[நாரதர் அநுசூயாவின் பெருமையைப் புகழ்ந்து பாடி வருகிருர்.]

நார : பாட்டு

கண்ணிகள்

பதிவிரதை யென்பவ ளநுசூயா
பக்தியில் மிகுந்தவ ளநுசூயா
மதியுணர் மெய்ஞ்ஞானி யநுசூயா
மனநிலை வசமுள்ளா ளநுசூயா
வஞ்சக மற்றவ ளநுசூயா
மாயை விலக்கியவ ளநுசூயா
நெஞ்சிரக்க முள்ளவ ளநுசூயா
நினைவு மறதியில்லா ளநுசூயா
கணவனே தெய்வமென்பா ளநுசூயா
கருதியதை முடிப்பா ளநுசூயா
குணமதிற் சிறந்தவ ளநுசூயா
குறையை நிவர்த்தி செய்வா ளநுசூயா
மாதர்கள் தொழுந்தெய்வ மநுசூயா
வழிதுறை தெரிபவ ளநுசூயா

ஏதுமுவமை யில்லா — ளநுசூயா
இறந்தவர்க் குயிரீவா — ளநுசூயா

சர : நாரதா எங்கிருந்து வருகிருய்?

நார : பிரதிஷ்டாவனத்திலிருந்து வருகிறேன்.

லட்சு : எங்கள் மூவர்களுடைய நாயகர்களைக் கண்டாயா?

நார, ஆம், கண்டேன். அவர்களை மாத்திரம் என்ன? உங்கள் மாமியாரையுங் கண்டேன்.

பார்வ : நாரதா; என்ன பரிகாசம் செய்கிருயோ?

நார : என்ன அம்மணி! அப்படிச் சொல்லுகிறீர்கள்? நானே உங்களைப் பரிகாசம் செய்கிறவன்?

சர : ஆனல் எங்கள் மாமியாரைக் கண்டேனென்கிருயே, எங்களுக்கு மாமியாரேது?

நார: மாமியாரேதென்று கேட்கிறீர்கள்? உங்கள் நாயகருடைய தாய் உங்களுக்கு மாமியாரல்லவோ?

லட்சு : அதென்ன அப்படிச் சொல்லுகிருய்? எங்கள் நாயகருக்குத் தாய்மாரேது?

பார்வ : அப்படியல்ல, என்னுயகன் மூங்கிலிலிருந்து பிறந்தார் — (சரஸ்வதியைக் காட்டி) அவள் புருஷன் தெர்ப்பைப் புல்லிலிருந்து பிறந்தார். (லட்சுமியைக் காட்டி) உன்னுயகன் தூணிலிருந்து பிறந்தார். இவனே வனத்திலிருந்து வருகிருன். ஆகையால் காட்டிலே மூங்கிலையும், தூண் போன்ற மரக்கட்டைகளையும், தருப்பைப்

புல்லேயும் கண்டு அவைகளே நமது நாயகர் களுடைய தாய்மார்களென்று விளேயாட்டாகச் சொல்லுகிருன். ஏன் நாரதா! அப்படித்தானே?

நார: இல்லேயம்மா! உள்ளபடியே உங்கள் நாயகர் களுடைய தாயைக் கண்டு வந்தேன்.

சர: எங்கள் நாயகருக்கு தாய்மாரேது?

நார: தாய்மாரென்ற பன்மை வேண்டாம். ஒருமை யில்தானே பேசுங்கள்.

லட்சு: ஏன் எங்கள் மூவருடைய தாய்மாரென்ருல் பன்மையில்லேயோ?

நார: அது எப்படிப் பன்மையாகும் மூவருக்கும் தனித்தனி தாய்மாரிருந்தால் பன்மைதான் அப்படிக்கில்லாமல், மூவருக்கும் ஒரே தாயாளுல், அது எப்படிப் பன்மையாகும்.

பார்வ: நாரதா! நீ சொல்லியபடி ஒரு தாய் வயிற்றுப் பிள்ளேயென்று வைத்துக் கொள்ளுவோம். எங்கள் நாயகரைப் பெற்ற தாய் யார்?

நார: பெற்றவள்தான் தாயாரோ?

சர: பெற்றவளுந் தாய்தான், பாலூட்டினவளுந் தாய்தான், தாலாட்டினவளுந் தாய்தான், வளர்த் தவளுந் தாய்தான், சுவிகாரங் கொண்டவளுந் தாய்தான்.

நார: அந்த ஐந்து வகைத் தாயில் ஒருவகைத் தாயைத்தான் கண்டு வந்தேனன்று சொல் கிறேன்.

லட்சு: இதென்ன நாரதா; நீ சொல்லுவதெல்லாம் விந்தையாயிருக்கிறது? பிரமசொரூபமாகிய எங்கள் கணவரைப் பெற்ருவது, பாலூட்டியாவது

தாலாட்டியாவது, சுவீகாரங் கொண்டாவது வளர்த்த தாயுண்டா? ஓகோ! நீ கனவு கண்டு வந்தனையா? பிறர் சொல்லக் கேட்டு வந்தனையா?

நார : கனவு காணவில்லை நேரிலே இக்கண்களாலே கண்டேன். பிறர் சொல்லிக் கேட்கவில்லை நேரில் காதுகளாலேயே கேட்டேன்.

பார்வ : என்ன கண்டாய்? என்ன கேட்டாய்?

நார : உருவங்களைக் கண்டேன், குரல்களைக் கேட்டேன்.

லட்சு : என்ன உருவங்களைக் கண்டாய்? என்ன குரல்களைக் கேட்டாய்?

நார : ஆணுருவம் பெண்ணுருவம் கண்டேன், அழுங்குரலும், பாடுங்குரலும் கேட்டேன்.

சர : ஆணுருவம் பெண்ணுருவமுடையவர் யார் யார? அழுத வகை பாடிய வகை என்ன ?

நார : பரிசோதித்தவரே ஆணுருவமுடையவர், பரிசோதிக்கப் பெற்றவளே, பெண்ணுருவ முடையவள், அழுதவகை தோல்விக்கு. பாடிய வகை வெற்றிக்கு.

லட்சு : பரிசோதித்தவர் யார் யார்? பரிசோதிக்கப் பெற்றவள் எவள்? தோல்வியடைந்தவர் யார்? வெற்றியடைந்தவள் யார்?

நார : தோல்வியடைந்தவரும் பரிசோதித்தவரும், திரிமூர்த்திகள் பரிசோதிக்கப் பெற்றவளும் வெற்றியடைந்தவளும் அநுசூயாதேவி.

பார்வ: பிள்ளைகள் அழுவதற்குத் தாய் துக்கப்பட வேண்டியதிருக்க, அவள் பாடினளென்று சந்தோஷ சமாச்சாரமாகச் சொல்லுகிருயே, இது ஞாயமா?

நார: அதென்னமா! அப்படிச் சொல்லுகிறீர்கள்? பிள்ளைகள் குவா, குவாவென்று அழுவதும், தாய் ஆரிரரோ, ஆரிரரோவென்று தாலாட்டுவதும், பாடல் பாடுவதும் சகசந்தானே?

பார்வ: நாரதா! என்ன காலதாமதஞ் செய்கிருய்?

நார: அம்மா! நான் வீண் காலதாமதஞ் செய்ய வில்லையே நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தானே விபரமாகப் பதிற் சொல்லுகிறேன். கேட்க இஷ்டமில்லையானல், நான் இதோ போகிறேன்.

[நகருதல்]

லட்சு: நாரதா! நில்லு நில்லு! வருத்தங்கொள்ளாதே பிள்ளைகளின்னரென்பதையும், தாய் இன்னரென்பதையும் சவிஸ்தாரமாகச் சொல்?

நார: பிள்ளைகள் மூன்று மூர்த்திகள். தாய் ஒரு பதிவிரதை.

பார்வ: நாரதா! உஷார்! பிள்ளைகள் மூன்று மூர்த்திகள் என்ருய். தாய் ஒரு பதிவிரதை என்று ஒரு மானிடப் பெண்ணைக் குறிப்பிட்டாய் முன்பே பிள்ளைகள் அழுததாகவும், பிரஸ்தாபித்திருக்கிருய் (கோபமாய்) ஒரு மானிடப் பெண்ணுக்கு மூன்று மூர்த்திகள் கீழ்ப்படுவார்களா? ஜாக்கிரதையாகப் பேசு!

நார: என்னம்மா கோபித்துக் கொள்கிறீர்கள்? டில்லிக்கு ராஜாவானாலும் பள்ளிக்குப் பிள்ளை தானே?

சர: இருக்கட்டும், இருக்கட்டும், மூன்று மூர்த்திக ளென்றும், ஒரு பதிவிரதை யென்றும், சொன்னயே யொழிய அவர்கள் பெயரை இன்னும் சொல்லவில்லையே?

நார: இன்னும் விளங்கவில்லையோ?

லட்சு: விளங்கினலும் விபரமாகச் சொல்லு!

நார: கேளுங்களம்மா! பிள்ளைகள் உங்கள் நாயகர் களே தாய் அநுசூயாவே

பார்வ: என்ன என்ன!

நார: கற்பைச் சோதித்தவர்களும், தோல்வியடைந்த வர்களும், குழந்தையானவர்களும், உங்கள் நாயகர்களாகிய திருமூர்த்திகளே. கற்பிலுறுதியாக நின்றவளும், வெற்றியடைந்தவளும், குழந்தை யாக்கினவளும், தாலாட்டிக் கொண்டிருப்பவளும் அநுசூயையே – இவ்விஷயங்களை கண்ணலே கண்டுவந்தவனும், காதாலே கேட்டு வந்தவனும் உங்களுக்குச் சொல்லி நின்றவனும் இந்த நாரதரே

லட்சு: ஆ ஆ! என்ன என்ன? இன்னுமொருமுறை விளக்கமாகக் கூறு.

நார: உங்கள் நாயகர் மூவரும் அநுசூயா கற்பைச் சோதித்துத் தோல்வியாகி, அவளாலே குழந்தை களாக்கப்பட்டு, தொட்டிலிலே கிடந்து, அழுது கொண்டிருக்கிறர்கள். அநுசூயா பதிவிரதா

மகத்துவத்தினாலே, வெற்றியடைந்து உங்கள் நாயகர் மூவரையும் குழந்தைகளாக்கித் தொட்டிலிலே கிடத்தி 'கண்ணேயுறங்குறங்கு, கற்கண்டே நித்திரை செய்,' என்று பாடி தாலாட்டிக்கொண்டிருக்கிறாள். நான் நேரிலேயே கண்ணாலே கண்டு, காதாலே கேட்டு வந்தேன். இவ்வளவு தான் சேதி, இப்பொழுது விளங்கி விட்டதா?

பாட்டு

இராகம்: பியாக்கு **தாளம்: ஆதி**

கண்ணிகள்

சுந்தரி யுங்கள் நாதருக்கவர்கள் தாய்
சங்கிலே வார்த்துப் பால் போட்டுகிறார்
சுத்தமாய் நீலாம் புரிராகத் தாலவர்
தூங்குவ தற்குத் தா லாட்டுகிறார்
தாழையு தைக்கிறார் கண்ணைப் பிசைகிறார்
தாயி டுப்பி லேற நத்துகிறார்
தாங்காப் பசியாலே உங்கா உங்கா வென்று
சத் தமிட் டழுது கத்துகிறார்

தோலும் பீதாம்பரம் பத்தாறு வேட்டியும்
சொல்ல வேணுமோ பாழான வண்ணம்
சோதிக்கச் சென்று நிர்வாணப் பிச்சை கேட்டுத்
தோகையால் ஐயோ ஆனாரம் மணம்

மார்க்க மொன்றேதானுண்ட ல்லாநீங்கள் **கொண்ட**
வாட்டத்தை யெந்நாளும் போக்கமாட்டீர்
மாமியாரைப் போற்றிக் கேளுமில்லையேலும்
மணவாள ரைநீரடைய மாட்டீர்

நீங்களிப்போதே அநுசூயாவிடம் போய் மாங்கல்யப் பிச்சை கேளுங்கள். இல்லையேல்

உங்கள் நாதர்களை அடைய மாட்டீர்கள். இதுவே யுபாயம்-இதுவே யுறுதி. நான் போய் வருகிறேன்.

பார்வ: நாரதா! உன் மொழிப்படியே நாங்களங்கு போய் மாங்கல்யப் பிட்சை கேட்கிறோம். நீயும் அங்கு வந்து சேர். போய்வா.

(நாரதர் போகிறார்)

காட்சி முடிவு

களம் : 5 **காட்சி : 3**

இடம்—காடு

காலம்—காலை

பாத்திரங்கள்—அத்திரி முனிவர்

(அத்திரி நிஷ்டையிலிருக்கிறார்)

அத்திரி: (நிஷ்டை தெளிந்து) ஓகோ! இதென்ன விபரீதத்தன்மை? மும்மூர்த்திகளா அடாத செய்கைக்குட்படுவது? முத்தொழில் முதல்வர்கள் தற்காலம் குழந்தைகளான நிமித்தம் உலகச் செயல்கள் யாவுந்தலை தடுமாற்றங்கொண்டன. இனி நாம் சும்மா விருந்தால் சூன்யமாகும்; ஆகையால் நமது ஆச்ரமம் போய்த் தக்க வுபாயம் செய்வோம்.

[போகிறார்.]

காட்சி முடிவு

களம் : 5 காட்சி : 4

இடம்: தேவலோகம்

காலம்: முற்பகல்

பாத்திரங்கள்: இந்திரன், தேவர், முதலியோர்கள்

[தேவலோகத்தில் அக்கினி சுவாலை வீசி இந்திரன் சிம்மாசனம் ஆடுகின்றது.]

இந்திரன்: பாட்டு

இராகம்: பியாக் ஏக தாளம்

துக்டா

இன்று தவாக்கினி யாலே நடுங்கிய
தென்றன் சிம் மாசனம்
யாவரினுலி தானதிவ் வேளை
ஏதுவி மோசனம்
இந்தவேளை வந்ததான தெந்த நெருப்பு
ஏதேதுளன் ஞவிமீதி லில்லைவெறுப்பு
பக்கமிருக்கு மமரரே யாபத்து
மிக்கவிளைந்த தின்று
பாதகமான தீவினை யேது
ஓதுவீரீ தென்று
பராசரன் விஸ்வா மித்திரன்
பகீரதன் தவம்
பண்டே நேரில் கண்டதுண்டோ
இம்மகத் துவம்

தேவர்களே! இதென்ன உற்பாத காலம்? என் சிம்மாசனம் இவ்விதம் அசைவு கொள்ளக்

காரண மேது? பூலோகத்தில் எவராவது தேவ பதவிகளை அடையும் பொருட்டுச் செய்யும் தவ, விரத, ஓம, எக்கிய, யாக கர்மாக்களே இவ்வித அக்கினிச் சுவாலையை வீசி நடுக்கங் கொள்ளச் செய்யும். ஆதி நாளையில் பராசரர் விசுவாமித்திரர், பகீதரர் முதலான தவசிரேஷ்டர் களியற்றிய தவாக்கினியையும் அனுபவித்திருக்கிறோம். அக் காலங்களிலும் இவ்வித அக்கினிச் சுவாலையும், நடுக்கமும், நமக்குண்டானதில்லை இது எவருடைய முயற்சி? ஆராய்ந்து சொல்லுங்கள்.

[நாரதர் வருகை]

சுவாமி: நமஸ்காரம்.

நாரா: கல்யாண்! அமரேசா! என்ன நடுக்கங் கொண்டு நிற்கின்றாய்!

இந்: சுவாமி! என்ன விபரீத காலமோ தெரியவில்லை. சகிக்கக்கூடாத அனல் வீசுவதோடு எனது சிம்மாசனமும், அசைவு கொள்ளுகிறது. அதோ பாருங்கள்!

நாரா: ஆகண்டலா! அத்திரி முனிவருடைய பத்தினி அநுசூயாவினது கற்பின் வன்மையால் திரிமூர்த்திகள் ஆறுமாதக் குழைந்தைகளாகி ஆசிரமத்திலேயே தொட்டிலில் கண் வளருகிறார்கள். அவ்வகையால், முத்தொழில் நடைபெற மாட்டாமையால், இவ்வித ஆபத்து நேர்ந்திருக்கிறது வேறொன்றில்லை.

இந்: அப்படியானல் நாங்களந்த அநுசூயாவாகிய பதிவிரதா சிரோன்மணியின் பாத சேவை வணக்கம் புரிந்து பிராணுபத்தை நீக்கிக்கொள்ள வேண்டும். தாங்களும் உடன்வரப் பிரார்த்திக் கிறேன்.

நார: அப்படியே.

(எல்லோரும் போகிருர்கள்)

காட்சி முடிவு

களம் : 5 **காட்சி : 5**

இடம்: பிரதிஷ்டாவனம்

காலம்: பிற்பகல்

பாத்திரங்கள்: அநுசூயா, பார்வதி, சரஸ்வதி, லட்சுமி, பாலர்கள்.

[அநுசூயா பாலர்களாகிய மும்மூர்த்திகளைத் தொட்டிலிலிட்டு தாலாட்டுகிருள்]

இராகம் : நீலாம்புரி

ஆரிரரோ ஆரிரரோ ஆராரோ ஆராரோ
ஆரிரரோ ஆரிரரோ ஆராரோ, ஆராரோ
கண்ணேயு றங்குறங்கு கற்கண்டே நித்திரைசெய்
விண்ணோர் குறை தவிர்க்கும் மெய்ப்பொருளே கண்வளராய்
பொன்னேயு றங்குறங்கு பூவண்டே நித்திரை செய்
இந்நாள் மகவான ஏந்தலே கண்வளராய்

மாணிக்க முத்தே வயிரமே ரத்தினமே
ஆணிப்பொன் னேமணியே அரசே நீ கண்வளராய்
அப்பாகெங்காதரனே அருமையுள்ள கண்மணியே
இப்பார் செழிக்க வந்த என்னிதியே கண்வளராய்
வண்டார் துளபமணி மாதவனே நாரணனே
கண்டார் புகழவந்த கண்மணியே கண்வளராய்
நற்றவத்தா லேயுதித்த நான்முகனே யென்மகனே
கற்பகமே யாதிமுதற் காரணமே கண்வளராய்

[பார்வதி, சரஸ்வதி, லட்சுமி மூவர்களும் அநுசூயா
விடம் போய்மாங்கல்ய பிட்சை கேட்கிறார்கள்.]

பாட்டு

இராகம்: ஆனந்தபைரவி ஆதி தாளம்

பல்லவி

நீயே கற்புக்குரியவள் பதிவிரதை
நீதி தனிற் பெரியவள் மேன்மையானவள் (நீ)

அநுபல்லவி

மாயா சம் பந்தத்தினு லாயாமலிந்தத்தினம்
சேயானுர் செய்பிழையைத் தாயே பொறுக்கவேணும்
தேடி உனதருளை
நாடி மூவருமொன்ருய்க்
கூடி இனியதுதி
பாடி வந்தோமிங்
கோடி (நீ)

சரணம்

நாவார நாங்களுரைக்க எங்களுயகர்
நாடி வந்தார்கள் பேதிக்க கற்பைச் சோதிக்க
ஏவாது செய்யவில்லை யெய்தாரிருக்க வம்பை
நோவாருலகிலுண்டோ நோக்காதிருத்தல் நன்றோ
நொந்தோம் வாடி மனமெ
லிந்தோம் மிகுபுகழ்மொ
ழிந்தோம் உனதருகில்
வந்தோம் பாதம்
பணிந்தோம் (நீ)

[தேவர்கள் அநுசூயாவிடம் வேண்டுதல்]

தேவர்கள் : பாட்டு

இராகம்: பியாக் தாளம்: ஆதி

துக்டா

மாதா வே மகிழுவாய் நீ
வாழ்த்திச் சிரந்தாழ்த்தி
வந்தன மிங்கு தந்தன மன்பு
கொண்டு கண்பாராய்
மதிமேவு மாதவ மேயுருவாகிய மாதரசி (மா)
சோதனை நாடி மூவர்கள் கூடி
பாலர்களாக மாறினர் ரூபம்
உன்றன் தூய
கற்பினதற்புதம் இவ்புவி செப்பிடுமே (மா)

அம்மா; தயவு செய்து மூவர்களையும் பார்த்து, அனுக்கிரகம் செய்யவேணும். (அத்திரி முனிவர் வருகிறார்)

அத்: அநுசூயா! சாந்தமாகுவாய் உலக பதிவிரதா தரும மகத்துவம் விளக்கிக் காட்ட வேண்டு மென்றே இக்காரிய சம்பவங்கள் நடந்தேறின. ஆகையால் நீ முன்போல் இக்குழந்தைகள் மும்மூர்த்திகளாகும் வண்ணம் சாப விமோசனம் செய்வாயாக.

அநு: தேவரீர் சித்தம் என் பாக்கியம். (மும்மூர்த்தி களின் தேவிகளைப்பார்த்து) உங்கள் நாயகர்கள் விரும்பிய பிட்சை கொடுத்த நான்; நீங்கள் விரும்பிய மாங்கல்ய பிட்சையும் கொடுக்கிறேன்.

வெண்பா

என்பதியின் சொற்றவரு தெந்நாளு மன்னவர்க்கு
அன்புடைய நற்றேவி யாவேனேல்-துன்பமுறு
மிங்கிவர் சா பந்தாங்கு மிவ்வுருவம் நீங்கிமுன் போல்
தங்களுருவம் பெறுவர் தான்

[குழந்தைகளாகிய மும்மூர்த்திகள் மீது அநுசூயா ஜலத்தை தெளிக்கிருள். மும்மூர்த்திகள் உரு மாறி முன்போலாகி விடுகிருர்கள்.]

மூம்ர்த்திகள்: அம்மா; பதிவிரதா! நின்மகிமை சந்திர சூரியருள்ளவரை எங்கும் விளங்கிக் கொண்டிருக் கும் நீ எங்களைக் குழந்தைகளாக்கித் தாலாட்டின படியால், எங்களுக்கு அன்னையாகினை. சுவிகாரஞ் செய்து கொண்ட, அதாவது பிள்ளையில்லாத தாலோ, வேறு நன்மையைக் குறித்தோ குழந்தை களைத் தெத்தெடுத்துக் கொள்வாரைப்போல் எங்கள் மூவரையும் பாலகராக்கிக் கொண்டதால்,

நாங்கள் மூவரும் ஒரே ரூபமாகி சுவீகார மூவர் அதாவது தத்துமூவர் ஆகவே, "தத்தாத்திரேயர்" என்னும் நாமதேயத்தோடு எந்நாளும் உன் சுவீகார புத்திரராவோம்.

முற்றிற்று

சுபம்! சுபம்!! சுபம்!!!

இராகம்: பியாக் **தாளம்: ஆதி**

துக்டா

பதிவிரதா தர்மம் மிகுந்து விளங்கும்
பரதநாடு மங்களம் பரதநாடு மங்களம்
ஆரணம் நாலு மங்களம்
பாவையார் அநுசூயா நர்மதையார்
பாலரான மூவர் அன்றோர் தேவிமார்
பலமேலோர் இந்தப் பதிவாழ்வோர் கல்வி
நலனுய்வோர் தர்ம நடையாள்வோர்
நாள்தோறு மேன்மையாய் வாழ்கவே
மங்களம் (ப)

கர்வி பார்ஸ்

காட்சி : 1

இடம்: வீடு

காலம்: முற்பகல்

பாத்திரங்கள்: கெர்வி, அநுபவானந்தன்

[அநுபவானந்தன் சிவபூஜை பண்ணிக்கொண் டிருக்கிறன்]

கர்வி: என்னுங்கோ! உங்களைத்தானே, நான் சொல்லுவது காது கேட்கவில்லையோ? எழுந் திருங்கோன்ன! உங்களைத்தானே நானென் னவோ வருந்துகிறேனே.

அநுபா: ஏண்டி அண்டங்காக்கைபோல் கர்று கர் றென்று கத்துகிறே இரு வருகிறேன்.

கர்வி: இரு வர்ரேனு! எனக்கோ தாகமதிகரித்துசாகிருப் போல வர்ரது இன்னுமென்ன சாமி பிருர்த்தனை ஒழியவில்லையா? போதும் போதும் சாமிக்குப் பதிலாக அம்மனே பிரத்யட்சமாகிவிட்டேன். எழுந்து எங்கேயாவது போய்ச் சீக்கிரம் எனக்கு ஜலங்கொண்டு வந்து கொடுங்கோ.

அநுபா: அடி உனக்கு புண்ணியமாகிப் போகிறது. கொஞ்ச நேரம் பொறுத்துக்கொள். நான் தேவ பிரார்த்தனையை முடித்துவிட்டு வருகிறேன்.

கர்வி: உம் தேவபிரார்த்தனையுமாச்சு நீருமாச்சு. நான் தாகத்தினலே சாகிருப்போல வருகிறதென்று

சொல்லுகிறேன். இன்னும் சாமி கும்பிடுகிறதை வீட்டுவர மனமில்லையா? உமக்கு கொண்ட பெண்டாட்டிமேல் பிரியமில்லை, பச்சாதபமில்லை, மனமிரக்கமில்லை, கருணையில்லை, அன்பில்லை, விசுவாசமில்லை. ஆசையில்லை, நேசமில்லை, பாச மில்லை, உங்களையில்லாமலெனக்கு ஊழிய வேலை செய்யயாரிருக்கிறார்கள். நீங்கள்தானே எனக்கு பணிவிடை செய்ய வேண்டும். எழுந்து வாருங்கோ.

அநுபா: ஏண்டி இதுவென்ன தொந்திரவாயிருக் கிறது? புருஷன் சொல்லைக் கேட்டு அவனுக்குப் பெண்டாட்டி பணிவிடை செய்ய வேண்டுமா? பெண்டாட்டி சொல்லைக் கேட்டுப் புருஷன் பணிவிடை செய்ய வேண்டுமா? அடுத்த வீடு அண்டை வீடுகளிலெல்லாம் பெண்கள் புருஷ னையா ஊழியஞ் செய்யச் சொல்லுகிறார்கள்? அந்த வீடுகளிலெல்லாம் புருஷன் பெண்டாட்டியென்ற முறையும், இந்த வீட்டில் மாத்திரம் பெண்டாட்டி புருஷன் என்ற முறையுமாக்கும். என்னையேண்டி தொந்தரவு செய்கிறாய்? போனால் போகுது கொஞ் சம் பொறுத்துக்கொள். அறைகுறையாயிருக்கும் தேவபிரார்த்தனையை முடித்துவிட்டு எழுந்து போய் உனக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறேன். அதுவரை உனது கழுதைக் குரலைக் காட்டாமல், அடக்கி வைத்துக் கொள்ளடி.

கர்வி: ஏது சமாச்சாரந்தெரியவில்லை? என்னையா கழுதைக் குரலைக்காட்டாதே என்கிறீர்? உமது குரல் தேவ, கந்தர்வ, கானமான வெறிநாய்க்குரல் தான். ஏது? வாய்மிஞ்சிப் பேசுகிறீர் போகட்டும்

நமது புருஷனை எதிர்த்துப் பேசினால் நமது பதிவிரதா தருமத்திற்கு பழுதுவருமேயென்று எவ்வளவோ அடங்கி ஒடுங்கி நான் உத்தமமாக நடந்தால், நீரென்ன இப்படிப் பித்துப் பிடித்த பேய்க்குரங்கு போல் கீச்சு கீச்சென்று கத்துகிறீர்? சற்று நேரத்தில் என் சுய ரூபத்தைக் காட்டி விடுகிறேன்பாரும். மரியாதையாக எழுந்து எனக்குத் தாகத்திற்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறீரா என்ன?

(கையைப்பிடித்திழுக்கிருன்)

அநுபா: ஓகோ! மோசம் வந்துவிட்டது; இனியவள் லேசில் நம்மைவிடமாட்டாள். தேவபிரார்த்தனை கெட்டே போய்விட்டது; சிவசிவா!

தர்க்கப்பாட்டு

இராகம்: பியாகு ஏக தாளம்

கண்ணி

கர்வி: தாகவிடாய்ப்பட்டு நான் மெலிகின்றேன்
ஜலம் வேண்டு மிப்பொழுது கால
தாமதஞ் செய்துநீர் சாமிலையக்கும் பிட்டால்
தீருமோ என் பழுது
தீருமோ என் பழுது
சஞ்சல, மிஞ்சினேன், கொஞ்சமேனும்
தயை தாட்சண்ய முமக்கில்லை
தயை தாட்சண்ய முமக்கில்லை
தயை! தாட்சண்ய முமக்கில்லை (தா)

அநுபா: தேவபிரார்த்தனை பூர்த்தியாக வில்லை
தேவி பொறுத்துக் கொள்ளு அப்பால்
திட்டமாய்த் தண்ணீர் கொடுப்பேன் விடாய்பட்ட
துக்கத்தை விட்டுத் தள்ளு
துக்கத்தை விட்டுத் தள்ளு
செய்வினை கைவிடில் உய்வதேது
தேவியென் வார்த்தை மீருதே
தேவியென் வார்த்தை மீருதே
தேவியென் வார்த்தை மீருதே (தே)

கர்வி: என்ன சொன்னலு மவ் வார்த்தை செவிகொள்ள
இஷ்டமில்லை யெனக்கு நீர்
இப்பொழுதே தந்தால் ஆவி நிலை நிற்கும்
அப்பால் தண்ணீ ரெதற்கு
அப்பால் தண்ணீ ரெதற்கு
ஏனின்னுந் தாமதம் தாரும் நீரை
இல்லையேல் நான்விட மாட்டேன்
இல்லையேல் நான்விட மாட்டேன்
இல்லையேல் நான்விட மாட்டேன் (தா)

அநுபா: பாவி பழிகாரி சண்டாளி தியானஞ்செய்
பாவனை கெட்ட தடி என்
பக்கத்தில் வந்து தண்ணீர் கொடு வென்றுவா
துபகர்ந் திட்டதடி
வாதுபகர்ந் திட்டதடி
பாதகி தீதிது வேதை யாகுதே
பக்திக்கு விக்கினஞ் செய்தாய்
பக்திக்கு விக்கினம் செய்தாய்
பக்திக்கு விக்கினம் செய்தாய் (தே)

அடி பிரார்த்தனை கெட்டது கெட்டுப் போய் விட்டது இனி என்ன உனது கோரிக்கையாவது நிறைவேறட்டும். இதோ தாகத்துக்கு ஜலம்

கொண்டு வந்து கொடுக்கிறேன். பாத்திரத்தை யெடுத்துக் கொடு.

கர்வி: பாத்திரத்தையெடுத்து உமக்குக் கையிலே கொடுக்கணுமாக்கும்? ஏது கெட்டுப்போய்விட்டாற்போலிருக்கிறது? அதோ அந்த மூலையிலே எங்கேயாவது கிடக்கும் தேடிப்பார்த்து எடுத்துக் கொண்டு போய் சீக்கிரம் ஜலம் கொண்டு வந்து தாரும்.

அநுபா: வாறு கோலுக்குப் பட்டுக்குஞ்சம் கட்டியது போல் இதில் வாருங்களென்ன மரியாதை? என் தலைவிதி இதோ போகிறேன். கோபித்துக் கொள்ளாதே தாயே!

[செம்பை எடுத்துக் கொண்டு போகிறார்]

காட்சி முடிவு

காட்சி : 2

இடம் : வீதி

காலம் : முற்பகல்

பாத்திரங்கள் : அனுபாவனந்தன், ஆகமானந்தன்.

(ஆகமானந்தன் : தன்நிலையை உணர்ந்து பாடிக் கொண்டு வருகிறான்.)

ஆகமா: பாட்டு

இராகம் : கல்யாணி **தாளம்: ஆதி**

பல்லவி

கல்யாணம் செய்வது தகாது கொண்ட
கனம் பெருமை யழிய வரும்பல தீது. (க)

அநுபல்லவி

அல்லும் பகலுமிகு அவஸ்தையுண்டாக்கும்
ஆத்மஞானநிலை அறிவையும் போக்கும் (க)

சரணம்

பெண்டுகொண்டபோ துண்டு விகாரம்
பிள்ளையொன்றுவரில் பெரிய விசாரம்
பண்டுகண்டிடா புதுவிவ காரம்
பலத்துக்கொள்ளுங்குடும்ப பாரமபாரம்
பட்டுவேணும்நகை நட்டுவேணும்—தட்டு
முட்டுவேணும் படிக் கட்டுவேணும்—தங்கப்
பணிகள்வேணும் சித்ர அணிகள்வேணும்—மாலை
மணிகள்வேணும் பலகணிகள்வேணும்—ஆடு
மாடுவேணும் தோட்டக் காடுவேணும்—மேடை
வீடுவேணும் பாத ஜோடுவேணும்—பானை
சட்டிவேணும் சிறு முட்டிவேணும்—பிள்ளைத்
தொட்டி வேணும் மரப் பெட்டிவேணும்—ஏறும்
வண்டிவேணும் ரத்னக் கண்டிவேணும்—நல்ல
உண்டிவேணும் இவை
யாவும் ஒரே நிறைவா யிருந்தாலும்
யானுரைப்பேனதைக் கவனமாய்க் கேளும் (க)

பெண்டுபிள்ளை நோய் அடைவதுந்துன்பம்
பெற்றநகைப் பொருள் அழிவதுந்துன்பம்
அண்டுவார்வழக் கிடுவதுந்துன்பம்
அந்தரங்கம்வெளி யாவதுந்துன்பம்
அலைவதுந் துன்பம் உலைவந் துன்பம்
மலைவதுந் துன்பம் கலைவதுந் துன்பம்
அடுத்ததுந்துன்பம் எடுத்ததுந்துன்பம்
விடுத்ததுந்துன்பம் தொடுத்ததுந்துன்பம்
அண்ணன் தம்பியுற வாவதுந்துன்பம்
அவரை நீங்கியப்பால் போவதுந்துன்பம்
எண்ணிவெண்ணமுடி யாததுந்துன்பம்
எல்லாமுலகிலே துன்பந்துன்பம் (க)

கல்யாணம் செய்து கொள்வதிலே மிகுந்த கெடுதியிருக்கிறது என்ன செய்யலாம்? என்னுடைய தாய் தந்தையர் என்னுடைய சிறுவயதிலேயே எனக்கு மணத்தை நிறைவேற்றி வைத்து விட்டார்கள். என் கஷ்டத்தை யாரிடம் சொல்லி யழுவது? ஒரு நாளா இரண்டு நாளா? என் வருத்தத்தைச் சொல்லிக் கொள்ள? இப்பொழுதும் என் பெண்டாட்டியை நினைத்துக் கொண்டால் என்னுடம்பு முழுவதும் நடுநடுங்குகிறது. ஒரு நாளேனும் மனத்திருப்தி யோடிருந்ததில்லை, உப்பில்லை, புளியில்லை, கடுகில்லை, வெந்தயமில்லை, சட்டியில்லை, பானையில்லை, அம்மியில்லை, குழவியில்லை, சேலையில்லை, நகையில்லை என்று ஒரு நாளேனும் தவருமல், இந்த ராமாயணப் பாடத்தை என் பெண்டாட்டி பாராயணஞ் செய்யாதிருக்க மாட்டாள். இதுதான் போகட்டும் இவைகளுக்காவது அப்போதைக் கப்போது ஈடுகொடுத்து வந்தாலும், ஒரு நாளாவது வயிருர உண்டிருப்பேனு? இல்லை இல்லை. நித்ய ஏகாதசி விரதந்தான் நான் அனுபவித்தது. பெண்டாட்டியானவள் புருஷன் இலையைப் பார்த்து ஏதாவது காய்கறி வகைகளை வைத்து உபசரித்தாலல்லவோ சாப்பிடத திருப்தியுண்டாகும். இலையில் சாதங் கறி வகைகள் ஒன்றுமில்லாமல் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான். என் பெண்டாட்டி அடுப்பங்கரையில் தியான யோக மூதேவி ஆராதனை செய்து கொண்டிருப்பாள். நான் வெகுநேரம் காத்திருந்து விட்டு எழுந்து போவதுதான் மரியாதை. தப்பித் தவறி அடியேயென்று கூபபிட்டுவிட்டால் போதும்

உடனே விளக்குமாற்றை யெடுத்து வந்து என் உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுமுள்ள குப்பைகளைக் கூட்டிச் சுத்தஞ் செய்துவிடுவாள். அண்டையயலார் பார்த்து ஏனப்படிச் செய்தாய் என்று கேட்டால் நன்ருய்ச் சொன்னீர்கள் பதிவிரதா ஸ்திரீகள் கணவன் சொல்லைத் தவறி நடக்கலாமா? என் புருஷன் என்னைக் கூப்பிட்டு அடி யென்ருர் நான் அவர் கட்டளைக்கு மாறு செய்யாமல் அடித்தேனென்பாள் இவ்வளவுதானே? இதோ பாருங்கள் என் தலை ஏனிவ்வளவு வழுக்கையாயிருக்கிறது? கறியிலே கொஞ்சம் லவணங் குறைவாயிருக்கிறதென்று சொன்னல் போதும் உடனே குழம்புச் சட்டியைத் தூக்கி வந்து என் தலையிற் போட்டுடைத்து விடுவாள். இப்படிப் பல நாளாய்ச் சட்டி உடைபட்டு உடைபட்டுத் தான் என் தலையும் வழுக்கலாயிற்று. நானும் சன்யாசியாக வந்துவிட்டேன். இனி என்ன செய்யலாம்? நாம் பூர்வத்தில் செய்த வினைப் பயனிது. இந்த செட்டிச் சத்திரத்தில் சாப்பாட்டுக்குச் சீட்டுக் கொடுக்கிருர்களாம் அங்கு போவோம்.

[எதிரில் வந்த அநுபவானந்தனைக் கண்டு]

ஆகமா: இவர் யார் எங்கேயோ பார்த்த முகம் போலிலிருக்கிறதே?

அநுபா: இவர் யார் எங்கேயோ பார்த்தமுகம் போலிருக்கிறதே சுவாமிகாள்! தங்களது வாசஸ்தலம் யாது?

ஆகமா: இதேது எங்கேயோ கேட்ட குரல் போலிருக்கிறதே?

அநுபா: சுவாமிகாள்! அடியேன் பேரில் கிருபை பாலித்துத் தங்களது வாசஸ்தலத்தைச் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகமா: என் சுய வாசஸ்தலம் ஸ்ரீ சுதந்திர சித்த சரணபுரி.

அநுபா: சுவாமிகாள்! சித்தசரணபுரி எனக்குத் தெரியும். அங்குகூட எனக்குப் பள்ளிக்கூடத் தோழன் ஒருவனிருக்கிறுன். அதற்குமேலே என்னவோ சுதந்திரமென்னும் அடைமொழி தங்கள் திரு வாக்கினின்று உதயமானதே என்ன?

ஆகமா: அதுவா! க்ஷேத்திர மகிமையைச் சேர்ந்த விசேஷ வாக்கியம். அது இருக்கட்டும் சித்த சரணபுரியில் ஒரு பள்ளிக்கூடத் தோழனிருப்ப தாக மொழிந்தாயே அவன் நாமதேயமென்ன?

அநுபா: அவன் பெயர் ஆகமானந்தன். (பெயரைச் சொன்னதும் ஆகமானந்தன், அநுபவானந்தனைக் கட்டித் தழுவுகிறுன்) நேசா நமோ நமஹ! மித்திரா! ஏன் இவ்வித சன்யாசக் கோலங் கொண்டாய் ?

ஆகமா: அவ்விபரங்களையெல்லாம் அப்பால் சாவ தானமாகச் சொல்லுகிறேன். இப்பொழுது எனக்குப் பசி அதிகமாயிருக்கிறது. கொஞ்சம் ஆகாரத்துக்கு ஏற்பாடு செய்.

அநுபா: மித்திரா! அதோ தெரிகிறது பார் அதுதான் எனது வீடு. நீ இந்தக் குளத்தில் ஸ்நானம் செய்து ஜெபதபங்களை முடித்துக் கொண்டு இரு.

அதற்குள் நான் வீட்டுக்குப் போய் ஆகாரத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து வருகிறேன்.

ஆகமா: ஆனல் அதிசீக்கிரமாகவே ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்துவிடு.

அநுபா: அப்படியே வந்துவிடுகிறேன் (தனியாக யோசிக்கிருன்) இதற்கென்ன செய்வது? என் பெண்டாட்டியோ விருந்தென்றபதத்தைக் கேட்டதும், பழைய விளக்குமாற்றைக் கையிலெடுத்துக் கொள்வாளே, இவனே ஆப்தமான நண்பன். பசியால் புழுவைப்போல் துடிக்கிருன். நாமும் கௌரவமாக ஸ்நானம் செய்யச் சொல்லிவிட்டோம்—எப்படியாவது நம் பெண்டாட்டியை இந்தச் செய்கைக்குடன்படுத்திவிட வேண்டும். 'மாதர்க்கிதம்' என்னும் சாஸ்திரஞ் சொல்லுகிறதே, இதமான வார்த்தை சொன்னல் நம் பெண்டாட்டி வசப்படமாட்டாளா பார்த்துக் கொள்வோம்.

(போகிருன்)

காட்சி முடிவு

காட்சி : 3

இடம்: வீடு

காலம்: பிற்பகல்

பாத்திரங்கள்: கெர்வி, அநுபவானந்தன், விகடன்

[அநுபவானந்தன் வரவில்லையென்று கெர்வி வைது கொண்டிருக்கிருள்]

கர்வி : பாட்டு

கண்ணிகள்

தூக்கங்கெட்டு நான் காத்திருக்கவைத்து வெளியேறிப்
போனவன்
தொடர்ந்துவரட்டும் விரட்டுறே னடித்து
சும்மா விட்டுவிட்டால் கண்ணால் பார்க்கமாட்டான்
அம்மா கற்பித்தாலும் பின்னால் கேட்க மாட்டான் (தூ)

ஏக்கம்பிடிக்க ஏச்சும் விள்ளுகிறேன் அவனிரண்டு கன்னத்தில்
இடித்து வெளியே பிடித்துத் தள்ளுகிறேன்
இத்தனை நாளாய்க் கொடுத்த விளக்காரம்
கெட்டது நானின் றுதைப்பது மச்சாரம் (தூ)

யாரென்றென்னைய வன்னினைத்துக் கொண்டான் இன்று
தலைமயிர் பற்றி
அடித்துதைக் கிறேன் சேதி என்ன கண்டான்
அச்சமிருந் திடில் நிற்பதெந் தவிதம்
கொச்சைமிகுந் தவம் மட்டி கொண்ட மதம் (தூ)

ஊரிலுள்ளவர் கூடியுஞ் சிரிக்க அவன் வாழும்பவுசு
ஓதிமற்றவர்க் கொருவர்விஸ் தரிக்க
ஊசல் போலேயவன் மூலையிலே தேடி
ஓட ஓட அடி போடுவேனு ஞேடி (தூ)

அந்தப் பாழாப்போவான் வரட்டும் அப்பாலே சொல்லுகிறேன். நான் எவ்வளவு நேரம் காத் திருப்பது இவனுக்கு இவ்வளவு ரத்தக் கொழுப்பா ஆகட்டும்.

[அநுபவானந்தன் வருகிறான்]

கர்வி: வாருங்கள்! வாருங்கள்! இதுவரை எங்கே போயிருந்தீர்கள்?

அநுபா: எங்கே போனேன் நமது வயலைச் சுற்றிப் பார்க்கப் போனேன். அநுதினம் நமது வயலைச் சுற்றிப் பார்க்காது போனால், விளைவு எப்படிக் காணும்? பட்டி மாடு பயிரை மேய்ந்து அழித்து விடாதோ?

கர்வி: ஆம், அதுவும் நமது சொந்த வேலையாயிருந்தாலும் இங்கே யெல்லாம் பாருங்கோ, எவ்வளவு குப்பை இவைகளை கூட்டுவது யாரு? மாட்டுத் தொழு நிறைய சாணம் முறைத்துப் போய்க கிடக்கிறது. கழிச்சலிலே போற பசுவும் எருமையும் இப்படித்தானு? கெட்டியாய் சாணம் போடாமல் சளசளவென ஆபாசப்படுத்தி வைக்கும்? இந்த மாட்டுத் தொழுவை சுத்தம் செய்து சாணியை எருவாட்டி தட்டினுலென்ன? உமது கையிலே பாம்பா கடித்திருக்கிறது. அதுதான் போகட்டும்; எனக்கு முன்னே எழுந்த நீர் சமீபத்திலுள்ள பூர்வானந்தன் கேணிக்குப் போய்ப் பத்துத் தவலைத் தண்ணீர் சேர்த்து தூக்கிக் கொண்டு வந்து ஒரு அண்டாவிலே விட்டு வெந்நீர் வைத்து விட்டு நேற்று நான் கொடியில் களைந்து போட்டிருக்கும் மஸ்லீன் சேலையைத் துவைத்து உலர்த்தி விட்டுப் போனுலென்ன? நான் நித்திரை நீங்கி அழகாக ஸ்நானம் செய்து சேலையை கட்டிக் கொள்ளஎவ்வளவு சௌகர்யமாயிருக்கும்.

அநுபா: என்னடி வீடு கூட்டுவது? சாணந் தட்டுவது? தண்ணீரெடுப்பது? வெந்நீர் போடுவது?

சேலை துவைப்பது? இவைகளை யெல்லாம் புருஷன் செய்கிற வேலைகளோ?

விகடன்: நீங்களென்னையா யோசிக்கிறீர்கள்? இந்த அம்மாள் இந்த அய்யாவுடைய அட்ரஸை வாசிக்கிருர்கள். ஏனெனில் இந்தையாவுடைய அட்ரசு நீளமாயிருப்பதால், அதைக்கூடியவரை எவ்வளவு சுருக்கமாக்கலாமென்று சார்ட்டாண்டு எடுத்துப் பார்க்கிருர்கள். வேருென்றுமில்லை. நீங்கள் இன்னும் கொஞ்சம் பொறுமையாயிருந்து மேல் வெளிவரும் அட்ரஸின் சிறப்பையும் கவனியுங்கள்.

கர்வி: ஏண்டா! நீதான் சொல்லேன். நமது புருஷனுயிற்றே! கடினமான வேலைகளை விதிக்கக்கூடாதென்று எளிதான வேலைகளை விதித்தால் இவர் இவ்வகைக்கு ஆலோசிப்பது தருமமா?

விகடன்: ஏனையா! அந்தம்மாளைக் கேள்வி கேட்கிறீர்? நாடகக் கம்பெனிகளிலே வேஷம் போடும் பெண்களுக்கு அக்கம்பெனிகளிலே ஆக்டராகவும், அப்பெண்களுக்கு புருஷர்களாகவும் ஏற்படும் சில பேர்வழிகள் தாமாகவே அடுப்புப் பற்றவைத்து எண்ணெய்காய்ச்சி, தங்களாலே தாங்கள் கற்ற தாள வரிசையோடு எண்ணை தேய்த்து அரைப்பு தேய்த்து முழுக்காட்டி கூந்தலுலர்த்தி வைத்து சேலையை கொய்து கொடுத்து வந்ததையும், வருவதையும், இனி வரப்போகிறதையும், சில கவிராயர்கள் பாடல் மூலமாக வெளியாக்கியிருக்கிருர்களே! அப்பாடலையேனும் நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? இந்த அம்மாள் தங்கள் பேரிலே

பரிபூரண கிருபை வைத்து, கடினமான வேலை களைச் செய்ய ஏவாமல், எளிதான வேலையைச் செய்யச் சொன்னால், ஏனந்தம்மாளை கேள்வி கேட்கிறீர்? இனி அவ்விதமான கடின வேலை களைச் செய்யும்படியாக ஏற்பட்டாலுமேற்படும். சீக்கிரம் அந்தம்மாள் சொல்லிய எளிதான வேலையை முடித்துவிடும்.

கர்வி: அப்படிச் சொல்லு.

விகடன்: ஆமாம் அம்மா! உங்களுடைய தயவும், பச்சாத்தாபமும், இரக்கச்சிந்தையும், யாருக்கு வரும்? கண்டோர் மீதெல்லாம் அன்பு செய்யும் பொருட்டுக் காதறுத்து ஒட்டவைத்து கல்தோடு போட்ட கழுதைக்கும் வராது.

அநுபா: போதும் போதும்! எனது மேல்விலாசம் அத்தோடு நிற்கட்டும். ஒரு சமாச்சாரமல்லவா?

கர்வி: அது என்ன சமாச்சாரம்?

அநுபா: உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளு கிறேன் நீ கோபித்துக் கொள்ளக்கூடாது.

கர்வி: கோபிக்கவில்லை, சும்மா சொல்லும்.

அநுபா: சித்த சரணபுரியில் என்னோடு படித்த தோழ னொருவனுண்டு.

கர்வி: இருந்தாலென்ன?

அநுபா: இருந்தாலென்ன தோஷமில்லை.

கர்வி: ஏன் வாயை மெல்லுகிறீர் சும்மா சொல்லும்?

அநுபா: அவன் என்னை கண்டு கொண்டான்.

கர்வி: கண்டு கொண்டாலென்ன?

அநுபா: அவனுக்கு பசிக்குதாம்.

கர்வி: பசித்தால் செட்டி சத்திரம் இருக்கவேயிருக்கு ஒரு சீட்டு வாங்கிக் கொள்ளச் சொல்வதுதானே?

அநுபா: அப்படிச் செய்வது நமக்கு கௌரவமா?

கர்வி: அப்படி இ-இ-இ (என்று வலிக்கிருள்)

அநுபா: ஒன்றுமில்லை.

கர்வி: என்ன ஒன்றுமில்லை?

அநுபா: அப்படிச் செய்வது நமக்கு கௌரவமா என்று சொன்னேன்.

கர்வி: நமக்கென்ன கௌரவக் குறைவு வரப் போகிறது? நாமா செட்டி சத்திரத்தில் சீட்டு வாங்கப் போகிறேம். அவனே போய் வாங்கிக் கொள்ளட்டும்.

அநுபா: அப்படியில்லை நம்மிடம் வந்தவனுக்கு ஒரு நாள் விருந்தேனும் செய்ய வேண்டாமா?

கர்வி: என்ன கூசாமல் பேசிவிட்டீர்! உமக்கு வடிச்சு கொட்டுவது போதாமல், ஊரிலிருந்து வருபவனுக் கெல்லாம் என்னைப் பெண்டாட்டியாக்கப் பாத் தீரோ? நானென்ன புழுக்கைச் சிறுக்கியென்று நினைத்தீரோ? உமக்குப் பெண்டாட்டி உமக்கு

வடிச்சுக் கொட்டுவதில் தவறில்லே. ஊரிலிருப்பவனுக்கெல்லாம் என்னேப் பெண்டாட்டியாக்கப் பார்க்கிறீரே மானமில்லே? வெட்கமில்லே? ரோசமில்லே? தூ...அறிவில்லாத மடையன் சாம்பிராணி

தர்க்கப்பாட்டு

இராகம் : பியாகு   தாளம் : ஆதி

கண்ணிகள்

வித்தகநீதி விருந்திடவோதி
விட்டீர் நீரறியீரோவிக் கர்வியின் சேதி
விளக்கு மாற்றைநான் எடுத்து நீட்டுவேன்
விரட்டி யோட்டுவே னடித்தவ் வீணனேமோதி

அநுபா: கோபமாகுமா கொள்ளாதே நீ சும்மா
கொஞ்சமாயினுந்தையயிவ் வேலே செய்யம்மா
கூட வாசித்தான் அந்நாளில் நேசித்தான்
கூப்பிட்டேன் சாப்பாட்டுக்காகத் தோப்பில்
பேசித்தான்

கர்வி : குத்தியிடிச்சு மற்றுமுடிச்சு
கொட்டணுமோ அவனுக்குச் சாதம் வடிச்சு
கொல்லேயினிலே நல்லவிதமாய்
குவிந்ததை விருந்திடும் அவன் கை பிடிச்சு

அநுபா: காலதாமதம் ஏனோ இவ் விதம் முன்
காலே நான்பிடிக்கிறேன் கொள் வாய்நீ சம்மதம்
கலந்து பேசினேன் விருந்திடாமலேய
கன்றுபோக மொழிந்திடுதல் மிகுந்த வன்னீதம்

அம்மா! தாயே! என் கண்ணே! கொஞ்சங் கவனித்துப்பார். எனக்குக் கௌரவக் குறைவு

வந்தால் உனக்கில்லையோ என் நண்பனுக்கு விருந்திட்டால் அது உனக்குத்தானே புகழைக் கொடுக்கும்? இன்னார் வீட்டில் சாப்பிட்டேன்; அந்தப் புண்ணியவதி இன்னவித உபசாரத்தோடு அன்னமிட்டாளென்று சொன்னல், அந்தப் பெருமை உன்னைச் சேர்ந்ததல்லவா? இனி ஒருவரையேனும் நான் விருந்துக்கு அழைத்துக் கொண்டு வருவதில்லை. இன்று மாத்திரம் செய். உன்பாதாரவிந்தத்துக்கு நமஸ்காரம்செய்கிறேன். காலதாமதம் செய்யாமல் கருணை வைத்துச் சம் மதப்படுவாய் தாயே! (காலில் கும்பிட்டு விழ)

கர்வி: போகுது எழுந்திரும்.

அநுபா: இன்னுமொரு சமாச்சாரம்.

கர்வி: இன்னுமென்னவிருக்கிறது. வேருெவனுக்கும் விருந்திடச் சொல்லப்போகிறீரோ?

அநுபா: இல்லையம்மா! தாயே! கொஞ்சம் பொறுமையாய்க் கேள். இதுவரை நமது வீட்டில் நடக்கிற சேதி அண்டையயலாருக்குத் தெரியாது; அதை பகீரங்கப்படுத்திவிடாதே யென்று கேட்டுக்கொள்கிறேன்.

கர்வி: அதாவது என்ன?

அநுபா: இன்னும் விளங்கவில்லையோ?

கர்வி: சொல்லிக் கொளுத்தும் சீக்கிரத்தில்.

அநுபா: அதாவது என்னை இதுவரை புருஷனென்பதாக மதியாமல் மானங்கெட்ட மடப்பயலே

வெட்கங்கெட்ட வெறிநாய்ப்பயலே! அறிவு கெட்ட அசட்டுப்பயலே! கடை பொறுக்கிக் கசட்டுப் பயலே, என்று திட்டி, கன்னத்திலேயிடித்து, தலைமயிர் பற்றியிழுத்து, இடுப்பிலே உதைத்து, முகத்திலே காரித்துப்பிப் பழைய விளக்குமாற்றை யெடுத்தடிப்பாயே அந்த நித்யக் கட்டளையை இன்றுமாத்திரம் நிறுத்தி வைத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், — என் மானங்கெட்டுப் போமென்ற விசனம் எனக்கில்லை, ஒருவேளை புருஷனை மதியாமல் நடக்கிற உன்னை எங்கே விபசாரியென்று சொல்லிவிடுவார்களோ என்ற விசனந்தான். அது விஷயத்துக்கு அனுக்கிரந்தானே?

கர்வி: இன்று ஒருநாள் மாத்திரந்தானே? நாளைக்கும் அப்படிச் சொல்லுவீரோ?

அநுபா: இல்லையம்மா பரதேவதா! இன்று ஒருநாள் மாத்திரந்தான்.

கர்வி: நல்லது அப்படியே, இன்று உத்தமிபோல் நடந்து கொள்கிறேன்.

அநுபா: அத்தோடு இன்னொரு சமாச்சாரமல்லவா?

கர்வி: அது என்ன?

அநுபா: ஒன்றுமில்லை, நாள்தோறும் உன்னை அம்மா, தாயே, என்றல்லவோ கூப்பிட்டு வந்தேன், அதன்படி இன்று கூப்பிட்டால், என் நண்பன் அவமரியாதை செய்வான்.

கர்வி: அதற்காக என்னவிதமாகக் கூப்பிடப் போகிறீர்?

அநுபா: வேறு அப்படியிப்படியில்லை. அண்டைவீடு அடுத்தவீடுகளில், தங்கள் பெண்டாட்டிமாரை எப்படிக் கூப்பிடுகிருர்களோ அப்படித்தான்

கர்வி: அடுத்தவீடு அண்டைவீடுகளில் எப்படிக் கூப் பிடுகிருர்கள்?

அநுபா: அடியே என்ருவது பெண்டாட்டியினது பெயரைச் சொல்லியாவது கூப்பிடுவார்கள்.

கர்வி: நீர் அடியென்று கூப்பிடப் போகிறீரோ? என் பெயரைச் சொல்லிக் கூப்பிடப்போகிறீரோ?

அநுபா: இருவகையில் எப்படிக் கூப்பிட்டாலென்ன?

கர்வி: அது முடியாது ஒருவகையால்தான் கூப்பிட வேணும்.

அநுபா: நல்லது அப்படியே கூப்பிடுகிறேன்.

கர்வி: எப்படி கூப்பிடுவீர்?

அநுபா: உன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறேன்.

கர்வி: ஜாக்கிரதை இப்பொழுது சொல்லியதை மறந்து அடியேயென்று கூப்பிடுவீராஞல் கொஞ்ச சமாவது தயை தாட்சண்யம் பாராது என் சொரூ பத்தைக் காட்டிவிடுவேன்.

அநுபா: அதோடு இன்னுமொரு சமாச்சாரம்.

கர்வி: இன்னும் சமாச்சாரம் ஒழியவில்லையோ?

அநுபா: அதாவது என்னவென்ருல்; சும்மா நிஜமா யில்லை. உன்னையதிகாரம் பண்ணுவதுபோல் மிரட்டுவேன் அபொழுதுதான் புருஷனுக்குள் பெண்டாட்டி கட்டுப்பட்டு நடக்கிருள். இவள் மகா பதிவிரதை என்று உனக்கு நல்ல பெருமையும், எனக்கு பெண்டாட்டியை யடக்கியாளும் வல்லமைசாலியென்ற பெருமையும் கிடைக்கும். இல்லாவிட்டால் இருவருக்கும் அவக்கியாதிதான் கிடைக்கும். தெரிய வந்ததா?

கர்வி: என்னை எப்படி அதிகாரம் செய்யப் போகிறீர்? அதனை இங்கேயே சொல்லிவிடும்.

அநுபா: வேறென்ன அதிகாரம் செய்யப் போகிறேன். இந்த இலையை அப்படிப் போடு, அந்த தீர்த்தச் சொம்பை இப்படி வை, இப்படித்தாஞ பதார்த்த பாகம் செய்வது? அதற்கு உப்பில்லை இதற்குப் புளியில்லை என்று சும்மாவாவது மிரட்டுவேன். அப்போது நீ அடங்கி ஒடுங்கி நடந்து கொள்ள வேண்டும்.

கர்வி: அப்படியா! அது எத்தனை முறை அதிகாரம் செய்யப் போகிறீர்?

அநுபா: இத்தனை முறை என்ற கணக்கென்ன? என் நண்பன் விருந்துண்டு போகும்வரை.

கர்வி: அது முடியாது இத்தனை முறை என்ற கணக்கு ஏற்பட வேண்டும். இல்லாவிட்டால் இப்பொழுது பேசிய யாவும் சம்மதமில்லை.

அநுபா : தாயே! கோபித்துக் கொள்ளாதே, நீதானே இத்தனை முறை அதிகாரஞ் செய்யென்று கட்டளை கொடு.

கர்வி : நாலுமுறை நீர் அதிகாரம் செய்தால் போது மானது ஐந்தாம்முறை நீர் அதிகாரம்செய்ய ஆரம் பித்திரோ? வேதாளம கட்டவிழ்த்துக் கொண்டு மறுமுறை முருங்க மரமேறிக் கொள்ளும்; ஜாக் கிரதை நான் சமையலுக்கு ஆரம்பஞ் செய்யப் போகிறேன். நீர் ஸ்நானஞ்செய்துவிட்டு உமது நண்பரைக் கூட்டி வந்து சேரும்.

அநுபா : அப்படியே போய் வருகிறேன் தாயே.

[அநுபவானந்தன் போகிருன்]

காட்சி முடிவு

காட்சி : 4

இடம் : வீடு

இடம் : முற்பகல்

பாத்திரங்கள் : அநுபவானந்தன் ஆகமானந்தன், கெர்வி

[அநுபவானந்தன் ஆகமானந்தனை வீட்டிற்கு கூப் பிட்டு வருகிருன்]

அநுபா : அடியே கர்வி! இவரைக் கூட்டி வந்து எவ் வளவு நேரமாயிற்று? இன்னும் சமையலாக

வில்லையோ? என்ன மூதேவித்தனம்? சும்மா அடுப்பங்கரையில் புகுந்து கொண்டிருக்கிறாய் செம்பிலே ஜலங்கொண்டு வந்துகொடு.

கர்வி: (தனக்குள்) நல்லது, நாலு முறைக்கு ஒரு முறை அதிகாரம் தீர்ந்துவிட்டது. இன்னும் மூன்று முறை அதிகாரந்தானே பார்த்துக் கொள் வோம். (வெளிப்படையாக) நாதா! இதோ யாவும் சித்தமாயிற்று. இதோ ஜலம் வைத்திருக் கிறேன். காலைக் கழுவிக் கொண்டு நடுக்கூடத்தி லுட்காரச் செய்யுங்கள். இலைபோட்டு வட்டிக்கச் செய்கிறேன்.

[அநுபவானந்தன் தன் நண்பனோடு கால் கழுவி வந்து நடுகூடத்திலுட்காருகிறான். கர்வி இலை போட்டு சாதம் வட்டிக்கிறாள்]

அநுபா: கர்வி! இப்படித்தான் வணக்க ஒடுக்கமில் லாமல், வட்டிப்பதோ எவ்வளவோ பதுவுசாய் இடது கையில் பதார்த்தத் தட்டை யேந்தி யெடுத்து வை. நாட்டுப் புறத்து மடச் சிறுக்கிக்கு எத்தனை நாள் சொல்லியழுவது? போதும் போதும் நீ வட்டித்த ஒழுங்கு, அன்னந்தோண்டிக் கொண்டு வா.

கர்வி: (தனக்குள்) இரண்டா முறையுந் தீர்ந்தது. இன்னும் இரண்டு முறைதானே அப்பால் பார்ப் போம் இவர் அதிகார முறைகளை வெளிப்படை யாக) நாதா! இதோ அன்னந் தோண்டிக் கொண்டு வந்து விட்டேன். உங்களையல்லாமல் வேறு யார் எனக்கிருக்கிறார்கள். நீங்கள் காலாலே

காட்டியதை என் தலையாலே செய்து நிறை வேற்றுவதுதானே எனது கடமை. தெரிந்தும் தெரியாமலும் அடியாள் பிழை செய்திருந் தாலும், தேவரீர் க்ஷமித்துக் கொள்ளப் பிரார்த்திக் கிறேன்.

அநுபா: இப்படித்தானு? உருளைக் கிழங்கு வறுவல் பாகம் செய்வது? உங்களப்பன் வீட்டில் வருஷத் திற்கொரு முறையேனும் வறுவல் பாகம் செய் திருந்தாலல்லவோ உனக்குப் பாகஞ் செய்யத் தெரியும்? உங்களம்மாவிடத்தில் உருளைக்கிழங்கு என்று சொன்னுல், அதனையொரு பெரிய ஊரென்று நினைத்துக் கொள்வாள் அப்படியிருக்க, உன்னைக் கோபித்துக் கொள்வதில் என்ன பிர யோசனம்? இந்தச் சாற்றை ஊற்றிவிட்டு அப் புறம் தொலைந்து போ.

கர்வி: (தனக்குள்) மூன்ருவது முறையுமாகிவிட்டது. இன்னுமொரு முறைதானே அப்பால் இவர் ஜம்பம் என்ன செல்லப் போகிறது அப்பால் பார்த்துக் கொள்வோம். (வெளிப்படையாக) நாதா! என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? இந்த உருளைக்கிழங்கு ஒருவிதமாக இருந்தாலும், இந்த பச்சடி திவ்யமாயிருக்கும் உபயோகித்துப் பாருங்கள்.

அநுபா: (அதிகாரத் தோரணையுடன்) நாய் தின்னுமா? நீ செய்யும் பதார்த்தங்களை என்னவோ என் தலை விதி உன்னைத் தாலி கட்டிக் கொள்ளும்படி பிரம்மன் புள்ளி போட்டான், உரலுக்குள்ளகப் பட்டு உலக்கைக்கு அஞ்சினுல் தீருமா? போடுவ

தைப்போடு ஒரு ஆள் விருந்துக்கு வந்த நாளி லாவதுநல்ல ருசியான மணத்தோடு பாகஞ் செய்ய வேண்டாமா? உன்னையும் ஒரு பெண் ணைப் படைத்தானே, அந்தக் கடவுளைச் சொல்ல வேண்டும், ஒழி! ஒழி! என் கண்ணில் விழி யாதே?

கர்வி: (தனக்குள்) நான்கு முறையுந் தீர்ந்தது. இனி இவர் அதிகாரஞ் செய்வதைப் பார்க்கிறேன்? (உள்ளே போக)

அநுபா: எங்கேயிவள்? எங்கே ஒழிந்தாள்? இலைகளை பார்த்து இன்ன பதார்த்தமில்லையென்று வட்டிக்க வேண்டாமா? அடியே கர்வி!

(அநுபவானந்தன் ஐந்தாவது முறை அடியே யென்று கூப்பிட்டவுடன் கர்வி சட்டியை யெடுத்து வந்து தன் புருஷன் தலையில் போட் டுடைத்தாள். அச்சட்டியுடைந்து அதன் விளிம்பு கழுத்தில் மாலைபோல் மாட்டிக் கொள்ள ஆகமானந்தன் பார்த்து)

ஆகமா: பாட்டு

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

காணேனே நானோர் நாளிலும்
கழுத்தினி லாரம் போலே
இருக்குது நேருங் காலே (கா)

அநுபல்லவி

என் பெண்டாட்டி கொஞ்சமும்
இவளுக் கிணையாக மாட்டாள்
இணையானால் சட்டிகளை
எடுத்து வீணாக்க மாட்டாள் (கா)

சரணம்

வீணாயுடைந்த சட்டி வேணதுண்டென் தலையில்
பூணாரம் பூண்டதொரு புதுமைபோ லின்னியில் (கா)

ஆகா! நன்றாயிருக்கிறது. சட்டியினுடைய மத்திய பாகங்களெல்லாம் உடைபட்டு விளிம்புகள் மாத்திரம் சேதப்படாமல் ஆரம்போல் எனது நண்பன் கழுத்தில் விழும்படி செய்த இவனுடைய பெண்டாட்டியினுடைய கைத்திறமையே திறமை. இவ்வளவு கைத்திறமை எவளுக்கும் கிடையாது. அப்படியானால் என் பெண்டாட்டி யெவ்வளவோ சட்டிகளை என் மீது போட்டுடைத்திருக்கிறாள். அவைகளிலொன்றாவது இப்படி ஆரம்போல் விழுந்ததில்லை. நல்லது நாமுமிங்கு நின்றால், நமக் கொன்று போட்டு விடுவாள். ஆகையால் அவள் போடு முன்னாலே நாமே யோடித் தப்பித்துக் கொள்வோம். இந்த மரியாதை நமது நண்பன் அநுபவானந்தனுக்கே இருக்கட்டும்.

(ஆகமானந்தன் சொல்லாமல் போகிறான். அநுபவானந்தன் வருத்தமுற்று மனமுடைந்து)

அநுபா: நாம் எத்தனை நாள் இந்த அடங்காப்பிடாரியிடம் அகப்பட்டுத் தவிப்பது? கொஞ்சமாவது

மான வீனமில்லாத மடையனுனேமே? ஊராரெல்லோரும் நகைக்கிருர்கள். புருஷனென்ற சொல்லுக்காவது கொஞ்ச மரியாதையில்லையா?

வெண்பா

பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாருக விருப்பாளே யாமானல்
கூருமற் சன்யாசங்கொள்

என்று சாஸ்திரம் சொல்லுகிறதே அதையுணர்ந்த நாம் சந்நியாசியாகி தேசசஞ்சாரம் செய்யாமலிருப்பது அறிவீனம். ஆகையால் இதோ காலணுவுக்குக் காவிக்கல் வாங்கி என் வேஷ்டிக்குச் சாய மூட்டிப் பரதேசியாகப் போகிறேன்.

(போகிருன்)

காட்சி முடிவு

காட்சி : 5

இடம்: அநுசூயா ஆச்ரமம்

காலம் : காலை

பாத்திரங்கள்: அநுபவானந்தன், அநுசூயா, கெர்வி.

(அநுபவானந்தன் தேசயாத்திரை போய் திரும்பி வந்து தன் மனைவி கர்வி, அநுசூயா தேவியால் நல்லொழுக்க முற்றிருப்பதாயறிந்து அநுசூயாவிடம் வருகிருன்)

அநுபா: நான் தேசயாத்திரை செய்யப் போன நிமித்தம் என் மனைவி அநுசூயாவிடம் நல்லொழுக்கம் கற்றுத் தேறியிருப்பதாகக் கேள்விப் பட்டேன். இனித் தாமதிக்காமல் அவளை யழைத்துக் கொண்டு போகிறேன். (அநுசூயாவைக் கண்டு) அம்மா! நமஸ்கரிக்கிறேன்.

அநு: மங்கள முண்டாகட்டும்! அநுபவானந்தரே! யாது சமாச்சாரம்?

அநுபா: தாயே! என் மனைவி தங்களால் கிருதார்த்த மானாள். இனி நான் இல்லற வாழ்க்கையை ஒழுங்குடன் நடத்தி முடிப்பேனாகையால் என் மனைவியை என்னோடு அனுப்பி வைக்கப் பிரார்த் திக்கிறேன்.

அநு: அப்படியே, அம்மா கர்வி வா, உனது கணவன் வந்திருக்கிறார். அவரோடு சென்று பதிவிரதா தர்மத்திற்குப் பழுதின்றியே நடந்து இல்வாழ்க்கையை நேர்மையாகச் செய்து முடிக் கப்பெரும் பயனெய்துமாக.

கர்வி: நமஸ்காரமம்மா போய் வருகிறேன்.

அநு: கல்யாண் போய் வாருங்கள்

(கர்வியும் அநுபவானந்தரும் விடைபெற்று போகிறார் கள்.)

காட்சி முடிவு

எமது வெளியீடுகள்

சங்கரதாஸ் சுவாமிகளின்

அபிமன்யு சுந்தரி	—	நாடகம்
சுலோசனசதி	—	,,
சதி அநுசூயா	—	,,

அவ்வை டி. கே. சண்முகம்

நாடகக் கலை

சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்
மீனாட்சி கலா நிலயம்
சீனிவாசப் பெருமாள் 3 வது தெரு,
இராயப்பேட்டை :: சென்னை-14.

மூவேந்தர் அச்சகம், சென்னை-14.